மலர் – 4 இதழ் – 04



தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

தனிச்சுற்றுக்கு மட்டும்

இலக்கியம், சமயம், பண்பாட்டு ஆய்விதழ்

அக்டோபர் 2025

ஆசிரியர்: முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

சமணர்களுக்குரிய தீபாவளி
முனைவர் தேமொழி

குடைவரைகள் சூழ் மதுரை
சி. அபிஷேக்

Vallalar – First Thirumurai
Akshayan

பேரருளாளர் முனைவர் இராபர்ட் கால்டுவெல்
பேரருளாளர் முனைவர். J இரவிக்குமார் ஸ்ரீஃபன் G

மீனாட்சிக் கோயிலில் கண்டதும் கற்றதும்
இரா. கலைக்கோவன்

வள்ளுவர் குறள் - ஆத்திசூடி முறையில்
முனைவர் மு. முத்துவேலு

Valluvar's guide to mindfulness
Dr. C. Rajeswari



இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

மலர்-4 இதழ்-4

அக்டோபர் - 2025

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர். திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர். சந்திரிகா சுப்பிரமணியன்

உதவி ஆசிரியர்கள்
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
C. சந்திர விமல் M.A., B.Ed

Thamizhanangu

Printed & Published by
E. Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madurai,
Tamil Nadu 625 018.
Ph: +91 7871123226, +91 7010997639

கட்டுரைகள் அனுப்ப..
thamizhanangu1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அந்த கருத்துக்களுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

- இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1.	சமணர்களுக்குரிய தீபாவளி - முனைவர் தேமொழி	1
2.	தமிழ் மாணவர் போப்பையர் - பேரா.முனைவர் மோ.மைக்கேல் பாரடே	7
3.	Vallalar – First Thirumurai - Akshayan	16
4.	தீபாவளியும் இறந்தோர் வழிபாடும் - முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி	24
5.	Dravidian Ethos, and the Ancient Conflict - Bp Dr J Ravikumar Stephen G	32
6.	காரைக்கால் அம்மையார் – மு. பழநிச்சாமி	35
7.	குடைவரைகள் சூழ் மதுரை - சி. அபிஷேக்	44
8.	தொழிலில் வணிகத்தில் சிறந்த தமிழ்நாடு ! - டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்	55
9.	Valluvar's guide to mindfulness - Dr. C. Rajeswari	59
10.	மீனாட்சிக் கோயிலில் கண்டதும் கற்றதும் - இரா. கலைக்கோவன்	62
11.	தம்பி, ஒரு கதை உண்டு - அறிஞர் அண்ணா	65
12.	தாளை வணங்காத் தலை - முனைவர் சிவ இளங்கோ	66
13.	Gene Notes in Vengai Anchor - Tamilmagan	67
14.	அபினிப் போர்கள் - டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்	75
15.	எளிய முறையில் யாப்பறிவோம்! - நெருப்பலையார். இராம இளங்கோவன்	78
16.	தனநந்தரும், சம்ஸ்கிருதத்தின் விடியலும் - பேரருளாளர் முனைவர். J இரவிக்குமார் ஸ்தீஃபன் G.	82
17.	ஆங்கிலேயர்கள் காலத்தில்நெல் சாகுபடி - வி. குணசேகரன்	84
18.	பேரருளாளர் முனைவர் இராபர்ட் கால்டுவெல் - பேரருளாளர் முனைவர். J இரவிக்குமார் ஸ்தீஃபன் G	90
19.	வள்ளுவர் குறள் - ஆத்திசூடி முறையில் - முனைவர் மு. முத்துவேலு	91
20.	வள்ளுவர் கற்பிக்கும் அறிவின் பெருமை (நூலாய்வு) - டாக்டர் புதேரி தானப்பன்	94

இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

சமணர்களுக்குரிய தீபாவளி

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

"தீமையை அழித்து நன்மை வெற்றி கொண்ட நாளை இந்தியர்கள் தீபாவளி பண்டிகையாக விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள்" என்ற ஒரு புரிதல் பன்னாட்டு அரங்கில், பரவலாக உள்ளது. உண்மையில் தீபாவளி சமணர்களின் பண்டிகை. தீபாவளி என்பது வாழ்ந்து மறைந்த சமண தீர்த்தங்கரர் மகாவீரரின் மறைவு நாளையொட்டி அவர் அளித்த அறிவொளியைப் பரப்பும் நாளாகச் சமணர்கள் தொன்று தொட்டுக் கொண்டாடுகின்றனர் என்ற 'வரலாற்று அடிப்படை' உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். சரவிளக்குகளும், கார்கால மாதமும், முன்னோர் வழிபாடு ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டது இந்த விளக்கேற்றும் பண்டிகை.

வாழ்வாங்கு வாழ்ந்து, மக்களின் நலனுக்காக அவர்களை நல்வழிப்படுத்தத் தனது இறுதிநாள் வரை அறிவுரைகள் கூறிய சமண சமயத்தின் 24ஆவது மற்றும் கடைசி தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் வீடுபேறு பெற்ற தினத்தை விளக்கேற்றி வைத்து, அவரது அறிவுரையின் ஒளி தொடர்ந்து மக்களின் அறியாமை இருளை நீக்கி அவர்களை வழிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் சமணர்கள் வழிபடு நாளாகக் கருதிய நாள்தான் தீபாவளி நன்னாள் என்பது இவர்கள் முடிவு (சமணமும் தமிழும், பக்கம்: 79-80, கல்வெட்டாராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி).

முற்றும் துறந்த துறவியான தீர்த்தங்கரர் மகாவீரர் அறவுரை ஆற்றிட பல இடங்களுக்கு எழுந்தருளுவார். இதை 'ஸ்ரீ விஹாரம்' என்பர். சமண தீர்த்தங்கரர்கள் முற்றுமுணர்ந்த நிலையை அடைந்த பிறகு அவர்கள் எல்லாவுயிர்களுக்கும் அற வாழ்க்கையைப் பற்றிப் போதிக்கும் இடம் சமவசரணம் எனப்படும். 'சமவசரணம்' என்ற அறவுரை நிலையங்களில் மகாவீரர் எழுந்தருளி அறவுரை ஆற்றி மக்களை வழி நடத்துவார். அதன் மையப்பகுதியில் அரியணை, முக்குடை முதலான சிறப்புகளோடு கூடிய இடத்தில் இருந்து அறவுரை வழங்குவார். மகாவீரர் தன் இறுதி நாளில் (அக்டோபர் 15, 527 பொ.ஆ.மு) பாவாபுரி நகரின் சமவசரணமத்தில் அறவுரை ஆற்றினார்.

தனது ஆயுள் விரைவில் முடியும் என்று அறிந்து அறவுரை நிலையத்தை விட்டு அகன்றார். பாவாபுரியில் மிகவும் அழகான பெரிய தாமரைக் குளம் ஒன்று இருக்கின்றது (அத் தாமரைக் குளம் இன்றும் உள்ளது). அக்குளத்தின் நடுவில் உள்ள அகன்ற கற்பாறையின் மீது நின்ற நிலையில் மகாவீரர் இரு நாட்கள் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார் (தற்போது அப் பாறையின் மீது ஆலயத்தை

உருவாக்கி மகாவீரரின் திருவடிகளை வைத்து வழிபாடு நடை பெறுகிறது). மன்னன் மற்றும் மக்கள் பகற்பொழுதில் வந்து வணங்கி வழிபட்டுச் சென்றனர். மகாவீரர் வாழ்க்கையின் இறுதிநாள் பின்னிரவில் அவருடைய ஆயுள் முடிவுற்ற இடம் பாவாபுரி தாமரைக்குளக் கற்பாறை. அவர் அன்று ஆன்ம விடுதலை பெற்று 'பரிநிர்வாணம்' என்ற பிறவாநிலையை எய்தினார் என்பது சமண நூல்கள் தரும் செய்தி. மறுநாள் காலையில் மக்கள் வழக்கமாக மகாவீரரை வழிபட வந்தபோது அவர் பரிநிர்வாணம் அடைந்துவிட்டதை அறிந்த மக்கள் எளிதில் பெற இயலா ஆன்ம விடுதலை என்னும் பிறவாநிலையை எய்திய மகாவீரர் உலக உயிர்களுக்கு அறிவொளியை வழங்கியதை எண்ணி அவர் நினைவாக அனைவருடைய இல்லங்களிலும் வரிசையாகப் பல விளக்குகளை ஏற்றி மகாவீரரை தம் மனதில் இருத்தி வழிபட்டனர். இதுவே நாடெங்கும் தீபாவளி விழாவாக இந்நாள்வரை ஒளிர்கிறது. மகாவீரர் மறைந்தாலும், அவரது ஆன்மிக ஞானம் உலகின் இருளை நீக்கி ஒளியேற்றுகிறது என்பதை விளக்குவதற்காகத் தீபங்கள் ஏற்றப்படுகின்றன. மகாவீரர் மறைந்தது அதிகாலை என்பதால் அந்நேரத்தில் வழிபடுதல் மரபு என்பது சமணம் கூறும் வரலாறு. ஆகவே தீபாவளி வழக்கில் வந்தது மகாவீரர் மறைந்த பொ. ஆ. மு. 600 இல்.

மகாவீரர் பரிநிர்வாணம் அடைந்த ஆண்டிலிருந்தே சமணர்களிடம் தீபாவளிப் பண்டிகை ஓர் அறிவொளி நாளாக விளக்கேற்றும் முறை வழக்கத்தில் இருப்பதாகக் கூறப்பட்டாலும், 'தீபாவளி' என்ற சொல் முதன் முதலில் எழுத்து வடிவில் கிடைப்பது சமண நூலான ஹரிவம்ச புராணத்தில்தான். சற்றொப்ப 12 நூற்றாண்டுகளுக்கு முன்னர், கிபி 783-இல் சமஸ்கிருத மொழியில் சமண சமய திகம்பர ஆச்சாரியர் ஜினசேனர் *(Acharya Jinasena)* இயற்றிய நூல் 'ஹரிவம்ச புராணம்'*(Harivamsa Purana)* ஆகும்.

ததஸ்துஹ் லோகஹ் ப்ரதிவர்ஷம்-ஆதரத்
ப்ரஸித்த-தீபலிகய-ஆத்ர பரதே .
ஸமுத்யதஹ் பூஜயிதும் ஜினேஷ்வரம்
ஜினேந்த்ர-நிர்வாண விபுதி-பக்திபக்

என்ற வரிகளில் மகாவீரர் மறைந்த நாளில் பாவாபுரியில் 'திபாலிகாயா' *(dipalikaya)* என விளக்குகள் ஏற்றப்பட்டதாக ஆச்சாரியர் ஜினசேனர் என்பவர் தான் எழுதிய ஹரிவம்ச புராணம் நூலில் குறிப்பிடுகிறார். இந்த நூலில்தான் சமணர்கள் தீபாவளி கொண்டாடியதாக 'தீவாளி' அல்லது 'தீபாவளி' என்ற சொல் முதன் முதலாக இடம் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தீபாவளி என்ற குறிப்பு முதல் இலக்கியத் தடயமாகச் சமண சமயத்திற்கு எட்டாம் நூற்றாண்டிலேயே கிடைக்கிறது. தீபம் = விளக்கு; ஆவலி = வரிசை; தீப + ஆவலி = தீபாவலி; வரிசையாக ஒளிவிளக்கேற்றும் தீபாவலி விழா பின்னர் தீபாவளி என்று திரிந்தது என்று விளக்கப்படுகிறது. வைதீகர் கொண்டாடும் தீபாவளி பண்டிகைக்குக் கிடைக்கும் சான்றுகள் மிகப் பிற்காலத்தவை. அதன் தீபாவளி கொண்டாடப் படுவதற்கான புரணக்கதைகளும் இயற்கைக்கு மாறான புனையப்பட்ட கதைகள்.

சமண நாட்காட்டியின்படி, தீபாவளி அந்த ஆண்டின் கடைசி நாளாகக் கருதப்படுகிறது. இதற்கு அடுத்த நாள், சமணப் புத்தாண்டு தொடங்குகிறது. (மகாவீரர் ஆண்டு) மகாவீரர் நிர்வாணம் அடைந்த நாளில், அவரது தலைமை சீடரான கணாதர் கௌதம சுவாமிக்கு, முழு ஞானம் (கேவலஞானம்) கிடைத்ததும் தீபாவளியின்போது நினைவுகூரப்படுகிறது.

பொதுவாக சமணர் எனும் சொல் தமிழ்ச் சமணர்களைக் குறிக்கும். ஜைனம், ஆருகத மதம், அனேகாந்த மதம், ஸ்யாத்வாத மதம், நிகண்ட மதம் எனப் பலவாறாகச் சமணம் குறிப்பிடப் படுகிறது (சமணமும் தமிழும், பக்கம்: 1- , கல்வெட்டாராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி) தமிழகத்தில் வாழும் மார்வாரிகள், குஜராத்திகள் இன்றைய நாளிலும் தீபாவளி கொண்டாடுவதும், அந்நாளைப் புதுக்கணக்கு துவக்கும் நாளாகக் கடைப்பிடிப்பதும் தீபாவளியின் சமண சமயப் பின்னணியைக் காட்டி நிற்கின்றது. சமண சமயத்தார் பலவிதக் காரணங்களால் (விரும்பியோ/விரும்பாமலோ) இந்து மதத்தைத் தழுவ நேர்ந்த பொழுது, தங்களது மகாவீரர் மறைந்த நாளின் நினைவைப் போற்றும் வகையில் விளக்குகளை ஏற்றிக் கொண்டாடும் தீபாவளி பழக்கத்தைக் கைவிடாது தொடர்ந்தனர் (தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்கம்: 33-34, டாக்டர் மா.இராசமாணிக்கனார்). பொதுவாக தமிழ்ச் சமணர் அனைவரும் திகம்பர சமணத்தைப் பின்பற்றுபவர்.

சமணர்களின் தீபாவளி கடைப்பிடிக்கப்படும் முறைகள் வைதீகர் கொண்டாடும் தீபாவளி நடைமுறை வழக்கத்திலிருந்து மாறுபட்டது. சமணர்களின் மிக முக்கியமான கொள்கையாக உயிர்களைத் துன்புறுத்தாமை (அகிம்சை) என்பதைக் கடைப்பிடிப்பதன் காரணமாக, பட்டாசுகள் வெடிப்பதால் பல உயிரினங்கள் துன்பத்திற்கு உள்ளாகும் என்பதால் தீபாவளியன்று அவர்கள் பட்டாசுகளை வெடிப்பதில்லை. மகாவீரரின் துறவற வாழ்க்கையை நினைவுகூரும் விதமாக சமணர்களில் சிலர் தீபாவளியன்று நோன்பு மேற்கொள்வதுண்டு.

பல சமணர்களில் சிலர் மகாவீரர் முக்தி பெற்ற பீகார் மாநிலத்திலுள்ள பாவாபுரிக்கு புனிதப்பயணம் மேற்கொண்டு அங்கு வழிபாடுகளில் பங்கேற்கின்றனர். அடிப்படை நோக்கமாக, மகாவீரரின் ஆன்மிக வெற்றியைக் கொண்டாடும் ஒரு புனிதமான, அமைதியான பண்டிகையாக ஆரவாரமின்றித் தீபாவளியைச் சமணர்கள் கொண்டாடுவர். வெவ்வேறு பகுதியில் வாழும் சமணர்களிடமும், சமண சமயப் பிரிவுகளிடையேயும், பண்டிகை வழக்கங்களில் வெவ்வேறு பாரம்பரிய முறைகளின் காரணமாகச் சிற்சில வேறுபாடுகளும் உண்டு.

சமணக் கோவில்களில் மகாவீரருக்கு, நிர்வாண லட்டு எனப்படும் ஓர் இனிப்பு வகை பிரசாதமாகப் படைக்கப்படுகிறது. இது தமிழ்ச் சமணர்களுக்கு வடக்கிலிருந்து இங்கு வந்தவர்களிடமிருந்து வந்த புது வரவு. மகாவீரர் முக்தியடைந்த நாளில் சமணர்கள் ஆலயத்தில் (ஜினாலயம்) மாவிளக்கேற்றி வழிபாடு இயற்றுவர். இதற்கென சிறப்பாகப் பச்சரிசியைக் கழுவி பதமாக உலர்த்தி இடித்து அந்த மாவைக்கொண்டு அகல்போன்ற விளக்கைச் செய்து, இதற்கென தனியே நெய்யைச் சேகரித்து வைக்கப்பட்ட தூய நெய்விட்டு விளக்கேற்றுவார். தற்போது மாவிளக்கு மற்றும் நிர்வாண லட்டு ஆகிய இரண்டும் வழிபாட்டில் இடம் பெறுகிறது.

மகாவீரரின் அறிவுரைகளை நினைவுகொள்ளும் விதமாக, வழிபாடுகளிலும், சிறப்புச் சொற்பொழிவுகளிலும் நிகழ்த்தப்படும்.

தமிழ்ச் சமணர்கள் தமிழகத்தின் ஜினாலயங்களில் (ஜினர் ஆலயம்) விடியற்காலையில் வரிசையாக அகல் விளக்குகளை ஏற்றி வழிபடுவர். மகாவீரர் வரலாற்றைப் படிப்பார்கள் (இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் வரலாற்றைக் கூறும் 'ஸ்ரீபுராணம்' எனும் நூலில் உள்ள மகாவீரர் வரலாறு படிக்கப் பெறும்). இதுமட்டுமின்றி சித்தபக்தி, பரிநிர்வாண பக்தி எனும் போற்றிப் பாடல்கள் (தோத்திரங்கள்) ஓதப்படும். பாவாபுரியில் உள்ள தாமரைக் குளம் போன்ற அமைப்பைச் சிறிய அளவில் அமைத்து அதில் மகாவீரர் திருவடிகளை வைத்து சில இடங்களில் வழிபடுவர். தமிழ்ச் சமணர்களும் ஆடவரும் மகளிரும் விரதம் ஏற்பர்.

மகாவீரர் முக்தி பெற்ற நிகழ்வு முதன்மையானது என்றாலும், மற்றும் சில சமண சமூகத்தினர் அவருடைய தலைமைச் சீடரான கௌதம சுவாமி, மகாவீரரின் மறைவுக்குப் பின் ஞானம் பெற்றதையும் முக்கியமாகக் கருதுகின்றனர். சுவேதாம்பர பிரிவு சமணர்கள், மகாவீரரின் இறுதித் தவத்தை நினைவுகூரும் வகையில், தீபாவளிக்கு முந்தைய மூன்று நாட்கள் நோன்பு இருப்பதுண்டு.

சுவேதாம்பர சமணர் ஆலயங்களில் "உத்தரத்யாயன சூத்திரம்" போன்ற புனித நூல்களிலிருந்து சில பகுதிகளைப் படிக்கின்றனர். சுவேதாம்பர பிரிவு ஜைனர்களால் மகாவீரரின் பிறப்பு வரலாற்றைச் சொல்லும் கல்பசூத்திரம் என்ற புனித நூல் இந்த நாட்களில் வாசிக்கப்படுகிறது. மேலும், தீபாவளிக்குப் பிறகு ஐந்தாவது நாளில், ஞானபஞ்சமி ("அறிவின் ஐந்தாவது") என்ற விழாவைக் கொண்டாடி, கோவில்களில் வழிபாடு நடத்துகின்றனர்.

குஜராத் மற்றும் இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் உள்ள பல ஜைன (சமண) வணிகர்களுக்கு, தீபாவளி நிதி ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இவர்கள் புதிய கணக்குப் புத்தகங்களை வாங்கி, சோப்தா பூஜை எனப்படும்

சடங்குடன் தங்கள் வணிக நடவடிக்கைகளைத் தொடங்குவார்கள். சிலர் சதர்மிக் வாத்சல்யா போன்ற சமூக சமையல் நிகழ்வுகளை நடத்தி, அனைவரும் ஒன்றுகூடி உணவைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

கொடை அளிப்பது, பரிவு ஆகியனவற்றுக்குத் தீபாவளி நாளில் முக்கியத்துவம் அளிக்கப் படுவதால் சமூக சேவையாக உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவது, ஆதரவற்ற முதி யவர்களுக்கு உணவளிப்பது (ஆகார தானம்), குழந்தைகளுக்கான கல்விக்கு உதவுவது (ஞான தானம்), நோயுற்றவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் இலவச மருந்துகள் அளிப்பது (ஔஷத தானம்), உயிர் வாழும் உயிரினங்களைக் காப்பது மற்றும் ஆபத்தில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது (அபய தானம்) போன்ற சமூக சேவைகளில் ஈடுபடுவதும் உண்டு. உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் கலைப் போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் சமண சமூகத்தினர் பங்கேற்று, உயிர்களைக் காப்பதற்கான உறுப்பு தானத்தின் தேவையை வலியுறுத்துகிறார்கள். தன்னலமற்ற தொண்டு செய்வதற்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் நேரத்தையும், திறன்களையும் தானாக முன்வந்து செலவிடுவது ஒரு சிறந்த அறச் செயலாகக் கருதப்படுகிறது. இறுதியாக, சமணர்களுக்குத் தீபாவளி என்பது வெளிச்சத்தின் திருவிழா மட்டுமல்ல, ஆன்மாவின் விடுதலைக்கான பாதையை ஒளிரச் செய்யும் ஆன்மிகப் பயணத்தின் ஒரு குறியீடு ஆகும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் சமண சமயத்தில் துவங்கி, இன்று அப்பகுதியில் வாழும் சமணர், இந்துமதத்தின் பல உட்பிரிவினரும், பௌத்தரும், சீக்கியரும் என்று பற்பல சமயப்பின்னணி கொண்டவரும் குளிர் காலத் துவக்கத்தில் விளக்கேற்றிக் கொண்டாட விரும்பும் ஒரு பண்டிகையாகத் தீபாவளி சமய எல்லைகளைக் கடந்த விழாவாக மாறிவிட்டிருக்கிறது. உலகில் பல்வேறு நாடுகளில் குடிபெயர்ந்து வாழும் இந்தியர்களின் பலதலைமுறையினரும் கொண்டாட, இன்று உலகில் பலநாடுகளில் கொண்டாடும் நிலையை எட்டி 'இந்தியப் பண்டிகை என்றால் அது தீபாவளி' என்ற பொதுத்தன்மையையும் அடைந்துவிட்டது.

அருந்தமிழ் வளர்த்த அருளாளர் – X
தரணி போற்றும் தமிழ் மாணவர் போப்பையர்

பேரா.முனைவர் மோ.மைக்கேல் பாரடே,

மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி. தாம்பரம்

மூவா வரம் பெற்ற நம் முத்தமிழுக்கு, காலத்தால் அழியாத அற்புதக் கொடைகளை அருளிச்சென்ற அயலகத்து அருள்தொண்டர்களின் பணிகளையும் பங்களிப்புகளையும் இக்கட்டுரைத் தொடரில் திங்கள் தோறும் பார்த்துவருகிறோம். அவ்வகையில், இக்கட்டுரைத்தொடரின் இந்தப் பகுதியில் நம் ஆய்வுக்குரியவராக நாம் எடுத்துக்கொள்பவரைத் தமிழிலக்கிய - மொழி வரலாறு உணர்ந்த எவரும் நன்கறிவர். அண்மைக்காலத்தில் ஒருசிலர் காழ்ப்புணர்வோடு இப்பெருமகனை விமர்சிக்கத்துணிந்தபோதிலும், பிற அருளாளரினும் தமிழரின் பாசத்தையும் மதிப்பையும் பேரளவில் பெற்றவராக இவர் ஆய்வாளர்களால் மதிக்கப்படுகிறார். இத்தகு பெருமகனை - பேரறிவாளரை இக்கட்டுரைத் தலைப்பில் ‘தமிழ் மாணவர்’ என்று குறித்தபோதே, வாசகர்களில் சிலரேனும் இது யாரைக்குறிக்கிறது என ஊகித்திருக்கக் கூடும். ஏனெனில், இக்கட்டுரையில் நமது சிந்தனைக்குரிய இச்சான்றோராகிய டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் சொன்ன வாசகம் பலரும் அறிந்த ஒன்றாகும். ‘நான் இவ்வுலகை விட்டு மறையும்போது என் கல்லறையில் ‘இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்’ என்ற வாசகம் பொறிக்கப்பட வேண்டும்’ எனத் தம் விழைவைத் தெரிவித்தவர் அவர். அது மட்டுமா? வேறு இருவிழைவுகளையும் தம் மறைவு தொடர்பாகவே அவர் கூறியதாகக் கூறப்படுகிறது. ‘என் கல்லறையைக் கட்டுவதற்கு ஆகும் செலவில், ஒருபகுதியாவது தமிழ் மக்களிடமிருந்து பெறப்பட வேண்டும்.

மேலும், கல்லறையில் என்னைப்புதைக்கும்போது, என் உடலின்மேல் நான் மொழிபெயர்த்த திருக்குறள், திருவாசகம் முதலிய தமிழ் நூல்கள் வைக்கப்பட வேண்டும்’ என்றும் கூறினாராம். போப்பையரின் மற்ற இரு விருப்பங்கள் நிறைவேறியதோ இல்லையோ தெரியவில்லை; ஆனால், சென்னை பச்சையப்பன் கல்லூரி மேனாள் பேராசிரியர் தமிழறிஞர் செல்வக் கேசவராயமுதலியார் போப்பையரின் கல்லறைக் கட்டுமானச் செலவுக்காக ஒரு பகுதி தமிழர்களிடம் நிதிதிரட்டி இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்ததாகச் சொல்லப்படுகிறது.

‘சாம் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும்; என்றன் சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும்’ என்ற தமிழ்க் கவிஞனின் வேட்கையை அல்லவா போப்பையரின் இறுதி விழைவுகள் எதிரொலிக்கின்றன?

ஜி. யூ. போப் ஐயர்

42 ஆண்டுகள் தமிழகத்தில் தளராத தமிழ்த்தொண்டாற்றிய சான்றோரின் பூதஉடல் இங்கிலாந்து நாட்டில் ஜெரிக்கோ சென்ட்ரல் ஆக்ஸ்போர்டு பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தம்மைத்தமிழ் மாணவனாகவே கடைசிவரை அழைத்துக்கொள்ள விரும்பிய தமிழாசானைப் பற்றியும் அவரது தமிழ்ப்பங்களிப்புகள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

I பிறப்பும் வாழ்வும்

போப்பையரின் பெற்றோர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களே. தந்தையர் ஜான்போப், தாயார் கேதரின் யுக்ளோ. அவர்கள் வேலை நிமித்தமாகக் கனடாவுக்குப் போயிருந்தபோது, அங்குள்ள பிரின்ஸ் எட்வர்ட்தீவில் பிறந்தார் ஜி.யு.போப், 1820ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று. அவருக்கு 6 வயதாகும் போதுதான் பெற்றோரோடு இங்கிலாந்து திரும்பினார். தமது 19ஆவது வயது வரை ஹாக்ஸ்டன் கல்லூரியில் படித்தார்.

II இந்திய வாழ்வு

தமது 19ஆவது வயதிலேயே எட்டு மாதக் கடற்பயணம் மேற்கொண்டு அவர் இந்தியாவுக்கு வந்தார். இளைஞனாய் இருக்கும்போதே, அவர் தமிழ்மொழியைப் பற்றி அறிந்து, தமிழின்பால் காதல் கொண்டதாகவும் தமிழ்நாட்டில் திருப்பணியாற்றத் தம்மைத் தத்தம் செய்ததாகவும் அவரது வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அவர் கப்பலிலிருந்து இறங்கி, தமிழ் மண்ணில் கால் பதித்ததுமே, தமிழில் உரையாற்றினாராம். அவரது இந்திய வாழ்வின் முதற்பகுதி, முதலில் சென்னை சாந்தோமிலும் பிறகு தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாயர்புரத்தில் 8 ஆண்டுகளும் நீடித்தது. ஆரியங்காவுபிள்ளை மற்றும் பல ஐரோப்பியர்களுக்குத் தமிழ்பயிற்றிய புகழ்மிகு தமிழறிஞர் இராமானுசக் கவிராயர் போன்றோரிடம் தமிழ், இலக்கண, இலக்கியங்களை நன்கு கற்றார். தமிழோடு தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய திராவிட மொழிகளிலும் பயிற்சி பெற்றார். சாயர்புரத்தில் நம்மாழ்வார் என்ற நண்பரோடு, அவர் பழகி, அவர்ஞானசிகாமணி என்ற பெயரில் கிறிஸ்து நெறி

தழுவச் செய்தார். பின்னர் அவர் பெயரை ஒரு தொடக்கப் பள்ளிக்குச் சூட்டினார் என்பர்.

பின்னர் அவர் சில காலம் 1850இல் இங்கிலாந்து சென்று, திருமணம் முடித்து, மீண்டும் தமிழகத்துக்கு வந்தார். தமிழகத்தில் தஞ்சாவூருக்கு வந்து, 8 ஆண்டுகள் அங்கு கல்விப்பணியும் சமயப் பணியும் ஆற்றினார். வழக்கமான சமயப் பணிகளோடு பல சைவ இலக்கியங்களைக் கற்றார். பல இதழ்களில் தமிழாய்வுக் கட்டுரைகள் எழுதி வந்தார். கடைசியாகத் தமது 62ஆவது வயதில் (1882) இங்கிலாந்து திரும்பினார். அங்கே சென்றபின் 1885இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியராக நியமிக்கப்பட்டு, தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்பித்தார். 1908 பிப்ரவரி 11இல் தம் மண்ணுலகப் பணிகளை முடித்து இறையடி சேர்ந்தார். அவரது கல்லறை இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு நகரில் அமைந்துள்ளது என முன்னரே குறிப்பிட்டோம்.

III ஆற்றிய பன்முகப் பணிகள்

‘போப்பையர்’ எனத் தமிழ்ப் பெருங்குடிமக்களால் பாசத்துடனும் மரியாதையுடனும் அழைக்கப்படும் அத்தமிழ்ச் சான்றோர் ஆற்றிய பணிகளும் அளித்த கொடைகளும் பல் திறத்தன. பல்வகைப்பட்டன. அவற்றை, ஒன்பது சிறுதலைப்புகளில் தொகுத்து அவரது ‘நவஇரத்தினப்’ பணிகளாகக் காண முற்படுவோம்.

அ) கல்வியாளராக...

போப்பையர், மிகச்சிறந்த கல்விமானாக - ஆய்வுப் பேரறிஞராகத் திகழ்ந்தவர். பிறருக்குக் கனிவுடனும் கண்டிப்புடனும் கல்வி பயிற்றிய பேராசானாகவும் விளங்கியவர். 1850இல் அவர் தஞ்சாவூர் சென்றபோது, அவருக்கு மாபெரும் கிறிஸ்தவப் புலவர் வேதநாயக சாஸ்திரியாரின் நட்பு கிட்டியது. அவர் ஏற்படுத்திய மிஷன் பள்ளியில் போப்பையர் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். பீட்டர்பள்ளி என அது இன்றும் அழைக்கப்படுகிறது. அதற்குமுன், அவர் தூத்துக்குடி சாயர்புரத்தில்பணியாற்றியபோது, அங்கே ஒரு தேவாலயமும் பின்னர் ஒரு கல்லூரியும் நிறுவினார். (அக்கல்லூரி இன்றும் 'போப் கல்லூரி' எனப் புகழுடன் இயங்குகிறது. தஞ்சையில் கிறிஸ்தவர்களிடையே சாதிப்பிரச்சினை எழுந்தபோது, போப் மன வேறுபாடுகளால் அங்கிருந்த SGP சபையைவிட்டு விலகினார். பிறகு, 1858இல் இயற்கை எழில் கொஞ்சும் மலைகளின் அரசி எனப் போற்றப்படும் உதக மண்டலத்துக்கு வந்தார்.

அங்கு, அவர் ஸ்டேன்ஸ் பள்ளி என்ற பள்ளியை நிறுவி, கல்விப்பணியாற்றினார். இங்கு அவர் ஒரு பெரிய நூல் நிலையத்தை ஏற்படுத்தினார். (இதே போல் 1846இல் சாயர்புரத்திலும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக உதவியோடு ஒரு நூல்நிலையத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.) ஊட்டியிலிருந்து (உதகமண்டலம்) போப் பிறகு பெங்களூருக்குச் சென்றார். அங்கு பிஷப் காட்டன்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். கடைசியாக, இந்தியாவை விட்டுத் தம் தாயகமாம் இங்கிலாந்துக்குச் சென்றபோதும், 1885இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பொறுப்பேற்று, தமிழ், தெலுங்கு மொழிகளைக் கற்பித்தார். எங்கு சென்றாலும் கல்விப் பணியாற்றுவதிலேயே கருத்தாய் இருந்த போப்பையர் தம் போதனா முறைபற்றி, 'நல்ல உணவு, நல்ல பிரம்படி, நல்ல கல்வி' Good Food, good beating, Good Education என்று கூறுவாராம்.

ஆ, தமிழ்ப் பற்றாளராக...

தம் வாழ்நாளெல்லாம் தமிழ்ப் பற்றாளராக ஓயாது கற்ற - கற்பித்த தமிழ் மாணவராக - தமிழாசானாகத் திகழ்ந்த போப்பையர் பல தமிழ் இதழ்களில் - குறிப்பாக 'உண்மையொளி' (Light of Life) என்ற இதழில் தமிழிலக்கியங்கள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வந்தார். புறநானூறு பற்றி மட்டும் 9 கட்டுரைகள் எழுதியுள்ளார். சைவ இலக்கியங்களில் அளப்பரிய ஈடுபாடு உடையவராகப் பல சைவ இலக்கியங்களைக் கற்றார். திருவாசகம் புறப்பொருள் வெண்பா மாலை, திருவருட் பயன் முதலிய நூல்களைப் பதிப்பிட்டார்.

சைவசித்தாந்தம், 'திராவிடக் கலாச்சாரத்தின் மலர்' என்று குறிப்பிட்டார். தமிழ் அற இலக்கிய நூல்களைத் தொகுத்து, 'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' என்ற திரட்டை அச்சிட்டு வெளியிட்டார். 'அயல்நாட்டார் தமிழை நன்கறிந்து கொள்ள அவரது படைப்புகள் உதவின' என்று ஆய்வாளர்கள் எழுதுகின்றனர். தஞ்சையில் இருந்தபோது மாணவர்களுக்கும் பிறருக்கும் பயன் தரும் வகையில் (தமிழ் அறிமுக நூல் அல்லது கையேடு *(Tamil Hand book)* ஒன்றையும் தமிழ் இலக்கண நூலையும், தமிழ் - ஆங்கில அகராதிகளையும் வெளியிட்டார். இப்படிப்பட்ட அவரது தமிழ்ப் பணிகளுக்காக, அரசு ஆசியச் சங்கம் *(Asian Society)*1906இல் அவருக்கு தங்கப்பதக்கம் வழங்கிக் கவுரவித்தது.

அவர் தமிழின் மேலும் தமிழர் மேலும் பற்று வைத்திருந்தது போலவே, தமிழர்களும் அவர்மேல் அன்றும் இன்றும் பற்று கொண்டுள்ளனர். சைவர்கள் அவரது நூல்களை மீண்டும் மீண்டும் பதிப்பித்ததாக ஓர் ஆய்வாளர் குறிப்பிடுகிறார். உலகத்தமிழ் மாநாட்டின்போது, தமிழக அரசு சென்னைக் கடற்கரையில் அவருக்குச் சிலை நிறுவி பாராட்டியது.

இ) மொழிபெயர்ப்புக் கலை முன்னோடியாக...

போப்பையரின் திருக்குறள் மொழிபெயர்ப்பு அறிவுலகம் பெரிதும் அறிந்த ஒன்று. அவரது மொழிபெயர்ப்பு, பலவகைகளில் தனித்துவம் கொண்டது. திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலில், அதன் யாப்பு, சொல் அகராதி, பிறமொழிபெயர்ப்பாளர்கள் பற்றிய தகவல்கள் எனப் பலவற்றைச் சேர்த்துள்ளார். திருவள்ளுவரைப் 'பிரபஞ்சக்கவி' *(Universal Band)* எனப் போற்றுகிறார். 'திருக்குறள் பல அறக்கருத்துகளின் தொகுப்பு மட்டுமன்று. ஒரு மாபெரும் படைப்பாளனின் முழுமையான விரிவான அற்புதக்கொடை' *(It is Certainly not an anthology, but the perfect and most elaborate work of a master)* எனக் குறளை விதந்தோதியுள்ளார். திருவள்ளுவர் வாழ்ந்ததாகக் கூறப்படும் இடத்தைச் சென்னை மயிலாப்பூரில் சென்று பார்த்து உணர்ச்சிவசப்பட்டுள்ளார்.

திருக்குறளை வெர்ஜில், தாந்தே, சேக்ஸ்பியர் முதலிய பிறமொழிப் புலவர்களோடும் விவிலியம், உபநிடதங்கள், பகவத் கீதை முதலிய பேரிலக்கியங்களோடும் ஒப்பிட்டு எழுதியுள்ளார்.

திருக்குறளை மட்டுமன்று, வேறு பல தமிழிலக்கியங்களையும் போப்பையர் மொழிபெயர்த்துள்ளார். நாலடியார் அறநூலைப் பெயர்த்துள்ளார். ஆங்கிலத்தில் புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, திருவருட்பயன், நான்மணிக்கடிகை ஆகிய நூல்களின் சில பாடல்களை அல்லது பகுதிகளை மொழிபெயர்த்துள்ளார். மணிமேலைக் காப்பியத்தையும் மொழிபெயர்க்கத் தொடங்கியுள்ளார். அப்பணி முடிவடையவில்லை. சீவகசிந்தாமணியின் சில பகுதிகளையும் அவர் மொழிபெயர்த்துள்ளதாகத் தெரிகிறது.

இவையெல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல, அவரது அறிவுலக நண்பர் ஒருவர் தந்த ஊக்கத்தினால் தமது முதிர்வயதில் திருவாசகத்தை மொழிபெயர்க்கத்தொடங்கி, 80ஆவது வயதில் அதனை நிறைவு செய்தார். இன்று அனைத்துலகிலும் பாராட்டப்படும் ஓர் அற்புதப் படைப்பாகப் போப்பையரின் திருவாசகமொழிபெயர்ப்பு திகழ்கிறது.

ஈ) சமயக் கணக்கராக...

அயராது அருந்தமிழ்ப் பணிகள் பல ஆற்றி வந்த போப்பையர், தமது முதற் பணியான சமயப் பணியிலும் சளைத்தவராக இல்லை. தூத்துக்குடி பகுதியில் அவரது முயற்சியால் 96 திருச்சபைகள் ஏற்படுத்தப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது. கிறித்துவம் சார்ந்த பல்வேறு நூல்களையும் கட்டுரைகளையும் அவர் எழுதி உள்ளார். குறிப்பாக, முக்கியமான நான்கு நூல்கள் பற்றி அருள்தங்கையா என்பவர் குறிப்பிடுகிறார்.

1) கிறிஸ்துவின் மானிடத்துவம் பற்றிய ஆய்வு *(A Treatise on the Person of Christ)*

2) பள்ளிகளுக்கும் கிறிஸ்துவக் குடும்பங்களுக்குமான மறைப் போதனையின் தொகுப்பு

(A Compendium of Religious Teaching for schools and Christian Families)

3) தீய ஆவி வழிபாட்டின் மடமை

(The Folly of Demon Worship)

4) தமிழ் ஆங்கிலப் பிரார்த்தனை நூல்கள்

(The Prayer Books in Tamil and English in south India)

இந்த நான்கு நூல்களுமே இப்போது கிடைக்கவில்லை.



உ) இலக்கண ஆசானாக...

தமிழிலக்கணத்தைப் பயில்வதிலும் பயிற்றுவதிலும் போப்பையருக்குப் பேரார்வம் இருந்தது. தஞ்சையில் ஆசிரியராகப் பணியாற்றிய பொழுது, மாணவர்களுக்காக தமிழ் இலக்கணத்தை மூன்று பாகங்களாக வெளியிட்டார். சமய உண்மைகளை விளக்கும் கிறித்துவ நூல்களைப் போல இவற்றை அவர் வினா விடை வடிவில் அமைத்ததால், பலரும் பெரும் பயன் பெற்றனர். தமிழ்க்

கையேடு *(Hand Book)* ஒன்றையும் அனைவரும் தமிழ் கற்பதற்காக அவர் வெளியிட்டார். இந்நூல்களை 'தமிழ்த்தென்றல்' எனப் போற்றப்படும் திரு. வி.க. அவர்கள் பெரிதும் பாராட்டியுள்ளார். 'பேரிலக்கண நூல்களாகிய தொல்காப்பியம், நன்னூல் முதலிய மலைகளைத் தாண்டும் பேரிடரை மாணவருக்குத் தவிர்த்து எளிமைப்படுத்திய போப்பையர் பணி பாராட்டற்குரியது' என அவர் எழுதியுள்ளார். போப்பையர் பேச்சு மொழிக்கான அகராதி ஒன்றை வின்சுலோ ஐயரைப் பின்பற்றி தயாரித்துள்ளார். தாம் நீலகிரியில் வாழ்ந்த போது, அங்கிருந்த தோடர்கள் (தொதுவர்கள்) என்ற பழங்குடி மக்கள் பேசிய மொழிக்கான இலக்கண நூலையும் வெளியிட்டுள்ளார். திருக்குறள் மொழிபெயர்ப்பில் இலக்கணக்குறிப்புகளையும் சேர்த்து வெளியிட்டுள்ளார்.

திரு. வி.க.

ஊ) திருச்சபை நிர்வாகி (ஆட்சியாளர்)யாக...

இங்கிலாந்தின் வெஸ்லியன் மிஷனரி சொசைட்டினரால் SPG இயக்கத்தின் அருட்பணியாளராகத் தமிழகத்துக்கு அனுப்பப்பட்ட போப்பையர் திருச்சபைகளையும் கல்வி நிறுவனங்களையும் இறையியல் பயிற்சிக் கல்லூரிகளையும் நிர்வகிக்கும் ஆட்சியாளராகவும் பணியாற்றினார். தமது ஆட்சி முறையில் மிகவும் கண்டிப்பான நேர்மையாளராகச் செயல்படுவார். எங்கும் சமத்துவம் நிலவிட முயன்றார். சாதிப் பாகுபாடுகளைக் கடுமையாக எதிர்த்தார். தமது உற்ற நண்பரும் ஒப்பற்ற கவிஞரும் ஆகிய வேதநாயகர் சாஸ்திரியாரோடு

கூட அவர் முரண்பட்டு நின்றார். தமது கொள்கைகளுக்கு உடன்படாதவரோடு பணியாற்ற மறுத்து தம் சபையிலிருந்து (SPG) விலகவும் அவர் தயங்கவில்லை.

எ) சமய ஒப்பாய்வியல் வித்தகராக...

தமிழிலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவற்றையும் சைவ இலக்கியங்களையும், கிறித்தவக் கோட்பாடுகளோடு ஒப்பிட்டு எழுதியுள்ளார். 'சித்தாந்த தீபிகை' இதழில் பல ஆய்வு கட்டுரைகள் இவ்வாறு அவர் வெளியிட்டுள்ளார். திருவாசகத்தை மொழிபெயர்த்தவர், அதனை விவிலியக் கொள்கைகளோடு ஒப்பிட்டு பேசியும் எழுதியும் உள்ளார். இங்கிலாந்து பல்லியோல் கல்லூரியில் அவர் ஆற்றிய சொற்பொழிவு பலரது கவனம் பெற்ற ஒன்றாகும். அவ்வுரையில், ஆன்ம விடுதலையில் (Emancipation of Soul) இரு கொள்கைகளும் ஒன்றுபட்டு இருந்தாலும் பாசம் நித்தியமானது என்பதில் முரண்பட்டிருப்பதாக எடுத்துக்காட்டியுள்ளார்.

(கிழக்கிலும் மேற்கிலும் உள்ள பக்திமான்கள் தம் கொள்கைகளிலும் உணர்வுகளிலும் ஒரு நெருக்கமான தொடர்பை காண வைக்க அவர் விழைந்தார் என்று அறிஞர் கா. மீனாட்சிசுந்தரம் குறிப்பிட்டுள்ளார். 'திருக்குறள்' கிறிஸ்துவின் மலைப்பொழிவின் எதிரொலி என்று அவர் எழுதியுள்ளார்.

ஏ) சிறந்த இலக்கிய சுவைஞ(இரசிகர்)ராக...

தமிழ்நாட்டில் 'இரசிகமணி' என்றழைக்கப்பட்ட டி.கே. சிதம்பரநாதன் அவர்களைப் போல் போப்பையரும் ஒரு சிறந்த இலக்கிய ரசிகராய்த் திகழ்ந்தார். (திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பர். போப்பையர் திருவாசகத்தை உருகி உருகிப் படித்துள்ளார்.

கண்ணீர் உகுக்கு அவர் திருவாசகம் படித்ததால், அவரது கண்ணீர் துளிகள் அவர் படித்த நூல் பிரதியில் விழுந்தபோது, அதனைத் துடைக்காமல் அப்படியே விட்டு வைத்தார் என்பர். அவ்வாறே, புறப்பொருள் வெண்பாமாலை என்ற புற இலக்கிய இலக்கண நூலை மிகவும் சுவைத்துப் படித்தோடு, அதிலிடம் பெற்ற பூக்களைப் பற்றி விவரித்து, அவற்றின் இன்றைய அறிவியல் (தாவரவியல்) பெயர்களையும் குறித்துக் காட்டினார். கிறித்துவப் புலவர் வேதநாயக சாஸ்திரியாரின் படைப்புகளை சுவைத்துப் போற்றியதோடு, 'சாஸ்திரியாருக்கு (இத்தாலியக்காவியப் புலவன்) ஹோமரின் தலை வாய்த்துள்ளது' என்ற பாராட்டுரையும் வழங்கினார்.

ஐ) கண்டிப்பான கொள்கையாளராக...

போப்பையர், தாம் கொண்ட கொள்கையில் எப்போதும் சமரசம் செய்துகொள்ளாத விட்டுக்கொடுக்காத கண்டிப்புடன் வாழ்ந்துள்ளார். அவரது சம காலத்தவரான இராபர்ட் கால்டுவெல் பேராயர் அவர்கள், அவரை ஒரு

அழுத்தமான ஒழுக்கமுறையாளர் (Strict disciplinarian) என்று வருணித்துள்ளதோடு, அதனால் அவர் சில பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டி இருந்ததாக எழுதுகிறார். சாதிபேதப் பாகுபாடுகளை இம்மியளவும் ஏற்க மறுத்த அவர், தம் உற்ற நண்பர் வேதநாயகரே சொன்னாலும், தம் வேலையே போனாலும், ஏற்கமாட்டேன் என்று உறுதியாக நின்றார். சமத்துவக் கொள்கையில் சமரசம் செய்துகொள்ளாத மனிதநேய மகானாக வாழ்ந்தார்.

இவ்வாறாக, 'நவ இரத்தினம்'போல், ஒன்பது ஒப்பற்ற கோணங்களில் ஒளிர்ந்த போப்பையர் தமிழ் பற்றியும் திருக்குறள் பற்றியும் கூறியுள்ள கருத்துகளாக, முனைவர் ப. பாலசுப்பிரமணியன், தமது 'கிறித்தவம் தமிழுக்குத் தந்த அருட்கொடை' என்ற நூலில் தந்துள்ள வரிகளோடு இக்கட்டுரையை நிறைவு செய்வோம்.

'தமிழ்மொழி பண்பட்ட மொழி, சொற்செல்வம் படைத்த தனிமொழி. தென்னிந்திய மொழிகளுக்கெல்லாம் அது தாய்மொழி. தமிழ் இலக்கியங்கள் ஒழுக்கத்தையும் அறநெறியையும் ஊட்டுவதற்கென்றே உருவானவை. அதற்கோர் எடுத்துக் காட்டு திருக்குறள். உயர்ந்த அற நெறியையும் உயிரினும் சிறந்த ஒழுக்கத்தையும் பின்பற்றும் மக்கள் வாழும் நாட்டில்தான் திருக்குறள் போன்ற நீதி நூல் உருவாகும். உருவாக இயலும். அழுக்கில்லாத தூய நீரூற்றுபோலத் திருக்குறள் தோற்றம் தருகிறது. ஆம். உலகின் அழுக்கினைப் போக்கவந்த உயர்தனித் திருநூல் திருக்குறள்?

இவ்வாறு தமிழையும் தமிழரையும் தமிழ்மறையையும் போற்றி அவற்றுக்காகவேத் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த போப்பையரை நன்றியுடன் நினைவுகூர்ந்து, அவர் அடிச்சுவடிகளில் நாமும் தமிழ்த்தொண்டு தொடர்வோம்.

Vallalar – First Thirumurai

Akshayan, Australia

Vallalar's incarnation, for it was no mere birth, was foretold by Sivan himself. One day, in the guise of a devotee, He arrived at the house of Chinnammai, begging for food. Although her husband, Rammaiyya was not there, she welcomed Him in and performed all the traditional rites, before serving Him. As the devotee appeased His hunger and got up to leave, He said, "a son will be born to you to show the world the way of the great deathless life."

He handed her sacred ash, telling her to wear it and to get her husband to adorn it too. Chinnammai watched as He walked down the dusty street, and vanished into thin air, without leaving so much as a footprint.

The child born to that blessed woman is our Vallalar Adikal, yet he really was the Son of God himself. At the age of just 5 months old, Rammaiyya and his family had gone to the Nataraja Temple in Chidambaram, with young Vallalar in the arms of Chinammai. After worshipping the Divine Dancer, they moved to the side to gain vision of the Chidambara Rahasiyam, the Mystery of Mysteries, revealed to devotees only briefly, by the drawing of a curtain.

As the curtain was lifted on that fateful day, as onlookers jostled and crowded, hoping to catch a glimpse of that Great Secret – the child nestled in the crook of Chinnamai's arms – laughed in ecstatic delight, face beaming with the effulgence of innumerable full moons.

When is the day of my redemption, when,
holy virtuous deeds and spiritual wealth multiply in me, your devotee –
as wisdom and my closeness to you increases and ecstasy overflows –
when, through Your grace,
        You, the fragrant red lotus, blossoms in me,
as does your growing compassion –
        as a stream of pure ambrosia swells like bliss –
when gnosis takes shape and rises,
        as the light of experience shines forth –
        as you emerge mounted on the peacock
and your Feet, compassionate towards all life, arises inside me?
O Kanda, of Kandakottam in Chennai, girt by trees.
Pure Gem of Cool faces! Gem born of Siva!
        O six faced Divine Gem!
(Theiva mani maalai – stanza 1)

Thus began Vallalar Adikal, as he opened his divine lips and graced us with the Thiruvarutpa – 5818 songs of the highest devotional and spiritual quality – Tamil poems with sweetness greater than that of honeied nectar, while being imbued with the deepest wisdom attainable by man.

***

As Vallalar claimed Sivan, so too did Sivan claim Vallalar. Their bond was one of divine love and inseparability, from even that young age of 5 months. For such a child, education and such worldly pursuits held no meaning. Yet his older brother Sabaapathi, out of well-meaning affection, tried to mould a student out of Vallalar by any means of possible. This led to him eventually ordering his wife, to not even serve food to Vallalar.

Sabaapathi's wife, however, loved Vallalar like her own son and with teary eyes pleaded with him to listen. Touched by her emotion, Vallalar slightly conceded, asking her for a private study room, with a lamp and mirror. Our Adikal entered that room with a boat load of books, but what he did behind those locked doors is anyone's guess. Whatever intense study and deep meditation he

undertook in front of that mirror lead him down a path of the highest wisdom, starting with vision of the Peacock Warrior himself:

> The great, divine faces, six in number,
> and the twelve shoulders adorned by kadamba garland –
> the lotus like feet, and the singular, sharp Spear –
> the peacock, and his rooster banner –
> along with his Thanikai Mountain,
> covered by the Cloud of Grace –
> all this, my eyes beheld.
> (Piraarthanai maalai – stanza 1)

One day Sabaapathi, who ran discourses on religious texts, was sick and couldn't deliver his oration. He would usually bring Ramalingam with him to read the sections of the texts for him, before his exposition. To avoid disappointment for the expecting audience, the organisers asked him to send Ramalingam anyway.

Ramalingam went and read the passages from the Periya Puranam so sweetly that one of the audience members, probably in jest, asked him to give his own discourse. Out poured a flood of divine knowledge, dissecting every nuance of the text so precisely that the disbelieving audience could only help but wonder whether it was Sekkizhar himself who was speaking through this young boy.

Vallalar was endowed not only with such grace, but also with an erudite knowledge of Tamil.

His poetry is both emotional, as well as technically challenging, as can be seen by the fact that he is composed in as many as 29 unique metrical forms. His poems have been categorised into 6 Thirumurais, of which the 1st contains 570 songs, sung across 52 headings. An interesting song from this thirumurai:

Transliteration:

thaa thaa thaa thaa thaa thaa thaak kuRaikku en seiguthum yaam
Othaa thavamE uzhanenjE – meethaath
thathithi ena mayilil thaanaadi naaLum
thi thi thi tharum thaNikgaith thE
(Thani thiruththodai – stanza 18)

Although it sounds completely unintelligible at first, it's really just a clever play on words. In the first line there are 7 thaa's. The Tamil word for 7 is aezhu. Putting it together aezhu + thaa, or if the first letter is slightly shortened, ezhuthaa, which means that which is not written. Vallalar laments that it was not written in his fate to worship Murugan, which is the reason for his lack of devotion (ezhuthaak kuRai). Similarly in the last line there are 3 thi's which can be written in Tamil as muththi (mu = three). This also means salvation.

Word play aside, Vallalar felt an immense pull towards Murugan's abode at Thiruththani. He begs for a chance to see Thanikai Murugan just once:

Beholding Him, I will worship
He who wields the Spear in His lotus hands,
Object of Truth who Rules me,
Medicine, rare to be apprehended by those stuck in worldly mire,
the Ruby Gem like One,
Rider of the Peacock, who dwells in my heart.
My Father! My conscious thought!
Singular Grace, son of Sivan, unknown to Vishnu and Brahma
(Tharisanai vetkai – stanza 1)

Will I reach Thanikai Mountain,
and reaching there, O pupil of my eye!
will I behold your beauty,
and beholding your beauty, will I remove the misery of this world?
Will I plunge and dance in the flood of bliss
having worshipped your Feet?
Will I join the presence of your devotees,
and thus joining, will I adorn my head with their feet?
(Pani thiram vettal – stanza 3)

Much of the first Thirumurai is devoted to Vallalar's yearning to cut the cycle of birth and death, while lamenting at his attraction to the sensual pleasures.

Amidst the sea of justice known as Siva
You arose as pure nectar, O honied one!
Mountain of virtues! enthroned atop Mount Thanikai,
alongside the flower creeper like Valli of beauteous breasts.
Is there a day where you look upon the face of this sinner –
wearied swimmer in the ocean of rebirths,
looking not on my faults,
as you seat me in the shade of your Feet?
(Anpir pethural – stanza 4)

But to Vallalar, Murugan was much more than a God, he was his lover too. Following in the footsteps of many of the Tamil mystics before him, Vallalar too sung songs portraying himself as a young girl pining for the Lord. The basic beats of a Tamil love story from Sanga Literature times are as follows:

The hero and the heroine are made to meet and have their first union by the good deeds they accumulate in their previous lives. However, after they separate, it is hard to find union again, as the heroine is constantly swarmed by her group of playmates.

The hero enlists the help of the heroine's confidant and can join with his beloved once more. But as the heroine's family sees that she is slowly coming of age for marriage they place her under heavy guard, out of care and affection, and union becomes difficult once more. The hero, maybe as he is unable to

gather the wealth necessary to marry her, idly hangs around her house hoping to catch at least a glimpse of her. He becomes careless, and people start noticing. They also notice this girl, beautiful as the celestials, losing her shine, and put two and two together, causing the rumours to start churning:

O Swan enthroned on the golden lotus, fit for Lakshmi herself!
My mother has found out
and the girls of this town
have started their scandalous rumours.
You must go and tell Him,
of cool Thanikai Mountain –
object of my desire!
that I have been locked inside my house.
(Ingithap patthu – stanza 9)

Although Murugan first ruled Vallalar's heart, it was the raft called Sivan which he held firmly on to in the remaining thirumurais. We can see hints at this relationship in the first thirumurai also. Going back to the anpir peruthal song, Murugan is described as nectar arising from the sea of justice known as Sivan. Similarly:

O Singular One, Mountain of Grace – precious as gold!

To the flower that is the triple eyed One, you are fragrance, and its honey,

Gem who abides in peerless Thanikai Mountain – praised by poets!

(Seevasatchi maalai – excerpt from stanza 6)

Note: The triple eyed one is Siva, and to him Murugan is like the fragrance of the flower. We will end with the most important plea of the Thiruvarutpa. Vallalar took Manickavaasagar, the author of the Thiruvasagam, as one of his spiritual gurus. There is only one plea in the Thiruvasgam, which is asked for again and again, which is to be joined amidst Sivan's band of devotees. Vallalar similarly yearns for this grace:

I cannot endure it,
O this wretch cannot endure
reaching the company of those
who do not have the wisdom
to meditate on your Feet,
which blazes as the effulgence in the minds
of those who are devoted to you.
O my King, I would be redeemed
if you think to admit me
amidst those eternally devoted to you.
O Ambrosia who wields the Spear –
form of Sakthi, in His roseate hands!
O Saravanabava of Thanikai Mountain!
(Porukkaap patthu 7)

And as in Manickavaasagar's case, who sings ecsatatically:

We witnessed the wondrous grace of my Father,
of resplendent flowery Feet, beyond metaphor
enslaving me and joining me amidst his devotees!

(Thiruvasagam – Athisaiyap paththu 1 excerpt)

so too did Murugan descend as Vallalar's guru to guide him in his spiritual journey and fulfill this wish of Vallalar's.



O Great God, Lotus who rises in the hearts of those
who learn to apprehend the Real!
You joined me amidst the band of virtuous devotees
who sing the glory of Your golden flowery Feet,
You made permanent the thought of your grace
and allowed me to partake that bliss,
making it known that I was your devotee, O my Ruler!
My Guru! who came and wiped away my ignorance
when I was but a youngster, O God of Gods!

(Thiruvarul vilaasa paththu 7)

Bibliography:

Pathway to God trod by Saint Ramalingar – G Vanmikanathan

Thiruvarutpa – Uraiventhar Auvai S. Thuraisami urai

தீபாவளியும் இறந்தோர் வழிபாடும்

முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி
தமிழணங்கு இதழாசிரியர்
மொழிபெயர்ப்பாளர்,எழுத்தாளர், பதிப்பாளர்

தீபாவளித் திருநாள் இருள் மற்றும் ஒளியுடன் தொடர்புடையது. அன்று நரகாசுரன் இறந்ததற்காக இந்து சமயத்தவரும், மகாவீரர் நிர்வாண நிலை [இறந்தது] அடைந்ததற்காக சமணரும், தீபாவளி கொண்டாடுகின்றனர். வட இந்தியாவில் இருட்டை விரட்டும் வகையில் தீபங்களை வரிசையாக [ஆவளி] வைத்து ஒளியேற்றும் சடங்கு நடைபெற்றது. இன்று அதற்கு பல்வேறு காரணங்களை பல்வேறு சமயத்தார் உருவாக்கி கொண்டனர். திபாவளி என்ற சொல் ராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களில் இல்லை. ஹர்ஷவர்த்தனர் எழுதிய நாகநந்த என்ற நுலில் தீப பிரதிபாதோத்சவா என்றும் யக்ஷி ராத்திரி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. யட்ஷியை நினைவுகூரும் ராத்திரியாக இந்நாள் ஏழாம் நூற்றாண்டு வரை அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு இயற்றப்பட்ட விஷ்ணு புராணம் [நரக சதுரத்தசி] பத்ம புராணம் [லட்சுமி பிறப்பு] போன்றவற்றில் இந்நாள் குறித்த குறிப்புகள் இடம்பெற்றன.

உலகச் சமயங்களில் இறந்தோர் வழிபாடு

சமணம் பௌத்தம் வைணவம் கிறிஸ்தவம் [கத்தோலிக்க சமயம்] இஸ்லாமில் ஒரு பிரிவு எனப் பல்வேறு சமயத்தவர்களும் இறந்தவர்களை ஒரு நாள் நினைத்து போற்றுகின்றனர். சீனா, ஜப்பான், கொரியா நாடுகளில் பவுத்த சமயம் பரவுவதற்கு முன்பு கன்ஃபுஷியம் ஷின்தொயியம் ஆகிய சமயங்கள் இறந்தோர் வழிபாட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தன. ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்துவம் பரவுவதற்கு முன்பிருந்த வேளாண் குடி மக்கள் ஆவி வழிபாடு, இறந்தோர் வழிபாடு, பல தெய்வ வழிபாடுகளைச் செய்துவந்தனர். இவர்களின் சமயத்தை நகரத்து மேட்டுக்குடியினர் மற்றும் படித்தவர்கள் நாட்டார் சமயம் [paganism] எனக் குறைவாக மதித்தனர்.

இறந்தோர் வழிபாட்டில் கிராமச் சமயங்களும் நகர்ச் சமயங்களும்

ஐரோப்பிய நாடுகளில் இயேசு கிறிஸ்து, மேரி மாதா என்று ஓர் இறை கோட்பாடு வந்த பிறகு அதன் செல்வாக்கு மிகுந்ததால் கிராமத்துச் சாமியாடிகளும் நாட்டு மருத்துவர்களும் சோதிடர்களும் குறி சொல்வோரும்

பிசாசு பிடித்தவர்கள் என்று குற்றம் சுமத்தி தண்டிக்கப்பட்டனர். எனவே பாகனிசம் என்ற பழஞ்சமயம் செல்வாக்கிழந்தது. இன்றைக்கு இந்தியாவிலும் இந்நிலை தோன்றிவிட்டது,

இசக்கி, மாடன், கருப்பன் என்று கிராமத் தெய்வங்களை தமது குல தெய்வம் என்று தெரிவிக்காமல் திருப்பதி, சாயிபாபா [sayi devotee], ஈஷா, ஓஷோ என்று மேட்டுக்குடி மரபில் சொல்லிக் கொள்ளும் வழக்கம் மிகுந்துள்ளது. இதனால் *unity in diversity* என்ற இந்தியாவின் தனித்தன்மையுடைய கலாச்சாரப் பண்பு *[unique cultural aspect]* குறைந்துவருகிறது. இறந்தோர் வழிபாடு நடக்கும் சிவராத்திரி வழிபாடு இன்றைய நுகர்வு கலாசாரத்துக்கு ஏற்ற வகையில் கொண்டாட்ட நிகழ்வாக ஈஷா மையத்தில் மாறிவிட்டது.



இருட்டும் இறந்தோரும்

அமாவாசை இருள்மயமானது அன்று இறந்தோரின் ஆவி பூமியில் திரியும் என்றும் அதற்கு சாந்தி செய்வதற்கு விருப்பமான உணவை வழங்க வேண்டும் என்பதும் உலகமுழுதும் உள்ள மனிதர்களின் பண்டைய நம்பிக்கை ஆகும். இன்றும் இந்நம்பிக்கை பலவேறு நாடுகளிலும் பல்வேறு சமயங்களிலும் பண்டிகையாக சிறப்பு தினங்களாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

பௌர்ணமியை ஆணும் பெண்ணும் கூடிக் களித்து குழந்தை பிறக்க உதவுகின்ற தினமாக கொண்டாடிய பண்டைய மனித இனம் அமாவாசையை இருட்டுடன் ஆவியுடன் இணைத்தது. அன்று இறந்தோருக்கு சடங்குகள் செய்வதால் அவை நம்மை துன்புறுத்தாது என்ற எண்ணமும் மேலோங்கிற்று. அமாவாசைகளில் மறந்துவிட்டால் மகாளய அமாவாசை காலத்தில் அல்லது ஆடி அமாவசை, தை

அமாவசை நாட்களில் நீத்தார் கடன் கழிக்க வேண்டும். மாசி அமாவசை அன்று இறந்த அனைத்து முன்னோருக்காகவும் இரவு முழுக்க விழித்திருந்து அவர்களுக்கு சடங்குகள் செய்து சாந்தி செய்யும் முறை காலங்காலமாக இருந்து வருகிறது.

அமாவசை இருட்டு நிறைந்த நாள் என்பதால் அன்று கிராமங்களில் இறந்தோருக்கு நடத்தப்படும் பூஜைகள் நள்ளிரவில் நடைபெறுவதுண்டு. வங்காளத்திலும் ஒடிஷாவிலும் காளி பூஜை அன்று நள்ளிரவில் நடைபெறும். இம்மாநிலங்கள் தாய்த்தெய்வ வழிபாட்டு மரபு சார்ந்தன. அங்கு இன்றும் தீபாவளி காளி பூஜையுடன் கூடிய நள்ளிரவு விழாவாக நடைபெறுகிறது.

சிவனுக்கு அமாவாசை; அம்மனுக்குப் பௌர்ணமி

மாசி அமாவாசை அன்று சிவன் கோயில்களில் சிவ ராத்திரி என்ற பெயரில் சிவனுக்கு இரவு முழுக்க அபிஷேக ஆராதனைகள் நடக்கும். கிராமக் கோயிகளில் களரி, மயானக் கொள்ளை, சூலாடு குத்துதல் [கருவுற்றிருக்கும் ஆட்டை குத்தி குட்டியை வெளியே எடுத்து பலி கொடுத்தல்] போன்ற வழிபாட்டுச் சடங்குகள் நடைபெறும். அம்மனுக்கு நடக்கும் விசேஷ ஆராதனைகளும் பூஜைகளும் பௌர்ணமி அன்று நடைபெரும். சிவனுக்கு சிவராத்திரி அன்று நடக்கும். சிவன் சுடுகாட்டில் சாம்பல் பூசி ருத்ர தாண்டவம் ஆடும் மயானப் பிரியன். அவன் அழிவுக் கடவுள்; எனவே அவன் மரணம் சுடுகாடு ஆகியவற்றோடு தொடர்புடையவன். பாசுபதர், காபாலிகர், வீர சைவர் அகோரி போன்றோர் அதி தீவிர சிவ பக்தர்கள்,

தீபாவளியும் பல்வேறு முறை கொண்டாட்டங்களும்

மனிதன் தோன்றிய நாள் தொட்டு தனது நம்பிக்கைகளையும் அச்சத்தையும் அதற்கான் தீர்வையும் மாற்றிக்கொள்ளவில்லை. அதற்கான காரணங்களையும்

வெளித் தோற்றத்தையும் மட்டுமே மாற்றினான். எப்பாடுபட்டாவது நம்பிக்கை சார்ந்த அதே சடங்கு முறைகளை நவீனமாக செய்து முடித்தான்.

சித்திரை முதல் பங்குனி வரையில் அல்லது சூரியன் மேஷ ராசியில் புகுந்து இறுதியில் மீன ராசியில் சஞ்சாரிக்கும் ஆண்டுக்கணக்கில் ஒரு ஆண்டின் நடு மாதம் [ஐப்பசி] வரும் அமாவசை ஆண்டில் அதிக இருட்டு மிகுந்த இரவு அன்று இரவு முழுக்க விளக்கேற்றி வைத்து இருட்டின் அச்சத்தில் இருந்து தன்னை விடுவித்தான். நாகரிகமும் புதிய சமயங்களும் தோன்றிய பிறகும் அவன் அந்த நம்பிக்கை சார்ந்த சடங்குகளை விட்டுவிடவில்லை. தொடர்ந்து வேறு பெயரில் வேறு காரணங்களைக் கூறி செய்துவந்தான்.

தீப ஆவளி – தீப வரிசையின் வரவேற்புக் காரணங்கள்

தீபாவளி அன்று வீட்டில் வரிசையாக தீபம் ஏற்றி வைக்கும் வழக்கம் வட இந்தியாவில் காணப்படுகிறது. அங்கு தீபாவளி அன்று நடக்கும் இருட்டு – ஒளிச் சடங்குகளுக்கு சொல்லப்படும் காரணங்கள் பற்பல. இந்து சமயத்தில் இராவணனைத் தோற்கடித்து அயோத்தி திரும்பிய இராமனை வரவேற்க தீபங்கள் ஏற்றி வைப்பதாக ஒரு ஐதிகம். வனவாசம் முடிந்து அஸ்தினாபுரம் திரும்பிய பஞ்ச பாண்டவர்களை வரவேற்க இரவு முழுக்க தீபங்களாக ஏற்றி வைப்பதாக ஒரு நம்பிக்கை.

சீக்கிய சமயத்தில் ஆறாவது குருவான ஹர் கோவிந்த் சிங்கை மொகலாயப் பேரரசர் குவாலியர் கோட்டை சிறைச்சாலையில் இருந்து ஐப்பசி அமாவாசை அன்று விடுவித்தார். அவர் ஊர் திரும்பிய நாள் என்பதால் தீபாவளி அன்று தீபங்கள் ஏற்றி அவரை இன்றும் வரவேற்கின்றனர்.

அசோகர் புத்த சமயத்தை ஏற்றுக்கொண்ட நாள் என்பதால் அவரது அறியாமை இருளகன்று அறிவொளி பெற்ற திருநாள் என்று ஐப்பசி அமாவாசை அன்று பவுத்தர்கள் தீபமேற்றி வணங்குகின்றனர்.

நீத்தார் கடன் தீர்க்கும் தீபாவளி

இறந்தோருக்கான சடங்குகளை ஆண்டின் ஆறாவது மாதமான ஐப்பசியின் அமாவசை அன்று செய்வது மிகவும் உகந்தது என்று நம்பிய மக்கள் சமண மதத்தைத் தழுவிய பிறகும் அதனைத் தொடர்ந்து செய்தனர். இவர்களுக்குக் கிடைத்த காரணம் 24ஆவது தீர்த்தங்கரரான மகாவீரர் நிர்வண நிலை [முக்தி] அடைந்த நாள் அதுவாகும். இரவு முழுக்க மன்னனின் அரண்மனையில் அமர்ந்து சமயப் பேருரை நிகழ்த்திய மகாவீரர் அதிகாலையில் அமர்ந்த நிலையில் உயிர் நீத்தார். அவர் உயிர் நீத்ததால் நாடெங்கும் இருள் சூழ்ந்துள்ளது அதனால் வீடுதோறும் விளக்குகள் ஏற்றுங்கள் என்று மன்னன் ஆணையிட்டதால் அனைவரும் தத்தம் இல்லங்களில் விளக்குகளை வரிசையாக ஏற்றினர். இக்கதையில் அல்லது காரணத்தில் சாவும் தீபமும் சேர்ந்து சுட்டப்படுகின்றது.

இந்து சமயத்தில் இறந்தோர் கடனைத் தீர்த்தல் என்ற நம்பிக்கையும் நடைமுறையும் தொடர்வதற்கு பல்வேறு காரணங்கள் காட்டப்படுகின்றன. நரகாசுரனை திருமால் கொன்ற நாள் என்பதாலும் அவன் திருமாலிடம் தனது இறப்பை மக்கள் கொண்டாட வேண்டும் என்று வேண்டிக் கொண்டதனாலும் அவர்கள் தீபாவளியை பட்டாசு வெடித்து இனிப்புகள் செய்து பரிமாறி கொண்டாடுகின்றனர்.

சமணம் தென்னகம் வந்த கதை

‘மவுரியப் பேரரசன் சந்திரகுப்தரின்(கிமு322-298) குரு சமணத் துறவி பத்ரபாகு. ‘பீகாரில்(பாடலிபுத்திரம்) 12ஆண்டுகள் கடும் பஞ்சம் வரும்’ என்று தன் ஜோதிட அறிவில் இவர் கணித்துச் சொன்னார்.

இந்த கொடும் பஞ்சத்திலிருந்து தப்பும் நோக்கில் பத்ரபாகு வழிகாட்டுதலில் பெரும் எண்ணிக்கையில் சமண மக்கள் தென்னகம் இடம்பெயர்ந்து, கர்நாடகத்தின் சிரவணபெல்கோலா பகுதிக்கு வந்தனர். . தொடர்ந்து சமணத் துறவி விசாகச்சாரியார் தலைமையில் குழுவினர் கிமு 3ம் நூற்றாண்டில் கொங்கு நாடு வழி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் வந்து தங்கினர்’ என்று மயிலை சீனி வேங்கடசாமி சமணம் தென்னகம் வந்த வரலாற்றை எடுத்துக் கூறுகின்றார். இவர்கள் திண்டிவனம் வந்தவாசி மதுரை ஆகிய பகுதிகளில் ஏராளமாக இருக்கின்றனர். இவர்கள் அதிகாலையில் நல்லெண்ணெய் தேய்த்து தலைமுழுகி மகாவீரரின் இறப்பை அனுஷ்டிக்கின்றனர். இவர்களின் சமணர் கோயில்கள் நயினார் கோயில் என்று அழைக்கப்படுவதுண்டு.

செல்வம் கொழிக்க இலட்சுமி – குபேரர் பூஜை

ஐப்பசி அமாவசை அன்று முன்னோர்களை வணங்கி தொழிலை அல்லது புது கணக்கை அல்லது நகை, தங்கம், வெள்ளி வாங்கி வைத்தல் போஎன்றவற்றைச் செய்தால் செல்வம் சேரும் என்று மக்கள் நம்புகின்றனர். அதனால் அன்று புதுக்கணக்கு தொடங்குவதும் இலட்சுமி பூஜை செய்வதும் குபேர பூஜை செய்வதும் உண்டு. இதற்கும் ஒரு கதையும் காரணமும் உண்டு பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்த போது இலட்சுமி உதித்தாள். அன்று ஐப்பசி அமாவசை. அதனால் அன்று இலட்சுமிக்குப் பிறந்தநாள் கொண்டாடப்பட்டு இலட்சுமி பூஜை நடத்தப்படுகிறது. இக்கதை பத்ம புராணத்தில் உள்ளது.

பொதுவாக இறந்த நாளை திதியைக் கொண்டும் பிறந்தநாளை நட்சத்திரத் தாசிக் கொண்டும் நினைவு கூர்தல் மரபு. ஆனால் விநாயகர்க்கு சதுர்த்தி, இலட்சுமிக்கு அமாவாசை, கோகுலாஷ்டமி [நட்சத்திரத்தன்று கொண்டாடுவோரும் உண்டு], ஆகியவை திதியைக் கொண்டு நினைவு கூரப்படுகின்றன. கந்தன் பிறப்பு கார்த்திகை அன்றும், அனுமன் பிறப்பு மூலம் அன்றும் நட்சத்திரங்களைக் கொண்டும் கொண்டாடப்படுகின்றன.

ஐந்து நாள் விரிவாக்கம்

நேபாளிகள் [வஜ்ராயன பவுத்தர்கள்] அன்றைய தினத்தை திக்ஹார் அல்லது சுவர்னி என்று அழைக்கின்றனர். இவர்கள் ஐந்து நாட்களுக்கு கொண்டாடுகின்றனர். காகம் , பசு, நாய், ஆகியவற்றுக்கு தனித்தனியாக ஒவ்வொரு நாள் கொண்டாடிவிட்டு அடுத்து நான்காவது நாள் கோவர்த்தன பூஜையும், பின் சகோதர நலம் காக்கும் பூஜை செய்து சகோதர்களுக்கு பரிசும் இனிப்பும் அளித்து மகிழ்கின்றனர்.

வட இந்தியாவில் ஐந்து நாட்கள் கொண்டாடப்படும் இப்பண்டிகையின் முதல் நாள் தான திரயோதசி எனப்படும். அன்று தங்கம் வெள்ளி வாங்குவதுண்டு. அடுத்த நாள் நரகாசுரனை கொன்ற சதுர்த்தசி என்பதால் நரக சதுர்த்தசி எனப்படுகிறது. இந்நாளை சின்ன தீபாவளி என்றும் குறிப்பிடுவர்.

மூன்றாம் நாள் தீபம் ஏற்றி இனிப்பு வழங்கி பட்டாசு கொளுத்தும் தீபாவளித் திருநாள்.

நான்காம் நாள், தம்பதி பூஜை அதாவது தாலி பாக்கியம் நிலைக்க வேண்டும் என்பதற்காக சுமங்கலிகள் கேதார கௌரி விரதம் மேற்கொள்கின்றனர்.

ஐந்தாம் நாள் பசுக்களுக்கு நன்றி தெயரிவ்க்கும் கோவர்த்தன் பூஜை நடைபெறும் அன்று விச்வகர்மாவுக்கு சிறப்பு வழிபாடுகள் நடக்கும்

அமாவாசையும் நம்பிக்கைகளும்

வட இந்தியாவில் அமாவசையை நல்ல நாள் எனக்கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்யத் தொடங்குவர். அங்கு செவ்வாய்க்கிழமை மங்கல் வார் எனப்படுவதால் பல மங்கல காரியங்கள் அன்று தொடங்கப்படும். ஆனால் தென்னிந்தியாவில் அமாவாசையை கரி நாளாகக் கொண்டு அன்று எந்த நல்ல செயலும் தொடங்குவதில்லை. செவ்வாய் கிழமையை 'செவ்வாயோ வெறும் வாயோ' என்று நம்புவதால் செவ்வாய் மற்றும் சனிக் கிழமைகளில் எந்த நற்செயலும் தொடங்குவது கிடையாது. ஒரே நாடு என்று கருதப்படும் எலலைப்பரப்புக்குள் அடிப்படை நம்பிக்கைகளில் பல மாற்றங்கள் இருப்பதை காணலாம்.

கோவர்த்தன் பூஜையும் சமூகவரலாற்று உண்மையும்

கோவர்த்தன கிரியை கிருஷ்ணர் தூக்கி நின்று ஆயர்களை இந்திரனின் அடைமழையில் இருந்து காத்த கதை பலருக்கும் தெரியும். கிருஷ்ணன்

ஆயர்களின் பிரதிநிதி. இந்திரன் வேளாண் மக்களின் தலைவன். அவர்கள் இந்திரனிடம் அடைமழை ஐப்பசி கார்த்திகை மாதங்களில் வேண்டும் என்று வேண்டி நிற்பர். இந்திரன் வேளாண்மை செழிக்க அடைமழையைப் பொழிவான். ஆனால் கன்றுகாலிகள் இரண்டு மாதங்கள் விடாது அடைத்துக்கொண்டு மழை பெய்தால் மேய்ச்சலுக்குப் போக இயலாமல் பசியாலும் நோயாலும் வாடி முடங்கிப் போகும். அதனால் ஆயர்கள் தம் கால்நடைகளின் நலன் கருதி வானம் வெளுக்க வேண்டும் என்று கண்ணனை வேண்டினர். இது ஆயர் குடிகளுக்கும் வேளாண் குடிகளுக்கும் இடையே நடந்த சமூகப் போராட்டத்தின் பாதுகாக்கப்பட்ட வரலாற்றுப் பதிவு.

மக்கள் முக்கிய நிகழ்வுகளைத் தொன்மக் கதைகளின் மூலமாக சமயத்தில் [religion] வைத்துப் பாதுகாத்து வைத்துள்ளனர். புராணக் கதைகளை கேட்கும் போது இந்தக் கதைகளுக்கான சமூக வரலாற்று பின்னணி என்னவாக இருக்கும் என்பதை ஆராய்ந்தால் நடந்து வந்த பாதை தெரியும் நடக்க வேண்டிய பாதையும் புரியும் போய்ச் சேர வேண்டிய இலக்கு தெளிவாகும். இது தான் வரலாற்றுக் கல்வியின் பண்பும் பயனும் ஆகும்.

இறந்தோர் தினத்தை அனுசரிக்கும் ஐரோப்பிய மதங்கள்

கிறிஸ்துவத்தில் *all saints day* என்ற பெயரில் நவம்பர் முதல் நாள் அன்று கல்லறை திருநாள் கொண்டாடப்படுகிறது. அன்று இறந்தவர்களின் கலலறைக்குச் சென்று மாலை அல்லது பூச்செண்டு வைத்து அவர்களை நினவு கூர்கின்றனர்.

Dravidian Ethos, and the Ancient Conflict

Bp Dr J Ravikumar Stephen G

Founder
Dravidianism Revival Centre

You may recall that I have often argued that Jesus, in spirit and essence, reflected a Dravidian worldview. Yet many dismissed this claim, pointing out that Jesus was born into a Jewish family and that Christianity was later institutionalized by his followers. Because I myself come from a Christian background, such arguments were often met with suspicion.

The Aryan–Dravidian divide, however, is not a recent or fabricated notion. Its roots go deep into human prehistory—emerging from differences between descendants who intermingled with Neanderthals and those who intermixed with other early human species. The earliest evidence of this conflict appears in Arjika (Kazakhstan), where the Devs are said to have clashed with the descendants of Noah. Aryans stigmatized their opponents with terms like Das ("slaves") and Mleccha ("foreigners," regarded as impure or barbaric).

This struggle was not confined to South Asia. It reverberated across civilizations: hastening the decline of the Sumerians, shaping the capture of the Old Assyrian Kingdom by the Hittites, and persisting even after the fall of the Indus Valley Civilization. In the Levant, it surfaced as enmity between the Aryan-descended Philistines (distinct from today's Palestinians) and the Israelites.

For this reason, the Aryan–Dravidian conflict in South Asia cannot be understood in isolation. It is part of a much broader civilizational pattern—one that still echoes in modern racial tensions, such as those between Caucasian and African Americans in the United States, just as it once did in the Levant.

But how do we connect the Dravidians of South Asia with the non-Aryan peoples of the ancient Near East? Cultural parallels provide compelling evidence. In earlier writings, I highlighted the shared use of donkeys in Tamil

society and in the Levant. Another striking parallel lies in the Tamil custom of Vadakkirundhu Uyir Thuraththal—renouncing life while facing the north.

This ancient practice was an honourable way of facing death:

* Wounds on the back in battle: A back wound symbolized cowardice. Warriors unable to endure such shame chose to fast to death while facing the north.

* Loss of honour: Those burdened by disgrace or moral blemish also chose this path of voluntary renunciation.

In memory of such individuals, hero stones (நடுகல் / Naṭukal) were erected, and they were venerated as martyrs. Tamil kings, likewise, were expected to die on the battlefield rather than accept defeat. This was a cultural expression of dignity in death—distinct from Sallekhana, the Jain vow of fasting unto death.

A parallel is found in the Bible. In 1 Samuel 31:1–5 (c. 1000 B.C.), King Saul of Israel, grievously wounded in battle, chose death by falling on his own sword rather than suffer humiliation at the hands of his enemies. His armor-bearer followed suit. This episode resonates deeply with the Tamil ethos of Vadakkirundhu Uyir Thuraththal.

Unfortunately, the Aryans distorted the meaning of these practices. The Naṭukal, a sacred memorial of valor and sacrifice, was reduced in their hands to a mere symbol of fertility, and from this misinterpretation arose the worship of the Lingam.



Thus, when we trace these cultural echoes across regions and civilizations, we begin to see a wider truth: the Dravidian spirit has not only shaped South Asia but also resonates across the ancient world, linking Tamil heritage with the moral struggles of Israel and beyond.

பதிகம் தந்த பைந்தமிழ்ப் பாவை :

காரைக்கால் அம்மையார்

மு. பழநிச்சாமி

நாகமலை, மதுரை-19
மின்னஞ்சல் : vmps834@gmail.com
கைபேசி :+91- 9489238328 / +91- 9488234727

’பிறையும் புனலும் அனல் அரவும்’ சூடும் சிவபரம் பொருளை ஏத்தி வழிபடும் பெற்றியர்தான் காரைக்கால் அம்மையார். கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று நம்பப்படுகிறது. நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகியோருக்குக் காலத்தால் முற்பட்டவர். இவரை, சுந்தரர் தன் திருத்தொண்டத் தொகையில் 'பேயார்க்கும் அடியேன்' எனக் குறிப்பிட்டுப் பேசுவார்.

திருத்தொண்டத் தொகையைச் சற்று விரித்துப் பாடிய நம்பியாண்டார் நம்பியும் தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் இவரைக் குறிப்பிட்டுப் பேசுவார். இதையொட்டி சித்தத்தைச் சிவன்பாலே வைத்துத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமானும் இவர் வரலாற்றை விரித்துப் பாடியுள்ளார். பின்வந்த நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் போன்றோர், பதிகம் பாடுவதற்குப் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கி வைத்த பெருந்தகை தான் காரைக்கால் அம்மையார். அவர் தொடங்கி வைத்த இந்த நீரூற்று, பன்னிரு திருமுறை ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாய், வழிகாட்டியாய் அமைந்து அவர்களைச் சேர்த்து இழுத்து வந்து நீந்தித் திளைக்க வழி வகை செய்தது.

பக்தி இலக்கியம் என்பதோர் புத்திலக்கிய வகையைத் தோற்றுவித்து, இறைவன் புகழை முன்னிலைப்படுத்தி, முதன் முதலில் பதிகம் பாடிய பெருமைக்குரியவர். ஒரு பொருள் குறித்து பத்துப்பாட்டுப் பாடினால் அந்தத் தொகுப்பு பதிகம் எனப்படும். அம்மையார் பாடிய திருவாலங்காட்டுத் திருப்பதிகம்தான் தமிழில் தோன்றிய முதல் பதிகமாகும். எனவே தான் அது மூத்த திருப்பதிகம் எனப் போற்றப்படுகிறது.

ஆதி அந்தாதி தந்த தமிழிசையின் தாய்

சைவ பக்தி இலக்கிய மரபினை தோற்றுவித்தவர் என்பதோடு, தமிழிசையின் தாய் என்ற பெருமையையும், புதிய இலக்கிய வடிவங்களையும்

யாப்பு வகைகளையும் கையாண்டு, தமிழிலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டவர் என்ற பெருமையையும் பெற்றவர் கரைக்கால் அம்மையார். இவர் இயற்றிய ஒப்பற்ற அற்புதத் திருவந்தாதி எனும் நூல், அந்தாதி முறையில், வெண்பா யாப்பில் பாடப்பட்ட முதல் நூல் என்பதால் அது ஆதி அந்தாதி என அழைக்கப்படுகிறது.

அந்தத்தை ஆதியாக வைத்துப் பாடுவது அந்தாதி. இந்நூல் முதற் பாடலின் இறுதிச் சொல் அடுத்த பாடலின் முதற் சொல்லாக வருமாறு அந்தாதி முறையில் அமைக்கப்பட்டது. இதன் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர். இதை முன்மாதிரியாகக் கொண்டு தான் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், கபிலர், பரணர், பட்டினத்தடிகள் போன்றோரின் அந்தாதிகளும் தோன்றி வளர்ந்து செல்வாக்குப் பெற்றன.

போர்க்களத்திலும் இடுகாடு- சுடுகாடுகளிலும் உலவிக்கொண்டிருந்த பேய் மகளிரை, சிவபெருமான் திருக்கூத்தாடும் ஈமக்காட்டிற்கு அழைத்து வந்தவர் அம்மையார். அம்மையார் தொடங்கி வைத்த மேற்குறித்த விவரணைகளின் தொடர்ச்சியாக, 'பேய்மகள் என்ற புலனெறி வழக்கின் அடிப்படையில்' உருவானதோர் புத்திலக்கியம்தான் பரணி எனும் சிற்றிலக்கியம். இதன் அடிப்படையில் தமிழில் முதன்முதலில் எழுந்த பரணி தான் ஜெயங்கொண்டரின் கலிங்கத்துப்பரணி. இப்பரணியில் போர்க்களக் காட்சிகள் பாடத் தளம் அமைத்துத் தந்தவர் அம்மையாரே எனலாம்.

பதிக இலக்கியம், பரணி இலக்கியம், அந்தாதி இலக்கியம், போன்ற இவ்வாறான இலக்கியங்களுக்கு மூலகர்த்தாகவும், சிவஞானச் செந்திருவாகவும், தனித்துவமிக்க பெண்ணரசியாகவும் திகழ்ந்த அம்மையார், தேனூறும் தமிழில் வாயூறப் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. அவை :

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 11 பாடல்கள்.

மூத்ததிருப்பதிகம் 11 பாடல்கள்.

திரு இரட்டை மணிமாலை 20 பாடல்கள்.

அற்புதத் திருவந்தாதி 101 பாடல்கள்.

(11 ±11 ± 20±101=143) இப்பொழுது வழக்கத்தில் உள்ளபடி அம்மையார் பாடிய பாடல்களின் மொத்த எண்ணிக்கை 143 ஆகும்.

இனி இவரது பாடல்களில் உள்ள இடைச் செருகல் பற்றிப் பார்ப்போம்.

அம்மையாரின் ஆளுமையை ஓரம் கட்டும் போக்கு

இடைச் செருகல் என்பது, பழமையான தமிழ் நூல்களில், பிற்காலத்தவர் மூலப் பிரதியில் இல்லாத தங்கள் கருத்தைப் பாடலாக்கிப் புனைந்து சேர்த்து விடுவதாகும். இவை பாரம்பரியமாக அந்நூலோடு ஒட்டி உறவாடி வேறுபாடு தெரியாமல் இணைந்தே காணப்படும். கம்பராமாயணம், கோவை கம்பன் கழக பதிப்பில், நூற்றுக்கணக்கான பாடல்களை இடைச்செருகல் என இனங்கண்டு ஒதுக்கி, அவற்றைத் தனிப் பகுதியாகப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர்.

இது போலவே அம்மையார் பதிகத்தில் திருக்கடைக்காப்பு எனும் பதினோராவது பாடலைப் பாடி இடைச்செருகலாகப் புகுத்தி இணைத்துள்ளனர். அம்மையார் இடுகாடு மற்றும் சுடுகாட்டுப் பேய்களைப் படம் பிடித்துக் காட்டிப் பாடியுள்ளார். இவ்வாறு இவர் பேய்களைப் பாடியுள்ளதால் இடைச்செருகலான இந்த பதினோராவது பாடலில் 'காரைக்கால் பேய்' எனும் தொடரையும் தங்கள் கருத்தாகப் பாடி இணைத்துச் சேர்த்து விட்டனர் எனலாம்.

இடைச் செருகல் என்பதற்குச் சான்றாகக் கொள்ளக் தக்கவை

1) பத்துப் பாடல்களைக் கொண்டது பதிகம் எனப்படும். "கோதிலோர் பொருளைக் குறித்து ஐயிரண்டு பா-வைத் துரைப்பது பதிகம் ஆகும்". (முத்து வீரியம்). எனவே பதிகப் பாடல்களின் எண்ணிக்கை வரம்பு, பத்து என்பது தெளிவுறும். இந்த எண்ணிக்கை வரம்பை மீறி மூத்த பதிகத்தில் இடம்பெற்றுள்ள பதினோராவது பாடல் அம்மையார் பாடலன்று என்பது புரியும்.

2) அம்மையாருக்குப் பின் வந்த நாவுக்கரசர் பெருமான் தன் பதிகங்களில் 11-வது பாடலாக 'திருக்கடைக்காப்பு' பாடவில்லை. அம்மையார், தன் பதிகத்தில் திருக்கடைக் காப்புப் பாடல் பாடியிருந்திருந்தால் அதையொட்டி நாவுக்கரசர், தன் பதிகப் பாடல்களில் திருக்கடைக்காப்புப் பாடலைப் பாடிச் சேர்த்திருப்பார். எனவே இதையும் ஒரு சான்றாகக் கொள்ளலாம். ஞானசம்பந்தர்தான், முதன்முதலாகத் தன் உயர்வையும் உன்னதத்தையும் குலப் பெருமையையும் பதிகத்தின் பலன்களையும் சுட்டிக்காட்டிப் பெருமை சேர்க்க, 10 எனும் எண்ணிக்கையை மாற்றி, திருக்கடைக் காப்பாக 11-ஆம் பாடலைச் சேர்த்து உலவ விட்டவராவார். இதை அடியொட்டி, பின்வந்த சுந்தரரும் பிறரும்

திருக்கடைக்காப்பு எனும் பதினோராவது பாடலைச் சேர்த்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டு விட்டனர்

3) 'சிவகதி' எனும் சொல்லாட்சி, அம்மையாரின் திருக்கடைக்காப்புப் பாடலில் காணப்படுகிறது. ஆனால் அம்மையாரின் பாடல்களில் 'சிவன்' எனும் சொல் ஓரிடத்தில் கூட இடம் பெறவில்லை. எனவே இதையும், இப்பதினோராம் பாடல் இடைச் செருகல் என்பதற்குரிய வலுவான சான்றாகக் கொள்ள முடியும்.

மேற்கண்ட இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, இது இடைச்செருகல்தான் என்பது தெள்ளிதின் விளங்கும். அத்துடன் அம்மையார், பதினோராம் பாடலில் இடம் பெற்றுள்ளபடி, தன்னைக் 'காரைக்கால் பேய்' எனக் கூறிக் கொள்ளவில்லை என்பதும் புலனாகும்.

அம்மையார் பாடல்களின் வைப்பு முறையும் அவரை ஓரங்கட்டும் போக்கும் :

சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர்கள், காலத்தால் முற்பட்ட ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த, காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகத்தையும் அதைச் சேர்ந்த பிற பாடல்களையும் அல்லவா முதல் திருமுறையாக இடம் பெறச் செய்திருக்க வேண்டும். சம்பந்தர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாக்கி அதையொட்டி, பன்னிரு திருமுறைகளையும் தொகுத்துள்ளனர்.

திருமுறைகளைத் தொகுத்தவராகக் கருதப்படும் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த நம்பியாண்டார் நம்பி, பதினோராம் திருமுறையில் பலர் எழுதிய நூல்களோடு சேர்த்து, பத்தோடு பதினொன்றாக அம்மையார் பாடல்களை வைத்துள்ளார்.

இடைச் செருகல் பாடல்களில் அம்மையாருக்குப் பேய் என்று பெயரிட்டு, போதாததற்கு அவர் பாடல்களையும் உதாசீனப்படுத்தும் வகையில் 11-ஆம் திருமுறையில் கொண்டு வந்து சேர்த்து வைத்துள்ளனர்.

பெரியபுராணத்திலும் இவரது கதை 24-ஆவது புராணமாக 1717-1782 ஆகிய 75 பாடல்களில் அமையப்பெற்றுள்ளது...

பஞ்சபுராணம் பாடும் மரபு சைவக் கோயில்களில் உண்டு. அவற்றில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருப்பல்லாண்டு (9-ம் திருமுறை) ஆகியன மட்டும் இன்றுவரை பாடப் பெற்று வருகிறது. இம்மரபில் காரைக்கால் அம்மையார் பாடல் இடம்பெறாதது கவனிக்கத்தக்கது. இவ்வாறு, தனித்துவமிக்க பெண்ணரசியாக திகழ்ந்த அம்மையாரின் ஆளுமைப் பண்பையெல்லாம், ஆணாதிக்க மனப்பாங்கினாலோ அல்லது பிறவற்றினாலோ புறந்தள்ளி, பின்னுக்குத் தள்ளப்பட்ட சூழலை நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இவரைப் பற்றிக் குறிப்பிடுபவர்களில் சுந்தரரும் நம்பியாண்டார் நம்பியும் பிரதானமானவர்கள். ஆணாதிக்க மரபு சார்ந்த இவர்கள் இருவரும் பார்ப்பனர்கள். பார்ப்பனர் அல்லாதவரும், பெண் பிறவிக்கு வீடுபேறு இல்லை எனும் கூற்று நிலவிக் கொண்டிருந்த அக்காலத்துப் பெண்பாற் கவிஞருமாய் இருந்த அம்மையாருக்கு, இவர்கள் இருவரும் உரிய இடம் தராததில் வியப்பு எதுவுமில்லை. சுந்தரர், தன் திருத்தொண்டத் தொகையுள், மிகச் சாதாரணமான நாயன்மார்களுக்கும் பிறர்க்கும் அடைமொழி தந்து பாடியுள்ளார். காட்டாகக் கூற வேண்டுமானால்,

'ஒலிபுனல் சூழ்ந்த சாந்த மங்கை நீல நக்கற்கும் அடியேன் '

'இலை மலிந்த
வேல் நம்பி எறிபத்தற்கு அடியேன்'

'திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கு அரையன் தன் அடியார்க்கும் அடியேன்'

'மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்'

'கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்'

என்றெல்லாம் அடைமொழி தந்து பாடியுள்ளார்.

மூத்த திருப்பதிகம் பாடியவரும் பதிகப் பெருவழி அமைத்துத் தந்த சிறப்பிற்குரியவருமானவர்தான் அம்மையார். அவரைக் குறிப்பிடும் பொழுது, ஊர்ப் பெயரோ, அம்மை என்ற சிறப்பு பெயரோ போன்ற எதுவும் இல்லாமல் மொட்டையாக, 'பேயார்க்கும்' அடியேன் எனும் ஒற்றைச் சொல்லால் சுட்டி, ஓரங்கட்டும் மனோபாவத்தைக் காட்டியுள்ளார் எனலாம்.

சேக்கிழார், தன் பெரிய புராணத்தை, சுந்தரருடைய பாடலையும் நம்பியாண்டார் நம்பி பாடலையும் முதல் நூல், வழி நூலாகக் கொண்டு பாடியதால், அந்த மரபார்ந்த முறையை மீறாமல் அதைப் பின்பற்றியே, தன் விரி நூலைப் பாடியுள்ளதாகச் சொல்லி ஒதுங்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

இவ்வாறாகக் காரைக்கால் அம்மையார் பற்றிப் பாடிய இம்மூவரும் ஏதோ ஒரு வகையில் அம்மையாரை ஒதுக்கி ஓரங்கட்டக் காரணமாய் அமைந்துள்ளனர் எனலாம். இது ஒரு புறம் இருக்க.

இவ்வாறு பழைய தடத்திலிருந்து வேறுபட்டுச் சிந்தித்து எண்ணி எழுதுவது பலருக்குப் பிடிக்காத ஒன்று.

பக்தி இலக்கியங்களை வாசிக்கப் பயன்படுத்துவதை விட பூசிக்கப் பயன்படுத்தும், சைவர்கள் அநேகம். இவ்வாறு விடாப்பிடியான சைவப் பற்று உடையவர்கள் எனத் தங்களைக் காட்டிக் கொள்ளும் விபூதிப் பூச்சுப் பேச்சாளர்கள், இப்பதிகங்களில் உண்மையையோ வரலாற்றுத் தடயங்களையோ தேடுதல் கூடாது என்பர்.

காரைக்கால் அம்மையார் பற்றிய புராணக்கதை

அம்மையார் வரலாற்றைப் பெரியபுராணம், காரைக்கால் தல புராணம், பிரம்மாண்ட புராணம் முதலான புராணங்கள் எடுத்துரைக்கின்றது. இவற்றுள் விரவிக் கிடக்கும் மெய்யும் பொய்யும் கற்பனையும் பொங்கி வழியும் காரைக்கால் அம்மையார் கதை நாடறிந்த ஒன்று. இக்கதை குறித்தும் பல எதிர்க் கருத்துக்கள் ஆய்வு உலகில் உண்டு என்பதையும் அறிவேன். நான் இங்கு கதை சொல்லப் போவதில்லை. கதையில் இடம்பெறும் திருப்புமுனையாக உள்ள சில செய்திகளை மட்டும் சுட்டிக்காட்டி உண்மை தேட முயன்று உள்ளேன்.

1) இக்கதையில் மிகமுக்கியப் பங்கு வகிப்பது மாங்கனி. அம்மையார் காலத்தில் இருந்து 500 ஆண்டுகளுக்குப் பின்வந்த சேக்கிழார் பாடுகிறார் என்பதை மனதில் இருத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

2) இக்கட்டான தருணத்தில் இறைவனை வேண்டிய உடனே இரண்டு மாங்கனிகள் கையில் வந்து தங்கியமை மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்வு அல்லவா. அவர் வாழ்வில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தக்

காரணமாக இருந்த மாங்கனி பற்றி, தன் பாடல்களில் எங்கேனும் ஓரிடத்தில் இலைமறை காயாகக்கூட குறிப்பிடவில்லை.

3) இவரைப் பற்றி முதன் முதலில் தொட்டுக்காட்டிய சுந்தரர் தந்த குறிப்பில், 'பேயார்' என்பதைத் தவிர மாங்கனி பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை.

4) அடுத்துப் பாடிய நம்பியாண்டார் நம்பி பாடலிலும் மாங்கனி பற்றிய குறிப்பு ஏதும் இல்லை.

5) 500 ஆண்டுகளுக்குப் பிற்பட்டு வந்த சேக்கிழார் மட்டுமே, புதிய வரவாக மாங்கனியைக் கொண்டு வந்து காட்டி, தன் கதைக்கு மெருகேற்றிக் களைகட்டும் வகையில் பாடிச் செல்கிறார். எனவே இது முற்றிலும் சேக்கிழாரின் கற்பனைக் கதையே என்பது தெளிவுறும்.

6) சேக்கிழார், காரைக்கால் அம்மையாரைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் புனிதவதி, தனதத்தன், தர்மவதி, பரமதத்தன், நிதிபதி முதலான பெயர்கள் யாவும் இயற்பெயராய் இல்லாமல் காரணப் பெயராய் அமைந்துள்ளது கண்கூடு. இது ஒரு கற்பனைக் கதை என்பதற்கு இதுவும் ஓர் சான்றாகித் திகழ்கிறது எனலாம்.

கயிலை மலைக் காட்சி

கயிலை மலைமீது கைகளால் நடந்து சென்றவரை, சிவபெருமான், 'நம்மைப் பேணும் அம்மைகாண்' எனத் துணைவியாரரிடம் சொல்லி,

'அம்மையே வருக' என்றழைத்து, 'வேண்டுவன கேள்' எனும் செய்தி பற்றிய குறிப்பு, சிவபெருமானை நேரில் சென்று கண்டு வழிபட்டு, பெருமானால் 'தாய்' எனச் சொல்லித் துதிக்கப்பட்டமை என்பது யாருக்கும் வாய்க்காத எத்தனை பெரிய அரிய நிகழ்வு. இந்நிகழ்வு அம்மையாரின் அங்கத்திலெல்லாம் பொங்கிப் பெருகும் தனியொரு இன்ப அதிர்வல்களை அல்லவா தோற்றுவித்திருக்கும். இவ்வாறான நேரில் சென்று கண்ட உணர்வுகளின் வெளிப்பாடாய், அம்மையார் பாடல்களில் ஓரிடத்தில் கூட சிவபெருமானைக் கண்டு தொழுத காட்சி, நன்றிப் பெருக்கின் வெளிப்பாடாய் வெளிப்பட்டு வரவில்லையே.

மாணிக்கவாசகர், தன் திருவாசகம் திருவண்டப் பகுதியில், பட்டவர்த்தனமாக முரசறைந்து முழக்கி வெளிப்படுத்தும் வகையில், இறைவனைக் 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' எனப் பேசுகிறார்.

அம்மையார், கயிலை சென்று இறைவனைக் கண்டிருந்தால், அந்த இன்ப அனுபவத்தைத் தன் பாடல்களில் பன்னிப் பன்னிப்பேசி மகிழ்ந்து பாடியிருப்பார் அல்லவா? மாறாக, அவர் தன் பாடல்களில் சிவபரம் பொருளின் அருளைப் பெறாது, அதைப் பெற வேண்டி, ஏங்கி இளைத்து வேண்டி நின்றதைத்தான் வெளிப்படுத்துகிறார்.

'இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும் (அற்புதத்திருவருந்தாதி' -2)

(அவர் என் துன்பத்தை நீக்காவிட்டாலும் என்மீது இரக்கப்படாவிடினும்)

'ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டால்

கேளாதது என்கொலோ?' (அற்புதத் திருவருந்தாதி -4)

(நான் என் அல்லலைப் பல தடவை முறையிட்டும் இறைவன் கேளாமல் இருக்கிறான்.)

'தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்

எனக்கே அருளாவாறு என்கொல்?' (அற்புதத் திருவந்தாதி- 44)

(எனக்கு அருள் செய்யாமல் இருப்பது ஏன்?)

'அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்

இன்றும் திருவுருவங் காண்கிலேன் – என்றுந்தான்

எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்

எவ்வுருவோ நின்னுருவம் ஏது?' (அற்புதத் திருவனந்தாதி-61)

(சிறு வயதில் உன் உருவம் எது என்று தெரியாமலே உன்மீது பக்தி கொண்டேன்; வயதான இப்போதும் அதை நான் காணவில்லை. உன் இறைவனின் உருவம் எது என்று வினவுகிறவர்களுக்கு என்ன விடை சொல்வேன்? உன்னுருவம் எப்படிப்பட்டது?)

கடவுளை நேரிற் கண்டு தொழுதவர் இவ்வாறு மாறுபட்டுப் பாடுவாரா?. இவ்வாறு இறைவன் திருவருளை வேண்டிக் கவலை கொண்டு பாடியவர், இறைவனைக் கைலையில் கண்ணால் கண்டு தொழுததாகச் சொல்லப்படுவது எல்லாம் வெறும் கற்பனைக் கதைதான் என்பது தெளிவுறும்.

முறையான வரலாறும் வகைப்பாடும் இல்லாத காரணத்தால் உண்மைகள் திரிக்கப்பட்டு அல்லது மாற்றுருவம் பெற்று, அதுவே உண்மையென காலப்போக்கில் நம்பப்படுகின்றன.

அம்மையாரைப் பற்றிய பொதுவான சில செய்திகள்

பக்தி இலக்கியம் என்பதோர் புத்திலக்கிய வகையை தோற்றுவித்து பதிகம் பாடும் மரபை உருவாக்கியவர். சதக இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடி.

சைவத்திற்கு ஒரு திட்டமான வடிவம் கொடுத்து அது தனிப்பெரும் சமயமாக வளர்வதற்கு அடித்தளம் இட்டவர்.

சமயம் என்பது அறிவை மட்டும் சார்ந்தது அன்று; இதயத்தோடு தொடர்புடையது என்பதை எடுத்துரைத்தவர்.

வெண்பா எழுதுவது கடினம் என்ற சூழலில் அந்தாதி நிலையில் அமைந்த அற்புதத் திருவந்தாதி மூத்தது; புதுமையானது; அம்மையாருக்கு மகுடமிடுவது. இறைவனைப் பற்றிய பாடல்களை இசைப் பண்ணில் அமைக்கும் மரபை முதன் முதலில் உருவாக்கி, தமிழிசையின் தாய் என்ற பெருமையைப் பெற்றவர்.

ஆலயங்களில் மற்ற நாயன்மார்கள் நின்ற கோலத்தில் காட்சிதர, அம்மையார் மட்டும் இருந்த கோலத்தில் (அமர்ந்த நிலையில்) உரிமை பெற்ற தனிச்சிறப்பிற்கு உரியவராகிறார்

இறைவன் நடனமிடும் பொழுது கீழே அமர்ந்து இசைத்தபடி இருக்கும் பெற்றியைப் பெற்றவர். புதுச்சேரி மாநில காரைக்காலில், அம்மையாரை மூலவராகக் கொண்ட காரைக்கால் அம்மையார் கோயில் சிறந்து விளங்குகிறது.

குடைவரைகள் சூழ் மதுரை

சி. அபிஷேக்

வரலாற்று ஆர்வலர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

கள ஆய்வில் தோளோடு தோள் கொடுத்து கூடவே பயணித்த நண்பர்களான பிரபு, மாலன், ராம்ஜி, சேதுபதி, ஆனந்த், இராம்குமார் ஆகியோர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

மதுரை மாவட்டத்தில் முற்கால பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட குடைவரைகள் ஒன்பது உள்ளது.

இதில் மாங்குளத்தில் உள்ள குடைவரை மட்டும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது.

இக் குடைவரைகள் அனைத்துமே கி.பி. 8 ம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகள்.

குடைவரை பெயர்கள் :

1. யோக நரசிம்ம பெருமாள் கோயில் - யானைமலை, நரசிங்கம்
2. லாடன் கோயில் - யானை மலை, நரசிங்கம்
3. சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் - திருப்பரங்குன்றம்
4. உமையாண்டவர் குடைவரை கோயில் - தென்பரங்குன்றம்
5. இடைச்சி மண்டபம் - அரிட்டாபட்டி
6. முற்றுப்பெறாத குடைவரை - மாங்குளம்
7. உதயகிரீசுவரர் சிவன் கோயில் - குன்னத்தூர்
8. அஸ்தகிரீசுவரர் சிவன் கோயில் - குன்னத்தூர்
9. நீலகண்டேசுவரர் சிவன் கோயில் - குன்னத்தூர்

இவை மத்திய தொல்லியல் துறை, தமிழக தொல்லியல் துறை மற்றும் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதில், தென்பரங்குன்றம் உமையாண்டவர் குடைவரை கோயில் மட்டும் மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது.

லாடன் குடைவரை, அரிட்டாபட்டி குடைவரை, உதயகிரீசுவரர், அஸ்தகிரீசுவரர் ஆகியவை தமிழக தொல்லியல் துறை கட்டுப்பாட்டிலும்.

யோக நரசிம்மர் கோயில், சுப்ரமணிய சுவாமி கோயில், நீலகண்டேசுவரர் கோயில் ஆகியவை அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

மாங்குளத்தில் உள்ள முற்றுப்பெறாத குடைவரையானது தமிழக தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், அதற்கான எந்தவொரு அறிவிப்பு பலகையும் இல்லை. அதனால், இக்குடைவரை யாருடைய கட்டுப்பாட்டில் இருப்பது என்று அறியமுடியவில்லை.

இதில் சேர்க்கப்படாத பாறை வெட்டு ஒன்று அருவிமலையில் உள்ளது. பாறையை சதுரமான கோணத்தில் ஆழமாக வெட்டி உள்ளனர் அவ்வளவுதான். இதன் அருகே பிற்கால பாண்டியர் காலத்தில் எழுப்பப்பட்ட சிவன் கோயில் ஒன்றும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது முழுமையான தோற்றம் பெறாமையால் இதனை குடைவரை பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

குடைவரைகளைத் தேடிய என்னுடைய பயணத்தில், மதுரையில், நான் முதன்முதலாக குடைவரைக் கோயிலை பார்த்த இடம் திருப்பரங்குன்றம் சுப்ரமணிய சுவாமி கோயில் தான்.

என்னுடைய கள ஆய்வுகளின் அடிப்படையில் நான் பார்த்த குடைவரைகளின் வரிசை படியான தகவல்களை கீழே இணைக்கிறேன்.

1) சுப்ரமணிய சுவாமி குடைவரைக் கோயில் - திருப்பரங்குன்றம்

2) உமையாண்டவர் குடைவரை - தென்பரங்குன்றம் | 30.10.2011

3) யோக நரசிங்கப் பெருமாள் கோயில் - யானைமலை | 21.11.2023

4) லாடன் குடைவரைக் கோயில் - யானைமலை | 21.11.2023

5) உதயகிரீசுவரர் சிவன் கோயில் - குன்னத்தூர் | 05.12.2023

6) அஸ்தகிரீசுவரர் சிவன் கோயில் - குன்னத்தூர் | 05.12.2023

7) நீலகண்டேசுவரர் சிவன் கோயில் - குன்னத்தூர் | 05.12.2023

8) இடைச்சி மண்டபம் - அரிட்டாபட்டி | 27.12.2024

9) முற்றுப் பெறாத குடைவரை - மாங்குளம் | 11.01.2025

அரிட்டாபட்டி, திருப்பரங்குன்றம், தென்பரங்குன்றம், குன்னத்தூர் (3) ஆகிய இடங்களில் உள்ள குடைவரைகள் சிவனுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

யானைமலை, யோக நரசிம்மர் குடைவரையானது நரசிம்மருக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

யானை மலை, லாடன் குடைவரையானது முருகன் மற்றும் அவரது துணைவியாருக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் அடங்கும் மலைகளானது,

1. திருப்பரங்குன்றம் - சுப்ரமணிய சுவாமி குடைவரை, உமையாண்டவர் குடைவரை

2. யானை மலை - யோ நரசிம்மர் குடைவரை, லாடன் குடைவரை

3. கழிஞ்சமலை - இடைச்சி மண்டபம் குடைவரை

4. பாண்டமுத்து மலை - முற்றுப்பெறாத குடைவரை

5. குன்னத்தூர் மலை 1 - உதயகிரீசுவரர் குடைவரை, அஸ்தகிரீசுவரர் குடைவரை

6. குன்னத்தூர் மலை 2 - நீலகண்டேசுவரர் குடைவரை

மொத்தம் 6 மலைகளில், 9 குடைவரைகள் உருவாக்கப்பட்டுள்ளது.

எண்ணிக்கையில் அதிகமான குடைவரைகள் உள்ள பகுதி என்றால், அது குன்னத்தூர் மலை தான். இங்குள்ள ஒரு மலையில் கிழக்கு, மேற்கு திசைகளில் என இரண்டு பகுதிகளில் இரண்டும், அதனருகே உள்ள மலையின் கிழக்குப் பகுதியில் ஒன்றுமாக, அருகருகே மொத்தமாக மூன்று குடைவரைக் கோயில்களை பார்க்கலாம்.

திருப்பரங்குன்றம் மலையின், வடக்குப்பகுதியில் ஒன்றும், தெற்குப்பகுதியில் ஒன்றுமாக மொத்தத்தில் இரண்டு குடைவரைக் கோயில்கள் உள்ளன.

யானை மலையின், மேற்குப் பக்கச்சரிவில் இரண்டு குடைவரைகள் அருகருகே அமைந்துள்ளது.

கழிஞ்சமையின், இறுதியில் தென் மேற்குப் பகுதியில் ஒரு குடைவரை உருவாக்கப்பட்டுள்ளது.

பாண்டமுத்து மலையின் மேற்குப் பக்கச்சரிவில், முற்றுப்பெறாத குடைவரை உள்ளது.

இனி, இக்குடைவரைகளில் இடம் பெற்றுள்ள திருமேனிகளின் (புடைப்புச் சிற்பங்கள்) பெயர்களைப் பார்க்கலாம் :

1) திருப்பரங்குன்றம் மலை

• *முதல் குடைவரை - சுப்ரமணிய சுவாமி குடைவரைக் கோயில் (வடக்குப் பகுதி)*

• *அரசு : முற்கால பாண்டியர் காலத்தைச் சேர்ந்தது.*

• *காலம் : கி.பி. 8 ம் நூற்றாண்டு, பராந்தக நெடுஞ்சடையனின் ஆட்சியில், சாத்தன் கணபதி என்பவரால் உருவாக்கப்பட்டுள்ளது.*

• *சுப்ரமணிய சுவாமி குடைவரைக் கோயிலில் உள்ள புடைப்புச் சிற்பங்கள் / தாய்பாறை திருமேனிகளின் பெயர்கள்,*

1. பரங்கிரிநாதர் (சிவன் - லிங்க வடிவம்)

2. சோமாஸ்கந்தர்

3. திருமால்

4. முருகன்

5. துர்க்கை

6. விநாயகர்

7. சதுர நடனமாடும் நடராசன்

8. சப்த மாதர்கள்

9. உமாமகேசுவரர்

10. நரசிங்க மூர்த்தி

11. வைகுண்டநாதர்

12. வராக மூர்த்தி

13. கங்காதரர்

14. கருடாழ்வார்

15. துர்கா தேவி

16. கஜலட்சுமி

17. ஜேஷ்டா தேவி என்கிற மூத்த தேவி

18. இராவணன்

19. உமையாள்

20. முருகன் (சுப்ரமணியர்)

21. தூவார பாலகர்கள்

22. அண்டாபரனார்

23. உக்கிர மூர்த்தி

• இரண்டாவது குடைவரை - உமையாண்டவர் குடைவரை (மலையின் தெற்குப் பகுதியில் உள்ள)

• அரசு - இது முற்கால பாண்டியர் காலத்தைச் சேர்ந்தது

• காலம் - கி.பி. 8 ம் நூற்றாண்டு - தற்போதுள்ள சிற்பங்கள் பிற்கால பாண்டியர் காலம், கி.பி. 13 ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

• இங்குள்ள திருமேனிகளின் பெயர்கள் :

1. உமையாண்டாவர் (மூலவர்)

2. நடராஜர்

3. வள்ளி தெய்வானையுடன் முருகன்

4. விநாயகர்

5. பிரசன்ன தேவர்

6. அவரது மாணவர் (?)

7. மாணிக்கவாசகர் (!?)

8. அப்பர்

9. திருஞானசம்பந்தர்

10. சுந்தரர்

11. பைரவர்

2) யானை மலை - நரசிங்கம்

• முதல் குடைவரை - யோக நரசிம்மர் குடைவரைக் கோயில் (மலையின் மேற்குச் சரிவு)

• அரசு - முற்கால பாண்டியர்

• காலம் - கி.பி. 770 ம் ஆண்டில் மதுரையை அரசாண்ட

மாறஞ்சடையன் பராந்தக நெடுஞ்சடையன் என்னும் பாண்டிய மன்னன் காலத்தில் உருவாக்கப்பட்டது.

• இங்குள்ள திருமேனி பெயர்:

1. யோக நரசிம்மர்

• இரண்டாவது குடைவரை - லாடன் குடைவரைக் கோயில் (மலையின் மேற்குச் சரிவு)



• அரசு - முற்கால பாண்டியர் காலம்

• காலம் - கி.பி. 8 ம் நூற்றாண்டு

• இங்குள்ள திருமேனிகளின் பெயர்கள்:

1. துணைவியாருடன் முருகன் (மூலவர்)

2. தூவர பாலகர்கள் (2)

3. மன்னன் உருவம் (!?)

4. லாடன்

3. கழிஞ்சமலை - அரிட்டாபட்டி

• இருப்பிடம் - இடைச்சி மண்டபம் (மலையின் தென்மேற்குச் சரிவு)

• அரசு - முற்கால பாண்டியர்

• காலம் - கி.பி. 8 ம் நூற்றாண்டு & பிற்கால பாண்டியர்

• இங்குள்ள திருமேனிகளின் பெயர்கள்:

1. லிங்கம் (தாய் பாறை)

2. தூவர பாலகர்கள் (பிற்கால பாண்டியர் காலமாக இருக்கலாம்)

3. லகுலீசர்

4. கணபதி

5. தீர்த்தங்கரர்

இக்குடைவரையின் காலம் பற்றிய நேரடிச் சான்றுகள் இல்லை. குடைவறைகளின் பொதுவான காலம் மற்றும் சிறப்கக்கலை அடிபடையில் ஆய்வாளர்களால், காலம் கணிக்கப்பட்டுள்ளது.

4. பாண்டமுத்து மலை - மாங்குளம்

• முற்றுப்பெறாத குடைவரை

• காலம் - பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் இருப்பதாலும், இதன் அருகிலேயே முற்கால பாண்டியர் காலத்தில், சிவனுக்காக உருவாக்கப்பட்டுள்ள மற்றொரு குடைவரைக் கோயில் இருப்பதன் அடிப்படையிலும் இது பாண்டியர் காலத்தினைச் சேர்ந்ததாக கருதப்படுகிறது.



5. குன்னத்தூர் மலை 1

இக்குடைவரைகளின் காலம் பற்றிய நேரடிச் சான்றுகள் இல்லை. குடைவறைகளின் பொதுவான காலம் மற்றும் சிறப்கக்கலை அடிபடையில்

ஆய்வாளர்களால், காலம் கணிக்கப்பட்டுள்ளது.

• முதல் குடைவரை - உதயகிரீசுவரர் சிவன் கோயில் (மலையின் கிழக்கு பக்கச்சரிவில் உள்ளது)

• அரசு - முற்கால பாண்டியர்

• காலம் - கி.பி. 8 ம் நூற்றாண்டு

• இங்குள்ள திருமேனிகளின் பெயர்கள் :

1. லிங்கம் (தாய்பாறை)

2. துவாரபாலகர்கள் (2)

3. கணபதி

• இரண்டாவது குடைவரை - அஸ்தகிரீசுவரர் சிவன் கோயில்

• அரசு - முற்கால பாண்டியர்

• காலம் - கி.பி. 8 ம் நூற்றாண்டு

• இங்குள்ள ததிருமேனியின் பெயர் :

1. லிங்கம் (தாய்பாறை)

6. குன்னத்தூர் மலை 2

• *இருப்பிடம் - மலையின் கிழக்குப் பகுதிச் சரிவு*

• *அரசு - முற்கால பாண்டியர்*

• *காலம் - கி. பி. 8 ம் நூற்றாண்டு (குடைவரைகளின் பொது ஆண்டு, சிற்பக்கலை அடிபடையில்)*

• *இங்குள்ள திருமேனிகளின் பெயர்கள் :*

1. லிங்கம் (தாய்பாறை)

2. துவாரபாலகர்

3. அனுமன் (?)

4. கணபதி

5. சப்த கன்னியர்

• *குடைவரை கோயில்கள் மூலம் நாம் அறிந்துக் கொள்வது,*

1. ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய, சான்றுகள் அடிப்படையிலான வரலாறு (Primary Source)

2. சிற்பக்கலை

3. அளவியல் (Metrology)

4. பாறை தேர்ந்தெடுத்தல் (Rock Selection)

5. இடம் தேர்ந்தெடுத்தல் (Place Selection)

6. கட்டிடக்கலை

7. குடைவரை கோயில்களுக்கு ஆகமங்கள் இல்லை

8. குடைவரை பாதுகாப்பு முறைகள்

9. கல்வெட்டு தகவல்கள்

10. மன்னர் பற்றிய தகவல்கள்

11. எழுத்துக்களின் வளர்ச்சி மற்றும் எழுத்துக்களின் வகைகள் (கல்லெழுத்துக்கலை)

12. மன்னர்களின் சமயத் தொண்டு

13. தனித்தன்மை

14. சிறந்த திட்டமிடல்

15. வேலையை திறம்பட முடித்தல்

இங்கு கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் கள ஆய்வுகள் மூலம் கண்டது, கேட்டது, பார்த்தது, படித்தது மற்றும் தேடியது.





பாதுகாக்கப்பட்ட சின்னம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இச்சின்னம் 1966 ஆம் வருடத்துப் புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் எச்சங்கள் எனும் சட்டத்தின் (1966 எண் 25) கீழ் கொண்டுவரப்படுகிறது.

இதை யாராவது சேதப்படுத்தினாலோ அகற்றினாலோ, அழிவுக்குட்படுத்தினாலோ சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்.

இத்தண்டனை மூன்று மாதம் சிறை அல்லது ரூபாய் ஐந்தாயிரம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தொல்லியல் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 29 ன் படி விதிக்கப்படும்.

இத்தகவல்களை யாரும் தங்களுடைய இணையதள கணக்குகளில் (website or Blog) பதிவேற்றம் செய்ய அனுமதி முற்றிலுமாக மறுக்கப்படுகிறது. அனுமதி கேட்காமல் பகிர்ந்து, பெயரை போட்டுவிட்டு அதான் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதே என்ற பேச்சுக்கூடாது முகநூலில் (Facebook) தாராளமாக பகிரலாம்.

மாங்குளத்தில் உள்ள முற்றுப்பெறாத குடைவரையை, பாதுகாப்பு வேலிகள் அமைத்து பாதுகாக்கும் படியாக கேட்டுக் கொள்கிறேன் M. K. Stalin Thangam Thenarasu



தொழிலில் வணிகத்தில் சிறந்த தொல் தமிழ்நாடு !

டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்
புதுச்சேரி



தமிழ் நாட்டின் தொல்லியல் ஆய்வுகளில் அரிக்கமேடு, கொடுமணல், கீழடி போன்ற இடங்களில் கிடைத்த அனைத்து சான்றுகளின் அடிப்படையில்நோக்கும் போது அங்கே, வெற்றிகரமான, பலதரப்பட்ட தொழிற்துறைகளைக் கொண்டதாக இருந்தது தெரியவருகிறது.

அரிக்கமேடு, கீழடி கொடுமணலில் உருவாக்கப்பட்ட உருக்கு, எஃகு மற்றும் பலவகை பாசி மணிகள் எகிப்து, உரோமை போன்ற வெளி நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன.

அதாவது இவைகள் சிறந்த தொழில் நகரமாகவும் ,வணிகநகரமாகவும் இருந்து வந்துள்ளன .

தாமிர இரும்பு, வெண்கலத்தாலான கருவிகள், ஆயுதங்கள், பிற பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகள், செங்கலையும் மண்பாண்டங்களையும் சுடுவதற்கான சூளைகள், கல் கருவிகளைத் தயாரிக்கும் பட்டறைகள், பாசி மாலைகளையும், நகைகளையும் தயாரிப்பதற்கான தொழிற்கூடங்கள் இத்தகைய நகரங்களிலும் இருந்தமைக்கு சான்றுகள் ஆய்வில் கிடைக்கிறது

அதோடு, குயவர்கள், தச்சர்கள், நெசவாளர்கள், முத்திரை தயாரிப்பவர்கள் ஆகியோர்களுக்கெனத் தனித்தனியான மையங்களும் இருந்தன

ஆய்வு மேற்கொண்ட அனைத்து சிறிய பெரிய நகரங்களிலும் உற்பத்தி மையங்கள் இருந்திருக்கின்றன:

அங்கே தயாராகும் உற்பத்திப்பொருள்களில் ஒன்றான கண்ணாடி மணிகள் இவைகளைத்தயாரிக்க மிக உயரிய தொழில் நுட்பம் தேவைப்பட்டிருக்கும் .

மிக அதிக வெப்ப நிலை உருவாக்கி அதில் மணலில் இருக்கும் குவாட்சை உருக்கி கண்ணாடி ஆக்கவேண்டும் பின்பு அதை நீளமாக இழுக்கப்படவேண்டும் அதில் இடையே காற்றை செலுத்தி அதை குழாய்

ஆக்கவேண்டும், பின்பு அந்தக்குழாய்களை மிகச் சிறிய துண்டுகளாக வெட்டி மணி மாதிரி ஆக்கவேண்டும் .

அந்த மணியில் மிகமெல்லிய துளை இடவேண்டும்.

அதற்க்கு மிக நுட்பமான கடினமானக்கருவிகள் வேண்டும் .

இத்தனையையும் கூடவே அதற்க்கு வண்ணம் ஏற்றி ,மெருகேற்றவும் அறிந்திருந்தார்கள் .

இத்தனையும் இப்போதைய நவீனக்கருவிகள் மின்சாரம் இவை இல்லாமல் சாதித்திருக்கிறா ர்கள் .அதற்க்கு துணையாக இயற்கையில் கிடைக்கும் தாவரங்கள் மரங்கள் ஆகிய பொருள்களை பயன்படுத்தி இருக்கிறார்கள் .

இத்தகைய அறிவும்,தொழில் நுட்பமும் உலகின் இதர பகுதியில் இருந்து யவனாரையும், அரேபியர்களையும் (சோனகர்) தமிழ்நாடு நோக்கி இழுத்திருக்கிறது .

இவாறு உருக்கு செம்பு போன்றவற்றிலும் சாதித்திருக்கிறார்கள் மேற்சொன்ன பெரும்பாலான தொழில்களுக்கான பொருட்கள் அந்தந்தப் பகுதிகளில் கிடைத்திருக்கவில்லை.

எனவே, நாட்டின் நகரங்களுக்கிடையிலான உள்நாட்டு வர்த்தகம் பெரிய அளவில்அப்போது நடந்திருக்கவேண்டும்.

தாமிரம், வெள்ளீயம், தங்கம், வெள்ளி, நவரத்தினக் கற்கள், மரம், பருத்தி ஆகியவை மிக முக்கியமான வர்த்தகப் பொருட்களாக இருந்திருக்கவேண்டும்.

இந்தப் பரிமாற்றங்கள் நிச்சயமாக பல்வேறு தொழில் சமூகங்களுக்கு இடையேதான் நடந்திருக்கவேண்டும்.

சிலர் தாதுக்களிலிருந்து உலோகங்களையோ நவரத்தினக் கற்களையோ பிரித்தெடுத்தல் தொழிலில் நிபுணத்துவம் பெற்றிருந்திருப்பார்கள்.

வேறு சிலர் விவசாயம் அல்லது நீர் வழி போக்குவரத்து ஆகியவற்றில் சிறந்து விளங்கியிருப்பார்கள்.

அப்போது நாட்டின் இடையே போக்குவரத்து சாலைகளை மட்டும் நம்பியிராமல், அவர்கள் ஆறுகளையும் சரக்குப்போக்குவரத்துக்கு பயன்படுத்தி இருக்கின்றனர் .

கடலில் பெரிய நாவாய்களில் வந்து சேரும் சாத்துகளை ,பெரிய தோணிகள் மூலம் உள்நாடுகளுக்கு கொண்டு சேர்ப்பது மட்டும் இல்லாமல் ,அங்கிருக்கும் தனித்தன்மை வாய்ந்த அவசியப்பொருள்களை நகரின் தொழில் கூடங்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியும் சிறப்புற நடைபெற்றிருக்கிறது .

இவைகளை கவனிக்க தனிப்பட்ட இனங்கள் குழுக்கள் நிபுணத்துவம் பெற்ற கூட்டம் கவனித்துக்கொண்டது .அவர்கள் செட்டிகள் என்று தமிழ் நாட்டில் அழைக்கப்பட்டார்கள்.

இந்தியாவின் முக்கியமான நாகரீகங்கள் ஆற்றங்கரைகளை ஒட்டியே இருந்தமைக்கு, இத்தகைய ஆறுகளின் போக்குவரத்தே முக்கிய காரணம் ஆகும். அப்போதைய நகர நாகரீகங்கள் எல்லாம் தொழிலுடன் சார்ந்த வணிக நகரங்களாகவே இருந்திருக்கிறது.



கிடைத்திருக்கும் வரலாற்று சான்றுகளின் படி தமிழ் நாட்டின் தொல்லியல் நகரங்கள் சுமார் 2500 ஆண்டுகளுக்கு இப்போதைய அகழ் ஆய்வு படி நகர நாகரீகங்கள் மிகச் சிறந்த தொழில் நகரமாகவே இருந்திருக்கிறது .செழிப்பான வணிக நகரமாக இருந்திருக்கிறது.

இவைகளைப்பாதுகாக்க சிறந்த மன்னர்களும் அப்போது இருந்திருக்கிறார்கள் வணிகமும் தொழிலுமே நாட்டின் செல்வவளத்திற்கும் , கலை மேம்பாடுகள் ,நாட்டின் எல்லை விஸ்தரிப்பு இவைகளுக்கு வணிகமும் தொழிலும் அடிப்படையாக இருந்திருக்கிறது.

வேளாண்மையும் செழித்து உணவுக்கு மக்கள் தட்டுப்பாடு இன்றி மகிழ்ந்திருக்கின்றனர் .கடலிலே உறங்கிக்கிடக்கும் பூம்புகார் ஆய்வு மீண்டும் ஆய்வுக்கு வந்தால் நமது தமிழ் நாட்டு நாகரீகங்கள் சுமேரிய எகிப்திய நாகரீகங்களை விட முந்திக்கொண்டு ,குறைந்தது 12,000 ஆண்டுகளுக்கு முன் சென்றுவிடும். தொல்தமிழரின் உண்மை நாகரீகம், அதன் தொன்மை வெளிப்படும் . !

Valluvar's guide to mindfulness

Dr. C. Rajeswari

Writer, Translator & Publisher

Development of young men is in their hands especially in their mindfulness. In each and every activity mindfulness works by taking one's focus to the present moment and away from other things. Concentration and commitment are enriched by mindfulness. Mindfulness is a type of meditation that helps you with better memory, brainy, shrewd, active, decisive, meticulous and philanthropic living with positive vibes.

There are three components in mindfulness namely

1.intention - choosing to cultivate one's awareness
2.attention - to the present moment, sensation and thoughts
3.attitude - being kind, curious and non judgemental.

Mindfulness practices, reduces anxiety and hostility among urban youth and leads to reduced stress and builds strong relationships. The major benefit of mindfulness is it encourages one to pay attention to one's thoughts, actions and body. In short, mindfulness helps to concentrate completely on one's work, at a time and focus fully on it for perfection and attain a grand success. Mindfulness reduces anxiety and depression in the multitasking youth of present era

1. Intention

The first quality of mindfulness is intention. This is choosing to cultivate one's awareness. Valluvar helps the youth to feel it when they realize their ignorance. Any man, young or old, has to learn new things from everyday's life and experience. Valluvar teaches this lesson in the third division called Love/ Happiness.

As learning progresses, past ignorance is realized

So, it is my love with this bedecked girl
As I get to know her more (1122)

When a person learns something new in his life he is reminded of his new awareness at present, and the ignorance of the past. Intention is choosing to cultivate one's awareness. Learning is the only process to cultivate awareness and wipe off ignorance. When a youth gets to know his partner more and more his ignorance about her is removed and awareness blooms. Valluvar has taught the youth to realize intention in their own way of knowing a woman deeply and learning mindfulness vividly.

2.Attention

Attention is the second element in mindfulness. It is being attentive to the present moment, sensation and thought. Valluvar has explained this attention in his couplet defining friendship.

Thiruvalluvar who composed 1130 couplets in 3 major divisions virtue, wealth and happiness acts as a friend, guide and philosopher to the youth. His couplets help the present youth to seek good friends and maintain good relationships with them. A friend in need is a friend indeed. This term 'need' is explained by Valluvar with an instance.

Like the hand that moves reflexively when the dress slips,
A friend reacts swiftly to remove a woe (788)

This is a good quality of a friend. In the example mentioned by Valluvar, that dress did not ask any help from the hand, it didn't cry or scream for help, so without anyone requesting your help one should move forward to help others in need. This is considered to be a great human quality. Every youth must have such friends and every youth should prove himself to be such a great friend. Attention helps him to gain this true friendship and be a good friend

Attention is defined as acting to the present moment, sensation and thoughts. It is nothing but the quick response of the hand that quickly moves to drape the slipping clothes and keeps up the modesty of the suffering person. This immediate reflexive action is called attention, to the present moment. If a young man follows Valluvar writings, he will be attentive and do things mindfully.

3. Attitude

Attitude is being kind to others, curious and non judgemental. So young men need not judge a person as a good or bad, friend or enemy. He must be good to all irrespective of their behaviour with others.

Valluvar's composition helps the global youth irrespective of caste, creed and colour. He has composed Thirukkural for everyone to lead a life of virtue and selflessness. Thiruvalluvar says in his 578th coupler

This world belongs to those who do their duty with no fault and are compassionate.

He has the right to live in this world. One should perform his duty in a perfect manner and also be kind to others. Humane activities gain more minds and more love from people. If a young man or woman starts doing good things for society and is happy with what they have, they are considered to be righteous and rightful to live on this earth.

Conclusion

If a youth practices intention, attention and attitude in his life he is fit to enjoy mindfulness and free from anxiety and stress.

He is sure to earn the benefits of mindfulness, live a wholesome life and be a better human than others to hus hus family, friends and society.

மதுரை மீனாட்சிக் கோயிலில் கண்டதும் கற்றதும்

இரா. கலைக்கோவன்

கண் மருத்துவர், கல்வெட்டு ஆய்வாளர்,
திருச்சி

3. மீனாட்சி நாயக்கர் விளக்குமாலை

அன்புள்ள வாருணி, நீ எழுதியிருப்பது சரிதான். தேவார மூவரில் நீண்ட காலம் மதுரையில் தங்கியவரும் அதைப் பாடிப் பதிகம் வளர்த்தவரும் சம்பந்தர்தான். அதனால்தான், ஆலவாய்க்கு 9 பதிகங்கள் வாய்த்துள்ளன. சம்பந்தருக்கும் மதுரைக்கும் உள்ள உறவைச் சேக்கிழார் விரிவாகப் பேசியிருக்கிறார். அது தொடர்பான பெரியபுராணக் காட்சிகள் படிக்கத் தக்கவை. பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியின் அழைப்பேற்று அரசரின் வெப்புநோய் தீர்த்ததுடன், சைவத்தின் பேரெழுச்சி யைப் பதிவுசெய்தவர் சம்பந்தர். அவரது பதிகங்களே அதற்குச்சான்று. நாவுக்கரசரும் மதுரைக் கோயிலைப் பாடியுள்ளார். சுந்தரர் பதிகந்தான் கிடைக்கவில்லை என்றாலும், சேக்கிழாரின் கூற்றை ஏற்றால் சுந்தரரும் ஆலவாய் வந்தமை புலப்படும்.

பத்திமைக் காலத்தில் பாண்டிய நாட்டின் தனிப்பெருங் கோயிலாய்த் திகழ்ந்த ஆலவாய் தொடர்ந்து வந்த அரசமரபுகளால் புரக்கப்பட்டாலும், அதன் மலர்ச்சி குன்றிய காலமும் இருக்கத்தான் செய்தது. அதனால்தான், கோயில் வளாகத்தில் பழங்கல்வெட்டுகளைக் காணக்கூடவில்லை. நடுவணரசின் தொல்லியல்துறை இவ்வளாகத்திலிருந்து படியெடுத்துள்ள 64 கல்வெட்டுகளில் முதலாம் சடையவர்மர் குலசேகர பாண்டியரின் கல்வெட்டே (பொ. கா. 1194) காலத்தால் முற்பட்டது.

வாருணி, மதுரைக் கோயில் என்றாலே நம் நினைவுக்கு வருபவர்கள் நாயக்க அரசர்கள்தான். ஆனால், வரலாற்றுச் சான்றுகளைப் புரட்டினால், இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலமே இக்கோயிலை வளப்படுத்தியதென்பது புலப்படும். இங்குள்ள 44 கல்வெட்டுகள் அவர்தம் கொடையுள்ளம் காட்டுகின்றன. நடுவணரசின் கணக்குப்படி விஜயநகர நாயக்க அரசர்களின் பதிவுகளாய் இங்குள்ளவை 19தான். இந்தச் சூழலில்தான் வாருணி, மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலை எங்கள் ஆய்வுமையம் அணுகியது.

ஒலி ஒளிக் காட்சிக்கான கருத்துருவைப் பெறக் கோயில் முழுவதும் உலாவந்தோம். அங்குலம் அங்குலமாக அவ்வளாகத்தை ஆராய்ந்த சூழலில்தான், அதுவரை வெளிச்சம் காணாத பல காட்சிகள் எங்களுக்காகவே காத்திருந்தாற் போல் பளிச்சென்று தோற்றம் தந்தன. கோயிலின் எல்லாப் பகுதிகளிலும் இப்படி இலைமறை காயாக இருந்து கண்காட்டியவற்றுள் இந்த விளக்குத்தோரணங்களும் அடக்கம்.

நாயக்க அரசமரபின் நாயகராக விளங்கிய திருமலை நாயக்கரைக் கேள்விப்படாதவர் இருக்கமுடியாது. அவருடைய அமைச்சர்களுள் ஒருவராக வாழ்ந்தவர்தான் மூன்றாம் மீனாட்சி நாயக்கர். அவரை ஆதி மீனாட்சி நாயக்கர் என்று பெருமைப்படுத்துகிறது கல்வெட்டு. ஆலவாய்க் கோயிலைத் திருமலை நாயக்கர் விரிவாக்கம் செய்தபோது தம் பணியாக ஒரு மண்டபத்தை எடுப்பித்தார் இவ்வமைச்சர். அவர் பெயராலேயே இன்றும் விளங்கும் அம்மண்டபத்தின்

பின்பகுதியில் அதையடுத்துள்ள இருட்டு மண்டபமாம் முதலிப்பிள்ளை மண்டபத்தின் முன்னுள்ளது மூன்றாவது விளக்குத் தோரணம். அதில் நம் பேராசிரியர் நளினி கண்டறிந்த 82 வரிகளில் அமைந்த தமிழ் எழுத்துப் பொறிப்பு இந்த விளக்கு மாலையை, 'ஆதிமீனாட்சி நாயக்கர் உபயம்' என்கிறது.

ரோஸ்பீட்டர் தோரணம் போலவே கீழே யானைகள் மேலே காவலர்கள் கொண்டெழும் இந்தத் தோரணம், இருபுறத்தும் 6.89 மீட்டர் உயர்ந்து, பிறைநிலவாய் வளைந்து, கீர்த்திமுகத் தலைப்பில் முடிகிறது. வளைவின் தொடக்கத்தில் பக்கத்திற்கு ஒருவராக உச்சிக்கொண்டையிட்ட வானவமகளிர் ஒரு கையில் அகலும் மறு கையில் மணியுமாய் நிற்க, இருபுறத்தும் அவர்களைத் தொடர்பவர்களாய் உயர்த்திய முழங்காலுடன் ஊர்த்வஜாநு கரணத்தில் பக்கத்திற்கு 13 அழகியர்.

இருகைகளிலும் மலர் கொண்ட இந்தக் கரணச் செல்விகளால் நாயக்கர் தோரணம் ரோஸ்பீட்டர் படைப்பை அழகில் விஞ்சி நிற்கிறது. செல்வியர் தலைக்கருகே நீளும் தண்டுகள் அகலேந்த, கீர்த்தி முகத்திற்குக் கீழிருக்குமாறு யானைத்திருமகள்.

மீனாட்சிநாயக்கரின் ஆதிதோரணம் சிதைந்ததால் பொ. கா. 1898 நவம்பர் 21-ஆம் நாள் சிவகங்கை ஜமீன்தார் கௌரி வல்லபதேவர், மீனாட்சி நாயக்கரின் வாரிசு பங்காரு திருமலைசாமி மேலாண்மையில் செய்து வைக்கப்பட்ட இத் தோரணம் ஆவியூரை உள்ளடக்கிய 5 ஊர்களின் வருவாயில் உருவானது. 1300 அகல்களுடன் எண்ணிக்கையிலும் வடிவமைப்பிலும் கம்பீரத்திலும் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து விளக்குமாலைகளையும் விஞ்சி ஒளிரும் இந்த அழகிய தோரணத்தைச் செய்த பெருமைக்குரியவர் திருநெல்வேலி முத்துசாமி ஆசாரியின் மகனான திரு. இராசகோபால் ஆசாரி.

கலைத்திறன் படைத்த அவரது கைவளமும் கற்பனையாற்றலும் மின்னி மிளிரும் இந்த விளக்கு மாலை 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த பித்தளைப் படைப்புகளின் செழுமைக்குச் சான்றாய் நம் கண்முன் நிற்கிறது.

இதிலுள்ள எழுத்துப் பொறிப்பு இத்தோரணத்தைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட பித்தளையின் அளவைத் தருவதுடன், தாங்கல்கள், மரஏணி ஆகியவற்றிற்கான செலவினங்களையும் கணக்குச் சுத்தமாகப் பதிவுசெய்துள்ளது.

இந்த எழுத்துப்பொறிப்பு இல்லாது போயிருந்தாலோ அல்லது கண்டறியப்படாதிருந்தாலோ தோரணத்தின் வரலாறே இருளடைந்திருக்கும். ஒளி உமிழவே உருவாக்கப்பட்ட இந்த அகல்தோரணத்தில், அதன் வரலாற்றைப் பொறித்தவர்களுக்கும் அதைத்தம் கடினஉழைப்பால் கண்டறிந்து வெளிப்படுத்தியவருக்கும் நன்றி சொல்வோம் வாருணி. இது போன்ற பதிவுகள்தான் நமக்கு வரலாறு தருகின்றன. அதனால், இத்தகு பதிவுகளை உருவாக்குவதுடன் உருக்குலையாமல் காப்பதும் நம் கடமை.

தம்பி, ஒரு கதை உண்டு

அறிஞர் அண்ணா

பரம ஏழையாக இருந்த ஒருவன், தேவாலயத்தின் அருகே பாதையில் நடந்து, பிச்சை எடுத்துக் கொண்டிருந்தானாம்! கந்தல் ஆடை, கையில் திருஓடு, கண்ணில் காமாலை, கைகால்களில் புண்- இந்தக் கோலத்தில். ஆண்டவனின் அடிபணிந்து அர்ச்சித்து அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அருளைப் பெறுவதற்காகப் பிரபுக்கள் பட்டுடை அணிந்து பளபளக்கும் அணிபணிபூண்டு, பொன்னவிர் மேனியரோடு வண்டி வாகனங்களில் செல்வர்; இதைக் கண்ட பிச்சைக்காரன், மனம் நொந்து, "ஆண்டவனே! ஏதோ என்னை இல்லாதவ னாகவும், இவர்களைச் சீமான்களாகவும் படைத்துவிட்டாய். அதுவே அக்ரமம். அது போதாதென்று, இருவருக்கும் பொதுவாக ஒரு பாதையையும் அமைத்திருக்கிறாயே. ஏழைகள் செல்வதற்கு ஒரு பாதை, சீமான்கள் பவனிக்காக மற்றோர் பாதையாவது அமைத்திருக்கக் கூடாதா? என் கண்ணிலே, இந்தப் பளபளப்பும் மினு மினுப்பும், தகத்தகாயமும் தெரியாமல் இருந்தாலாவது, வேதனை குறையுமே!" என்று சொல்லிக் கொண்டானாம்.

எப்படியோ, அவன் ஒரு பெரும் சீமானாகிவிட்டான் - பட்டுடை! பரிமளகந்தம்! பல்லக்கு! பாவையர்! எல்லாம் கிடைத்துவிட்ட நிலை! பல்லக்கில் செல்கிறான். பரம ஏழையாக இருந்தவன், "பரம்பொருளின்' அருள் பெற! பாதையிலே, பஞ்சை பராரி, ஏழை, நடைப்பிணம், கண்டான்! கண்களை இறுக மூடிக்கொண்டு, கலக்கத்துடன், "கடவுளே! இதென்ன கொடுமை? ஏன் இப்படிப்பட்ட "கோர'மான காட்சி என் கண்ணில் படும்படி செய்கிறாய்! நான் என்ன குற்றம் இழைத்தேன்! இறைவா! இந்த ஜென்மங்கள் எமது கண்களிலே தெரிந்து இதயத்தைத் தாக்காதிருக்கும் வண்ணம், இதுகளுக்கென்று ஒரு தனிப் பாதையும், உன் அருளைப் பெற்ற எமக்கென்று ஒரு தனிப் பாதையும், அமைத்துத்தரக் கூடாதா!" என்று இறைஞ்சினானாம்.

பஞ்சை பிரபுவானதும், பஞ்சைகளைப் பார்ப்பதும் வேதனை என்று எண்ணுகிறான் - அதற்காக ஆண்டவனிடம் கோபித்துக்கொள்கிறான்!

பஞ்சை பிரவுவானதும் அவன் மனதிலே எத்தகைய நஞ்சு நெளிகிறது பார், தம்பி! "

29-5-1955. திராவிடநாடு.

தாளை வணங்காத் தலை

முனைவர் சிவ இளங்கோ,

புதுச்சேரி.



இதுதான் புத்தரின் பாதச்சுவடுகள். மாமன்னர் அசோகன் காலத்தில் (கிமு 300) பல சமயங்கள் இருந்தாலும் உருவ வழிபாடுகள் இல்லை. அசோகர் புத்த மதத்தைத் தழுவிய பின்னர் புத்தரின் கொள்கைகளைப் பரப்புவதற்காகத் தன் மகன், மகள் உட்படத் தன் குடும்பத்தினரையும், பிறரையும் பல நாடுகளுக்கும் அனுப்பி வைத்தார். அங்கெல்லாம் புத்தரின் கொள்கைகளைப் பரப்பச் செய்யும் வகையில் புத்தரின் நினைவாகத் தம்ம சக்கரம் கொண்ட தூண்களையும், புத்தர் நடந்தே மக்களைச் சந்தித்ததைக் குறிக்கும் வகையில் பாதச் சுவடுகளையும் நினைவுச் சின்னமாகப் பதிய வைத்தார்.

பின்னாட்களில் புத்தருடைய கொள்கைகள் நன்றாகப் பர வத் தொடங்கிய பிறகு இந்த பாத நினைவுச்சின்னம் வழிபடும் கல்லானது. இதைத்தொடர்ந்து

ஏற்பட்டதுதான் உருவ வழிபாடுகள். திருக்குறளின் முதல் அதிகாரத்தில் தாள், மாணடி, அடி என்றெல்லாம் திருவள்ளுவர் உரைப்பதன் பின்னணி மகாவீரர், புத்தர் ஆகியோர் மக்களுக்காக நடந்த நினைவுச் சுவடுகள் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

சமணம், பௌத்தம், ஆசீவகம் என்று அறம் போதித்த அனைத்து சமயங்களையும் கபளீகரம் செய்து விழுங்கிய வைதீகம், மகாவீரர், புத்தர் பாதச்சுவடுகளை இராமர் பாதம் ஆக்கி விட்டது. புத்தரின் பாதங்கள் தங்கள் வீட்டில் பட வேண்டும் என்று மக்கள் விரும்பிச் செய்த செய்கைகளை இன்றைக்குக் கிருஷ்ணனின் பாதங்களாகத் திரித்ததுடன், அதை நியாயப் படுத்த புத்தரையே விஷ்ணு அவதாரமாக்கி மக்களின் நம்பிக்கையைத் திசை திருப்பி விட்டது.

குழந்தை கிருஷ்ணனின் பாதத்தை வீட்டில் பதிப்பது என்பது வைதீகம் கற்பித்த ஒரு போலியான வழிபாடு. திரிக்கப்பட்ட வரலாறுகள்தான் நம் மீது திணிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

TAMILMAGAN'S Gene Notes in Vengai Anchor

(In English Dr. Mrs C. Rajeswari)

Chapter - 8

Tamilmagan

AD 1924, 1977, 2017 – Chennai

Mathivaanan was sitting in front of the inscriptions of Indus Valley Civilisation. He knew each and every stroke of them. Fishes, the numbers of the scales in the fishes, lines, circles, crossing lines in the circles, hooks, and so on. And their arrangements, too. These scripts were deduced to be from six thousand years back. How did the people articulate these sounds? What did they mean by each sound? He was struggling with these questions. This inscription was scientifically done, so he had to decipher the symbols in a logical way.

The ancient man had converted his sounds to scripts. Now we are deciphering the scripts to sounds. Since it was written from right to left, some scholars felt that it had no relation with Tamil. But within a few days, the linguists disproved it. They were interested in proving the linguistic family of these scripts. Mathivanan wanted to prove that this was the earliest form of Tamil. He wished to follow a linguistic approach, so he searched for the clitics and other grammatical elements.

Mathivanan's higher official Ellis, five years elder than him, was in the metallurgy department and he was good at finding out the age of the metallic objects. He showed the same interest in archaeological activities, too. Usually, British men were perfect in administering their duties. As the excavations and the research were not going to generate any income for them, the fund allocation was not adequate, but their interest was exciting. Ellis had some of the Indus valley statues on his table. He protected every pebble as a precious diamond. He was surprised by the grains, stones, jewelry, iron tools, etc.

The Indus valley excavations were three-bedded and portrayed the life of the generations that lived many centuries before. Places, where people lived for thousands of years, would be having these multi-levels. So, the early habitation must be around six thousand years ago, is inferred. Ellis was very happy and satisfied that he had a good student like Mathivaanan. He fixed it as all letters or scripts are symbols. Each one had a pictorial representation of some object or activity or emotion. All scripts were in a group of fours or fives, but not as sentences. He told that all these groups of fours and fives make a sentence. These were similar to Tamil verbs acting as sentences as He ruled. He dug the well. He insisted Mathivanan find if there were any similarities between the inscriptions recorded from the surrounding a hundred miles.



Mathivaanan finally found one similarity between Tamil and those inscriptions. He told Ellis that he could identify the consonant clusters. Placing a dot on the top of the consonant was not in practice, so it was difficult to identify them. He showed a few examples to Ellis.

'Nice'

Look here, Sir, the short and long vowels and their differentiation.

'good'

The plural markers were also identified, and they were close to Tamil.

Wonderful, your research will be an eye-opener. We shall move forward in this study.

But...

Why do you hesitate, Sir? When the evidence proves this is related to a Dravidian civilization, the support for this study may decline. Do you feel sad?

Yes, Sir, of course.

Many sources were expecting the script to be Sanskrit and the civilization to be of Aryas, but it is going the other way and the financial aid is stopped, so the study had to come to an end.

Mathivanan smiled and told, ‘I knew that, Sir. Anyway, the demon is dragged out and now it will take care of.'

All 10,000 samples were sent to the museum. Efforts were taken to wind up everything and put a full stop to the discussions. Later, some excavations might take place in Tamil Nadu and that would prove that Tamils lived in the river beds of Sindhu.

British government started an archaeology department in Calcutta to protect these objects. Its sub-division functioned in Madras, headed by Ellis and the other five scholars. Mathivaanan came with a new finding that the Indus inscriptions do not have vowelic consonants, but vowels and consonants are written one after another. Ellis appreciated him and wished to host a dinner for his subordinates. On that day, Ellis received a transfer order from Madras to Meerut.

Mathivaanan has left a fish out of the water. Many Tamil scholars asked about his findings. He didn’t know what to do with his papers. At that time, his parents arranged his marriage. The papers were protected in a trunk box and left as such. It

was there even after his death. One day, his wife pulled that old box with a hooked stick and threw it away.

The importance of any object is decided by time or by the economic condition or by some irresponsible folks.

Anyway, Mathivanan's wife now decided that box of papers to be unimportant.

When Ramanathan felt the importance of the contents in that box, he had crossed thirty. He asked his mother, Where is dad's box? When his dad was alive, it was there and he believed it will be there after his death as well. His mother didn't reply. She was afraid, to tell the truth. When her son Ramanathan went to prison for Hindi agitation, that box seemed to be an evildoer for that family. She believed that her husband's spirit was lingering in that house because of that box and the papers within, so to chase the evil spirit, she threw its box away. She believed the dead ones coming to the house in want of their things will bring bad fortune to her, so she threw the box away.

She repeated what Mathivanan's parents did to him. All the parents feel marriage is the solution to curtail the social activities of men. Ramanathan's mother also did the same. She arranged a marriage for her son. His wife gave birth to three girls and passed away. Ramanathan didn't know whether to buy a minimum of jewelry for his daughters or get them some clothes to wear. He could do only one thing: ask his girls to recite Tamil poems and be happy with them. Ramanathan felt helpless that he couldn't preserve his dad's research papers. Whenever he looked at the vacant space left by the box, he felt the absence of a deity or a guardian spirit.

It struck six o'clock. If he starts now, he could reach the place of protest in time. Slogans against prime minister Indira Gandhi were written on a piece of paper and he wanted to use them in the protest. After the emergency was announced by Indira Gandhi, he noticed the agitation for Hindi was gradually on the rise. Today he has to speak on the topic, Love of Mother's tongue

Ramanathan told her daughter, 'If you learn ten couplets of Thirukkural and recite, I will get you a new skirt and blouse.' He left the home for the protest.

Ramanathan started his speech. He was in white attire, like a professor. He said, "Nowadays I am happy and proud to see a rise in the love with our mother tongue. People wrongly state that only during the Hindi agitation that Tamils started loving their language, No it is not, Tamils love their language for thousands and thousands of

years. We had a Tamil Sangam, an association to develop the Tamil language and literature. We had three such Sangams. Kapatapuram and Madurai were the places of Tamil Sangam. Some say that Sangam is a Buddhist word, so before Buddhism, there was no Tamil. I refute this statement. We knew our history in full detail. What we have restored is only an almyrah full. Tamils would have not planned for a number as four hundred to write their love poems and war poems. He would have written in thousands but we have got only 400 in each. We have a word Kalakam in Tamil, to refer to an association of learned people.

Tamil kings sailed on ships and captured Kadaaram. These kings had trade links with Ilankai, Malay, and China. They had a well-built navy and a thorough knowledge of the water currents. They were able to challenge the cyclones and roaring waves.

At that time a man from the crowd raised his voice and told. 'You are making money out of Tamil'. He pointed at Ramanathan and blamed. He told 'After 1967 in DMK's rule, the welfare of the state is ruined. You are boasting about the glory of the past. What about the present?' The difference between Aryas and Dravidas are fake. This theory is disproved in the nineteen thirties. You are doing a good business with these fake issues. That man was arguing at the top of his voice. His eyes became red, and his nostrils widened. The mob psychology started. People turned against him and shouted back. Ramanathan continued his speech, 'When Hitler was admired, German classes were started in Madras and now when Hindi is admired, Hindhi classes shoot up'.

Saravanan was listening to Ramanathan's sharing of his speech. He couldn't get the answer to his question: Why do Tamils are after their language? There are Tamil men who honor the language of their life.

Ramanathan told Saravanan, 'Praise of Tamil has three thousand years of history and hatred towards Tamil also has the same long history.'

In the primitive age, men were afraid of darkness and worshipped the rising sun and full moon as Gods. When theism started, rationalism and atheism also started. Similarly, love and hatred in Tamil are of the same age.

People in different places identified themselves with an animal, bird, tree, flower, or some other natural thing, but only Tamils identify them with their language, so they are ready to become Tamil martyrs for their language. Love for language is like a natural instinct in the minds of the Tamils. It can't be separated from them. It is registered in his brain as a genetic aspect.

Saravanan asked him, ‘Is it good?’

It is necessary, so it is good.

Is it necessary?

‘Tamil is from a family of languages flourished by the civilization in Tamil Nadu, in Sindhu, in Sumeria. Till date, it is a classic and living language with texts for literature and science. How can it be unnecessary?"

Once Saravanan’s friend said, ‘Nowadays some groups try to reap and enjoy the harvest of Tamil for the benefit of their own languages and ignore Tamil. Tamil is a language traveling from the origin of humankind.'

He remembered that conversation now. Ramanathan continued.

‘The pain of being ignored is natural. This is because we don’t have a nation for our Tamils. A national leader whose mother is not a Tamil lady will try to do good for his mother tongue and not for Tamil. He will try to bring down the importance of Tamil. But Tamils cannot agree with that, so they agitated. This is the main cause of anti-Hindi agitation.'

Ramanathan finished his narration.

Saravanan felt this was enough for his documentary.

Saravanan collected details about the Easter Islands. Richard Baille, a friend of Saravanan, told, the people of that island didn't know from where they migrated to that island. They worship a wooden plank as their forefather, a totem, in which letters similar to that of Indus scripts are engraved. They keep that plank in the sunlight and pray in front of it. So it can be inferred they have occupied that place for thousands of years. Richard Baille lost his admission for a software technology course by two marks, so he had to go for a History course. But he pretended to be having great interest and passion for learning history so he opted for that course. He had done some research on this Easter Island. His research showed the link between Easter Island and Tamils.

Seven thousand years ago, a group of traders from South India traveled northeast crossing Burma, Thailand, Japan, Korea, and so on. At that time, snow started to melt and sea water raised to 150 meters and covered a huge land mass. When the water drained into some higher lands, they became islands. One of them is this Easter Island. This island was previously an Eastern country but is now reduced to islands. Many such islands remain there.

Saravanan stayed in Thailand for a month and completed his graphic work. There he went to Angorwhat and visited the temples built by the south Indian kings. He found many similarities between Tamil and the Thai language. In the Thai language, thongam means gold [thangam in Tamil], kamban means ship [kappal in Tamil], nhaaLikaa means time [only in Tamil], gur means teacher or preacher [Guru in Tamil], kai is hand [in Tamil it is the same], pavaay means doll [pavai in Tamil]… He had a question about why people call this Thai land [Motherland in Tamil]. He couldn't find answers to many such questions and he concluded, 'I've gone mad.'

Dev explained everything he experienced in his mind to Dr. Maran and finished as 'All this happened'.

Maran could connect Dev's thoughts, and he noted five points in his All Tab. They were, In 1925 Indus valley excavations were analyzed by a British man Ellis. Mathivaanan worked as his assistant. Mathivanana's son Ramanathan took part in the anti- Hindhi agitation. He had three daughters. The eldest, Thamarai worked with Saravanan, who was preparing a document on the agitation for a Malaysian TV channel.

Maran concluded this as a peculiar disease. He felt that some things had happened and some did not at all. Dev tried to co-relate things and link the past and future events with the present experiences. He felt like he experienced everything. The doctor

wished to have some coffee. So he went near the machine and pressed the button.

All Tab showed a new number seeking permission to talk to him. He permitted. He heard the voice.

'I am from Israel. I heard that you have come across a peculiar brain. Is it right?

What do you say? I can't follow you.

A man came to you with a problem of having historical thoughts. Is that right?

The doctor was shocked.

How do you know?

'We want him'. It sounded like an order. The doctor became careful in his words.

No, I can't.

Ok, then we will take him

The speaker erased his number. He could have gotten Maran's number from the Xypher Network. He murmured 'stupid' and sipped his coffee.

அபினிப் போர்கள்

டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்
புதுச்சேரி



ஒரு இங்கிலாந்து இராணிக்கு தேநீர் பிடித்திருந்ததுஎன்பது எத்தனை வரலாற்று நிகழ்வுகளை உலகில் ஏற்படுத்திவிட்டது என்பது அறியும் போது வியப்பாகத்தான இருக்கிறது இங்கிலாந்தில் சார்லஸ் 2ம் மன்னர் 1660ல் ஆட்சிக்கு வந்தார். அவருடைய போர்ச்சுகீசிய மனைவிக்கு அதிகம் டீ குடிக்கும் பழக்கம் இருந்தது.இதை தொடர்ந்து 1664 ம் ஆண்டு 100 பவுண்டு தேயிலையை கிழக்கிந்திய கம்பெனி முதன் முதலாக ஜாவாவிலிருந்து இறக்குமதி செய்தது.

இங்கிலாந்தில் தேயிலை 17ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை அதிகம் அறிமுகம் இல்லாமல் தான் இருந்தது

நாட்டின் இராணி டீ குடிப்பார் என்ற உண்மையை பயன் படுத்தி சிறிது சிறிதாக இராஜ குடும்பம் மற்றும் பணக்கார இங்கிலாந்து பிரபுக்களிடம் அதை விற்க தொடங்கியது.தேயிலையின் பயன்பாடும் இங்கிலாந்தில் சிறிது சிறிதாக அதிகரிக்க ஆரம்பித்தது. சிறுக சிறுக 1813ம் ஆண்டு இறக்குமதி செய்ய பட்ட தேயிலையின் அளவு 1.45 கோடி கிலோவை தொட்டது.அந்த கால கட்டத்தில் கி.இ.கம்பெனியின் ஒட்டு மொத்த வர்த்தக மதிப்பில் 60% தொட்டது தேயிலை வர்த்தகம். இங்கிலாந்து அரசின் வரி வருவாயில் 10% வருவாய் தேயிலையின் மீது விதிக்க பட்ட வரி மூலம் மட்டும் கிடைத்தது

உலகம் முழுவதும் தண்ணீருக்கு அடுத்தபடி அதிகம் குடிக்கப்படும் பொருளாக தேநீர் ஆனது .

அப்போதைய ஆங்கில அரசு.சீனா மற்றும் இந்தியாவுடனான முழுமையான வர்த்தகத்துக்கு கிழக்கிந்திய .கம்பெனிக்கு ஏக போக உரிமையை அளித்திருந்தது அதன் விளைவாக சீனாவில் பெற்ற தேயிலையின் விலையை மிக அதிக அளவிற்கு நிர்ணயித்து பெரும் லாபத்தை கண்டது அந்த கம்பெனி. அதே நேரத்தில்அப்போது இங்கிலாந்து அரசு நடத்திய போர்களுக்கு செலவிழிக்க தேயிலைக்கு அதிக வரி விதித்தது. அதன் விளைவாக தேயிலையின் விலை அதிகமானது

இதனால் தேயிலை இறக்குமதியின் அளவு அதிகம் ஆகி கொண்டே சென்ற போது மற்றொருஎதிர் விளைவும் அதில் ஏற்பட்டது. தேயிலையை எதாவது கொடுத்து தானே வாங்க வேண்டும். இங்கிலாந்து பொருட்களை சீனர்கள் விரும்பி வாங்குவது இல்லை. சீனர்கள் தேயிலைக்கு மாற்றாக கேட்டது வெள்ளியை மட்டுமே . 17ம் நூற்றாண்டின் நடு பகுதி வரை ஐரோப்பிய நாடுகள் சுமார் 28 மில்லியன் கிலோகிராம் வெள்ளியை சீனாவிடம் கொடுத்து தேயிலையை வாங்கின. இதன் விளைவு பெருமளவு செல்வம் சீனா நோக்கி செல்ல ஆரம்பித்தது. வெள்ளிக்கு மாற்று எது என்று ஐரோப்பியர்கள் யோசித்து கொண்டிருக்கையில் அவர்களுக்கு ஒரு அதிசய பொருள் கிடைத்தது. அது தான் ஒப்பியம்.எனும் அபின் .

அதாவது நம்ம தேசத்தில் அபின் உற்பத்தி செய்து அதை .சீனர்களுக்கு விற்று அதற்கு மாற்றாக தேயிலையை வாங்க ஆரம்பித்தார்கள்.நம்மநாடுதான் ஆங்கிலேயர் வசம் இருந்ததே ! அதனால் இங்கு அபின் உற்பத்தி கொடிகட்டிப்பறந்தது .ஒல்லாந்தரின் முன்மாதிரியைப் பின்பற்றி, பிரித்தானியரும், அக்பர் ஆட்சிக் காலத்திலிருந்தே (1556-1605) இந்தியாவிலிருந்து அபினியை வாங்கிவந்தனர். 1757 இல், வங்காளத்தைக் கைப்பற்றிய பின்னர், பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அபினியின் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும், தனியுரிமையை நிலைநாட்டியிருந்தது. வேறு பயிர்களுக்கு இல்லாதவகையில், முன்பணம் கொடுத்து அபினி உற்பத்தியாளர்களை ஊக்குவித்தும் வந்தனர். இந்த உற்பத்தி, கொல்கத்தாவில், பொதுவாக 400 விழுக்காடு இலாபத்துடன், ஏ லத்தில் விற்கப்பட்டது. இந்திய வங்க மாநிலத்தில் பெருமளவு ஒப்பியத்தை பயிரிட தொடங்கியது. ஒப்பியம் என்பது போதை பொருள் ஆனாலும் லாபம் ஒன்றே குறிக்கோளான கி.இ.கம்பெனிக்கு நியாய தர்மம் பற்றி யோசிக்க வேண்டிய அவசியமில்லை.சீன மக்கள் போதைக்கு அடிமை ஆவதை தடுக்க சீன அரசு ஒப்பியம் விற்பனையைஅங்கே தடை செய்தது. இந்தியாவின் வங்கத்தில் தான் முதன்முதலில் அபின் உற்பத்தியை வாரன் ஹாஸ்டிங்க்ஸ் துவங்கி வைத்தார். அடுத்தடுத்து இந்தியாவின் பாரம்பரிய விவசாய நிலங்களை அபின் பிடித்துக்கொண்டது. மேற்கு இந்தியாவிலும் உற்பத்தி செழித்தது. இந்திய விடுதலைக்கு முப்பது ஆண்டுகள் முன்புவரை உலகிலேயே அதிகபட்ச அபின் உற்பத்தியாளர் இந்தியா தான் என்கிற அளவுக்கு அது செழித்தது.

சீனச் சமுதாயத்தில், உடல்நலம் மற்றும் சமுதாய வழக்கங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட தீங்கான பாதிப்புக்கள் காரணமாக, கிங் பேரரசர் (Qing Emperor) அபினியைச் சீனாவில் தடை செய்தார். தனது நாட்டு எல்லைக்குள் அபினியைத் தடை செய்த பிரித்தானியப் பேரரசு, சீனாவுக்குள் அதனைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்தது. அந்த தடையையும் பொருறப்படுத்தாது பிரித்தானியக் களங்கள் சீனாவுக்கும் அபினி வணிகத்தைத் தொடர்ந்தது. அதனால் அப்போது குவாங்தொவ் மகாணத்தில் பணிப்புரிந்த ஆளுநர் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். ஆனால் கி.இ.கம்பெனி சீன வியாபாரிகளிடம் சீனாவில் கடனுக்கு தேயிலை வாங்கி, வங்காலத்தில் அதற்கு ஈடான ஓப்பியத்தை சீனா வியாபரிகளுக்கு விற்பனை செய்தது. அது கி.இ.கம்பெனியின் கப்பலில் சீனாவின் கடல் ஓரத்தில் இறக்க பட்டு அதை சினாவிற்குள் சீன வியாபரிகளால் கடத்த பட்டு கொண்டு செல்ல பட்டது

சீனா மற்றும் பிரித்தானியாவுக்கு இடையிலான தகராறுகளின் உச்சக்கட்டமாக, 1880 களின் மத்தியில் நிகழ்ந்த இரண்டு போர்கள், அபினிப் போர்கள் அல்லது ஆங்கிலோ-சீனப் போர்கள் என அழைக்கப்படுகின்றன.

முதலாம் அபின் போர் 1839 முதல் 1842 வரை நடந்தது. இந்த போரிலேயே பிரித்தானியப் படைகள் ஹாங்காங் தீவைக் கைப்பற்றிக்கொண்டது. அதனைத் தொடர்ந்து, பிரித்தானியா ஹாங்காங்கை பிரித்தானியாவின் ஒரு குடியேற்ற நாடாக பிரகடனப்படுத்திக்கொண்டது.

அதன் பிறகு மீண்டும் அபின் வணிகம் தொடர்பான, இரண்டாம் அபின் போர் 1856 முதல் 1860 வரை நடந்தது. இந்த போரின் முடிவில் பிரித்தானியப் படைகள் மேலும் கவுலூன் தீபகற்பம் மற்றும் கல்லுடைப்பான் தீவு வரையிலான நிலப்பரப்பை கைப்பற்றிக்கொண்டது.ஓபியம் அல்லது அபின் போர் (Opium War 1839–42) என்பதற்கு, நவீன சீன வரலாற்றில் முக்கிய இடம் உண்டு

இந்த போர்களில் சீனாவுக்கு ஏற்பட்ட தோல்வியும், அதனைத் தொடர்ந்து செய்துகொள்ளப்பட்ட சமநிலையற்ற ஒப்பந்தங்களும் குயிங் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாகின

இரண்டாவது போரில் பிரான்சும், பிரித்தானியாவுக்குச் சார்பாகப் போரில் கலந்து கொண்டது. இந்தத் தகராறுக்கு அடிப்படையாக அமைந்தது, பிரித்தானிய இந்தியாவிலிருந்து அதிகரித்துவந்த அளவில் அபினி சீனாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்டமையாகும்.

இவ்வாறு உலகெங்கும் தேநீர் வியாபாரம் எனும் புதிய ஒரு சந்தைப்பொருள் ஐரோப்பியர்களின் உலகெங்கும் நிலவிய காலனி ஆட்சிகளினால் அங்கங்கே பரவலாகி இப்போதும் அது கொடிக்கட்டிப்பறப்பதையும், இதன் வினைவாகஅப்போது நடைபெற்ற அபின் போர்களும் வரலாற்றின் வடுக்கள் !

எளிய முறையில் யாப்பறிவோம்! - 35

நெருப்பலையார். இராம இளங்கோவன்,

பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம்,
பெங்களூரு.

வெண்டுறை

வெண்பாவின் தளைகளின்றிப் பிற வெண்பாவின் இனமாக அமைந்த பாடல்கள் அனைத்தும் வெண்டுறை, வெண்டாழிசை, வெளி விருத்தம் என்னும் வெளி மண்டிலம் ஆகிய பெயர்களைப் பெற்று விளங்குகின்றன. துறைச் சார்ந்த பாடத்தில் கலித்துறை, குறள்வெண் செந்துறை, கட்டளைக் கலித்துறை, கலிமண்டிலத் துறை, கோவைக்கட்டளைக் கலித்துறை, ஆசிரியத் துறை, வஞ்சித் துறை என்று பல துறைப் பாவின வகைகளையும், அவ்வகைப் பாடல்களையும், அடுத்து, தொடக்கத்தில் குறிப்பிட்டப் பா வகைகளான இம்மூன்று பா'வினங்களில், எளிய முறையில் யாப்பறிவோம் என்ற முதற் பகுதியில் வெளி விருத்தம் என்னும் வெளி மண்டிலம் பற்றியும் விரிவாக எடுத்துக் காட்டுப் பாடல்களுடன் பயின்றோம்.

இப்பொழுது இரண்டாம் பகுதியில் இப் பாடத்தில் வெண்டுறையைப் பற்றிப் பயின்று பயிற்சி எடுப்போம். வெண்டுறைப் பாடலானது மூன்றடிக்குக் கீழ்க் குறையாமலும், ஏழடிக்கு மேல் கூடாமலும் அமையும். மூன்றடிக்கு மேல் ஏழடிக்குள் நான்கடிகள், ஐந்தடிகள், ஆறடிகள் என்றும் பாடலடிகள் அமையலாம். முதலடிக்கடுத்துப் பின்னர் வரும் அடிகளின் சீர்கள் குறைந்து வரும். மூன்றடியில் அமைந்த பாடலென்றால் முதலடி ஆறு சீர்களில் அமைந்து, பின்னால் வரும் இரண்டடியும் சீர்கள் குறைந்து அளவொத்து அளவடியாக நிறைவு பெறும்.

இவ் வெண்டுறைப் பாடலானது பெரும்பான்மையாகக் காய்ச் சீர்களிலும், சிறுபான்மையாக இயற்சீர்களான ஈரசைச் சீர்களிலும் அமையும். இதனால், இப் பாடலானது வெண்டுறையாயிற்று. இவ் வெண்டுறைப் பாடலானது ஓரொலிப் பாடலாகவும், வேற்றொலிப் பாடலாகவும் இரண்டு வகையில் அமையும். அதாவது, முதலில் வரும் சில அடிகள் ஓர் ஓசையில் வருவதால் ஓரோசை

என்றும், பின்னால் வரும் சில அடிகள் வேற்று ஓசையில் வருவதால் வேற்றொலி ஓசை என்றும் அழைக்கப்படுகின்றன.

பாடல் முழுவதும் எல்லா அடிகளும் ஒரே மாதிரியான ஓசையில், எல்லாச் சீர்களும் ஒரே மாதிரிச் சீர்கள் ஒரே அளவில் பாடல் அமைந்தால் அது ஒரொலி வெண்டுறை யாகும். ஒரே பாடலில் முதலில் சில அடிகள் ஓர் ஓசையில் ஒரே மாதிரிச் சீர்கள் ஒரொலியிலும், பின்னர் வரும் சீர்கள் வேற்று ஓசையில் வேறு மாதிரிச் சீர்களும் வந்தால் இது வேற்றொலி வெண்டுறை எனப்படும்.

மூன்றடிப் பாடலென்றால் முதலடியில் ஆறு சீர்களும், பின்னர் இரண்டடிகள் நான்கு நான்கு சீர்களைக் கொண்டு இம்மூன்று அடிகளும் ஒவ்வோரடியும் முடியும் ஈற்றுச் சீர் ஒரே ஓசையில் முடிந்தால் இது ஒரொலி வெண்டுறை யாகும். இதேபோல், நான்கடிப் பாடலென்றால் முதல் இரண்டடி ஆறு சீர்களும், இவ்விரண்டு அடிகளும் முடியும் இடத்தில் ஓர் ஓசையும், பின்னர் வரும் இரண்டடியும் அளவொத்து நான்கு நான்கு சீர்களைக் கொண்டு பாடலின் ஈற்றசை வேற்று ஓசையில் முடிந்தால் இது வேற்றொலி ஓசையும் பெற்று வந்த வெண்டுறை எனப்படும்.

இவ்வாறு ஐந்தடிப் பாடலென்றால் முதல் மூன்றடிகள் ஆறாறு சீர்கள் அமைந்த ஒரோசையாக ஈற்றுச் சீர் முடிந்தால் இது ஒரொலியாகவும், மற்ற இரண்டடிகள் நான்கு நான்கு சீர்கள் பெற்று வந்து, வேற்றோசையில் முடிந்தால் இது வேற்றொலியாகவும் வந்த வெண்டுறை எனப்படும். இதேபோல், ஆறடிப் பாடலில் முதல் நான்கடி ஆறாறு சீர்கள் கொண்டு ஒரொலியாகவும், பின் வரும் மற்ற இரண்டடிகள் நான்கு நான்கு சீர்கள் கொண்ட வேற்றொலியாகவும், ஏழடிப் பாடலென்றால் முதல் ஐந்தடி ஆறாறு சீர்கள் கொண்டு ஒரொலியில் முடிந்தால் அது ஒரொலியும், பின்னர் வரும் இரண்டடிகள் நான்கு நான்கு சீர்கள் பெற்று வேற்றொரு ஒலியில் முடிந்தால் இது வேற்றொலியும் வந்து ஒரொலியும் வேற்றொலியும் கலந்து பயின்று வந்த வெண்டுறை எனப்படும்.

ஒரு பாடலில் ஏழடிக்குள் எத்தனை அடிகள் வேண்டுமானாலும் வரலாம். வந்தாலும் அத்தனை அடிகளும் ஒரெதுகைப் பெற்று வரும். அடி தோறும்

எத்தனை சீர்கள் வேண்டுமானாலும் பெற்று வந்தாலும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமைந்து வரும். ஆறு சீர்கள் கொண்ட அடிதன்னில் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் ஐந்தாம் சீருக்கும் என்று மூன்று சீர்களிலும் பொழிப்பு மோனை அமைந்தால் மிகச் சிறப்பு.

ஒரொலி வெண்டுறை என்னும் மூன்றடிக்கோர் எடுத்துக் காட்டுப் பாடலைக் கீழே காண்போம்:

(மூன்றடியில் ஈற்றடி இரண்டும் இரண்டிரண்டு சீர்கள் குறைந்து வந்த ஒரொலி வெண்டுறை.)

"வேர்க்காத கார்முகிலும் விளைந்துமே பேருக்காய் விண்ணில் என்னபயன்?
நீர்தன்னை அருந்திடா நிலத்தால் என்னபயன்?
வேர்பிடிக்கா மரமிருந்தால் விளைந்துமே என்னபயன்?"

-நெருப்பலையார்.

இப்படி **என்ன பயன் என்ன பயன்** என்றே ஒரோசையில் மூன்றடியும் முடிந்து வந்ததால் இது ஒரொலி வெண்டுறை ஆயிற்று.

(நான்கடியில் அறு சீர்கள் கொண்ட இரண்டடியும், நான்கு சீர்கள் கொண்ட இரண்டடியும் கொண்ட வேற்றொலி வெண்டுறை. கீழே காண்போம்:)

"விடியாத விடுதலையும் விடிந்திடவே வேண்டுமென்று வேட்கையுங் கொண்டுமே
அடிமேலே அடியடித்து அடிமைதன்னை அணுவளவும் இல்லா தோட்டிட,
வடியாத துயரமெல்லாம் வடிந்திட எதிர்த்துதான்
அடிமைநிலை அகற்றுவோம் அனைத்திலும் வீறுடன்!"

-நெருப்பலையார்.

மேலே உள்ள பாடல்களில் சீர்கள் மிகுந்தோ குறைந்தோ வராமல் நான்கு நான்கு சீர்கள் கொண்ட அளவடியில் நான்கடியில் அமைந்து வந்தபோதும், நான்கடியும் ஒரொலியிலோ அல்லது வேற்றொலியிலோ அமையாமல் ஒவ்வோரடியிலும் தனித்தனி ஓசையில் நான்கு ஓசைகள் பெற்று வந்ததால் இப்பாடல் வேற்றொலி வெண்டுறை ஆயிற்று.

(ஐந்தடியில் ஈற்றடி இரண்டும் இரண்டிரண்டு சீர்கள் குறைந்து வந்த, வேற்றொலி வெண்டுறை. முதல் மூன்றடி ஒரொலியும் பின்னர் இரண்டடிகள் வேற்றொலியும் பயின்று வந்த வேற்றொலி வெண்டுறை கீழே காண்போம்.)

"பெருவிருப்பம் எல்லாரும் பெரிதுவக்கக் கொள்கின்றார்; தேவையும் என்ன?

அருகாத பெரும்விருப்பால் அனைத்தையுமே அடைந்தாலும் வாழ்வாயா என்ன?

இருப்பதற்கே வழியின்றி இறந்துமேதான் போவோமென் றுணர்வாயா என்ன?
உருவத்துள் ஒளிந்திருக்கும் உயிர்போல மனத்துள்ளே
பெரும்விருப்பா? விட்டொழிப்பாய் உலகம்பார் மனத்துள்ளே!"

-நெருப்பலையார்.

*மேலே உள்ள ஐந்தடிப் பாடலில் முதல் மூன்றடிகளில், **என்ன, என்ன** என்று ஓரொலியிலும், அடுத்த இரண்டடிகளில், **உள்ளே, உள்ளே** என்று வேற்றொலியிலும் முடிந்து இரண்டொலியும் பயின்று வந்த ஐந்தடி வெண்டுறை ஆயிற்று.*

(ஏழடியில் ஐந்தடி அறுசீர்கள் கொண்டு, ஒழுகும் ஓரோசையும், பின் வரும் இரண்டடியும் நான்கு சீர்கள் கொண்டொழுகும் வேற்றோசையும் பயின்று வந்த வெண்டுறை கீழே காண்போம்.)

"விலைக்கொடுத்து நீர்காற்றை விழைந்துவாங்கல் விடுதலையாய் ஏற்க வாகும்?
கலையென்ற பெயராலே காட்டிவுடல் பணம்பறித்தல் விடுதலையாய் ஏற்க வாகும்?
வலைவீசி உழைப்பவரின் வாழ்வினையும் களவாடல் விடுதலையாய் ஏற்க வாகும்?
உலைப்போல மனங்கொதிக்க உணவுதரும் உழவர்க்கும் இலாநாட்டை ஏற்க வாகும்?
நிலைமாறி அரசியலார் மக்களதின் நலன்திருடல் விடுதலையாய் ஏற்க வாகும்?
கொலைக்களமாய் இருக்கின்ற விடுதலையால் விடியலில்லை;
விலைக்கொடுத்து வாங்குகிற விடுதலையால் விடியலில்லை!"

-நெருப்பலையார்.

*மேலே ஏழடியில் அமைந்த எடுத்துக்காட்டுப் பாடலில் ஐந்தடி தோறும் பெற்று வந்த அறுசீர்களில் ஆறாவது சீரான ஈற்றுச் சீர் ஒவ்வோரடியிலும், **வாகும், வாகும் -** என்று ஓரோசையில் முடிந்து, கீழேயுள்ள இரண்டடிகள் நான்கு நான்கு சீர்கள் கொண்ட அளவடியாக வந்து ஈற்றுச் சீர், **இல்லை, இல்லை-** என்றே வேற்றோசையில் முடிந்து வேற்றொலி வந்துள்ளன. ஆக, ஓரொலியும் வேற்றொலியும் இரண்டொலியும் பயின்று வந்த வெண்டுறை இதுவாகும்.*

இனி அடுத்த பாடத்தில் ஒரு பொருளின் மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசையும், ஒரு பொருளின் மேல் ஓரடுக்கி வந்த ஆசிரியத் தாழிசையும் எடுத்துக் காட்டுப் பாடல்களுடன் பயில்வோம்.

அலெக்ஸாண்டரை நிறுத்திய யானைகள்: தனநந்தரும், சம்ஸ்கிருதத்தின் விடியலும்:

பேரருளாளர் முனைவர் J இரவிக்குமார் ஸ்றீஃபன் G.

நிறுவனர்,
திராவிட மறுமலர்ச்சி மய்யம்

''திராவிட வலிமை முறியடிக்கப்பட்டதும், சம்ஸ்கிருதம் ஒற்றுமையின் மொழியாக உருவெடுத்தது''

*நந்த வம்சத்தின் இறுதி அரசர்களில் ஒருவராக நினைவுகூரப்படும் *தனநந்தர்*, வடஇந்தியாவின் பெரும் பகுதிகளை ஆட்சி செய்த திராவிட அரசர் ஆவார். அந்நாள்களில் தென் ஆசியாவின் வடமேற்குப் பகுதிகள் வெளிநாட்டு படையெடுப்பாளர்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தன. நாட்டைப் பாதுகாக்கத் தனநந்தர் தனது பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்த வேண்டியிருந்ததால், மக்களிடம் அதிக வரி விதிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். இந்த வரிவிதிப்பு விமர்சனத்துக்குள்ளான போதிலும், அது நாட்டை அந்நிய படையெடுப்பாளர்களிடமிருந்து காக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப் பட்டதாகும். _ஆரிய நூல்கள் அவரை ''மகாபத்மா'' என அழைக்க, கிரேக்க-ரோம குறிப்புகள் அவரை ''அக்ரம்மெஸ்'' அல்லது ''ஜாந்த்ரம்மெஸ்'' என பதிவு செய்துள்ளன.*

*தனநந்தரின் மிகப்பெரிய இராணுவ வலிமை *அவரது யானைப் படை* ஆகும். மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்த யானைகளைப் போருக்கு பழக்கி பயன்படுத்தி, அவர் மிகப் பெரிய யானை படையணியை உருவாக்கினார். ஆரிய அரசர்கள் பெரும்பாலும் குதிரைப் படையில் நம்பிக்கை வைத்திருந்த நிலையில், தன நந்தருக்கு இந்த யானைப் படை அவருக்கு போரில் தனித்துவமான முன்னிலை கொடுத்தது. 20,000*



குதிரைப்படை, 2,00,000 காலாட்படை, 2,000 தேர்கள், 3,000 யானைகள் கொண்ட பெரிய படையுடன், அவர் பல ஆரிய அரசர்களை வீழ்த்தி, தலைநகரான *பாடலிபுத்திரத்தை (இன்றைய பாட்னா, பீகார்) * தனது ஆட்சிக்குள் கொண்டு வந்தார்.

அவரது யானைப் படையின் வலிமை எவ்வளவு பெரியதாக இருந்தது என்றால்; அலெக்சாண்டரின் படைகள் சிந்து நதியை அடைந்தபோது, தென் கிழக்கு கரையில் அமைந்திருந்த மிகப்பெரிய யானைப் பாளயங்களைப் பார்த்து, ஆற்றைக் கடக்கத் தயங்கினர். யானைகளை நல்லமுறையில் பயன்படுத்திய தனநந்தர், இந்தியாவில் வெற்றிகளை மட்டுமல்லாமல், உலக வரலாற்றின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் அலெக்சாண்டர் படைகளின் முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்தினார்.

தனநந்தரின் பிறப்பும் வியப்புமிக்கது. இன்றைய மகாராஷ்டிராவின் நாண்டேட் பகுதியில் *முடி வெட்டும் தொழிலில் ஈடுபட்ட குடும்பத்தில்* பிறந்த அவரின் சகோதரர்களும், அவரும், வடஇந்தியாவின் அரசர்களாக உயர்ந்தனர். ஆரிய அரசர்கள் ஆட்சி செய்த சூழலில், இது திராவிட ஆன்மாவின் இயக்கநிலை மற்றும் எழுச்சியின் சின்னமாக அமைந்தது.

மேற்கோள்

Richard Salomon (1998). Indian Epigraphy: A Guide to the study of Inscriptions in Sanskrit, Prakrit and the Other Indi-Aryan Languages. Oxford University Press. Pp. 239-240

ISBN: 978-0-19-509984-3

திருச்சி மாவட்டத்தில் ஆங்கிலேயர்கள் காலத்தில் நெல் சாகுபடி

வி. குணசேகரன்

வேளாண் துறை அதிகாரி (ஓய்வு)
சேலம்.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்த மண்ணில் பல நாகரீகங்கள் தோன்றி வளர்ந்து வந்தன. எந்த ஒரு நாகரீகமும் வளமான ஆற்றங்கரையோரங்களில் மட்டுமே செழித்து வந்தது.

மொழியும், நாகரீகமும் செழித்து வளர வளமான உணவு தேவை. கடந்த நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த மக்களின் உணவுத் தேவை எவ்வாறாக இருந்தது என்பது பற்றியும், விவசாயிகள் பயன்படுத்திய நெல் ரகங்கள், அவற்றை சாகுபடி செய்த முறைகள் பற்றியும் பல வியத்தகு குறிப்புகள் 1907ம் ஆண்டு அப்போதைய ஆட்சியர் சர்.எம்மிங்வே என்ற ஆங்கிலேயரால் சென்னை மாநில அரசுப்பதிவிதழ் - திருச்சிராப்பள்ளி (மதராஸ் டிஸ்டிரிக்ட் கெசட்டியர்-திருச்சிராப்பள்ளி) யில் உள்ளன.

பருவங்கள் : *திருச்சி மாவட்டத்தில் நெல் ரகங்கள் சம்பா, கார் என்ற இரு பட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டன. சம்பா, 5-6 மாத வயதுடையது. கார் பட்ட ரகங்கள் 3-4 மாத வயதுடையன.*

கார் பட்டமானது, கார் மற்றும் குறுவை என்றும், சம்பா பட்டமானது சம்பா, ரலன், பிசானம் மற்றும் வங்கி என்ற பிரிவுகளாக இருந்தது. வெள்ளைக்கார், மட்டைக்கார் சடைச்சம்பா, பின்சம்பா என்ற ரகங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. தில்லைக்கட்டை மற்றும் செம்பலை போன்ற ரகங்கள் திடீர் வெள்ளத்தினை தாங்கி வளரும் தன்மை படைத்தவை. நெல்லூர் மற்றும் மிளகுச் சம்பா ரகங்கள் அதிக விலை பெற்றவை. பொதுவாக கார் ரகங்கள் தரம் குறைந்த ரகங்களாக கருதப்பட்டது. இவற்றின் விலையும் ஒரு கலம் நெல்லுக்கு 4-8 அணாக்கள் குறைவாகும்.

விதைப்பு முறை : *கார் நெல் நேரடி விதைப்பாகவும் சம்பா நாற்றுவிட்டும் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. உடையார்பாளையம் தாலுக்காவில் பெரும்பாலும் வரவிதைப்பாகவே நெல் சாகுபடி செய்யப்பட்டது. குளித்தலையின் தெற்கு பிர்க்காவிலும் பெரம்பலூரின் ஏரிசாகுபடிப்*

பகுதியிலும் நாமக்கல்லின் காட்டு நீரோடைப் பகுதிகளிலும், நெல் வர விதைப்பாகவே சாகுபடி செய்யப்பட்டது.

உழவு : ஆரம்பகால மழைக்குப் பிறகு, சித்திரையில் ஆழ உழவு (ஏறத்தாழ 5-6 முறை உழவு) செய்யப்பட்டது. இந்தப் பணிக்கு 2 மாத காலம் பிடித்தது. இதனால் களை முற்றிலுமாக அழிக்கப்பட்டது. அடிமண்ணின் சூடு தணிக்கப்பட்டது, கட்டிகளும் உடைந்தது. ஆட்டுக்கிடை மற்றும் மாட்டுக்கிடை வைக்கப்பட்டது. மேலும் மாட்டுச் சாணம், சாம்பல் மற்றும் ஏரி வண்டல் வயல் முழுவதும் இரைக்கப்பட்டது.

விதைப்பு: ஆடி மாத முதல் மழைக்குப் பிறகு, ஊறவைக்கப்படாத விதைகள் வயல் முழுவதும் விதைக்கப்பட்டது. பெரம்பலூர்ப் பகுதியில் ஒரு பங்கு நெல்லிற்கு 1 அல்லது 2 பங்கு கம்பு கலந்து விதைக்கப்பட்டது. உடையார்பாளையம் பகுதியில் நெல் விதைத்த பின் உழவு கொண்டு மேலாக ஓரிரு முறை உழவு செய்யப்பட்டது. களைக்கொத்துக் கொண்டு விதைத்த பின் ஒரு மாத இடைவெளியில் இருமுறை களையெடுக்கப்பட்டது. உடையார்பாளையம் பகுதியில் பல்லுக்கலப்பை கொண்டு களையெடுக்கப்பட்டது.

பொதுவாக வருடத்திற்கு ஒரு போகம் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டது. சம்பா பயிர் ஆடியில் விதைக்கப்பட்டு தையில் அறுவடையாகும். துறையூர்ப் பகுதியில் ஓரிரு மாதங்கள் கழித்து விதைப்பு செய்யப்பட்டது. திருச்சியின் சில பகுதிகளிலும் முசிறி மற்றும் நாமக்கல்லில் உள்ள மேட்டு நிலங்களில் கார் அல்லது குறுவை ரகங்கள் சித்திரைக் காலவடி (ஏப்ரல் -சூன்) பட்டத்திலும்,

சம்பா ரகங்கள் புரட்டாசியிலும் சாகுபடி செய்யப்பட்டன. வருடத்திற்கு இரண்டு போகம் விளைய மாரி என்ற ஆனிப்பட்டமும், கோடை என்ற கார்த்திகைப்பட்டத்திலும் குறுகிய கால நெல் ரகங்கள் விளைவிக்கப்பட்டன. கோடையில் கார் ரகங்கள் விளைந்தால் அவை கோடைக்கார் என்றும் மழைக்காலத்தில் கார் ரகங்கள் விளைந்தால் அவை மாரிக்கார் என்றும் அழைக்கப்பட்டன.

காவிரிப் பாசனப்படுகைப் பகுதியான குளித்தலை மற்றும் முசிறிப் பகுதியில் இரண்டு போகம் சம்பா ரகங்களைப் பயிரிட்டார்கள். முதல் பயிர் மாசியிலும் இரண்டாவது பயிர் ஆடியிலும் சாகுபடி செய்யப்பட்டது. திருச்சி, கரூர் மற்றும் நாமக்கல் பகுதியில் இரண்டு வருடத்திற்கு 5 போகம் நெல் விளைவிக்கப்பட்டது. முதல் போகம் வைகாசியிலும், இரண்டாவது போகம் புரட்டாசியிலும் மூன்றாவது போகம் மாசியிலும் அடுத்த போகங்கள் ஆடி மற்றும் புரட்டசியிலுமாக விளைந்தன.

நாமக்கல்லில் 6 மாத ரலன் (ரகம்-பருவம்) பயிர்க்கு பதில் குறுகிய மனக்காட்டை என்ற ரகம் விளைவிக்கப்பட்டது. பெரம்பலூரில் சம்பா ரகங்கள் ஆடியிலும், குறுகியகால ரகங்களான மானாவாரி ரகங்கள் தையிலும் விளைந்தன.

ஒரே போகம் மட்டும் நெல் விளையும் பகுதிகளில் அடுத்த பயிராக எள் அல்லது அதனுடன் அவுரி போன்றவை கலந்து சாகுபடி செய்யப்பட்டன. சில சமயம் இருபோகம் நெல் சாகுபடி செய்யப்பட்ட பகுதியில் வயல் பயறு என்ற பயறுவகை ஒரு முறை சாகுபடி செய்யப்பட்டது.

நாற்றங்கால் : நிலம் நன்கு உரமிடப்பட்டு உழவு செய்யப்பட்டு மண்வெட்டி மற்றும் பரம்பு கொண்டு சமப்படுத்தப்படுகிறது. விதைகள் நன்றாக ஊறவைக்கப்பட்டு விதைக்கப்பட்டன. விதைத்த பின்னர் அரை அங்குல அளவிற்குத் தண்ணீர் விடப்பட்டு அடுத்த நாள் சிறு வாய்க்கால் (தோண்டிக்கால்) ஏற்படுத்தி மீதமுள்ள தண்ணீர் வடிக்கப்படுகிறது. மூன்றாம் நாள் பாலாடை உயரத்திற்கு நீர் பாய்ச்சப்பட்டு பின்னர் வடிக்கப்படுகிறது. இது போன்று ஒரு வாரம் செய்யப்படுகிறது.

காகம் கால் நுழையும் அளவிற்கு விரிசல் ஏற்படுமாறு காயவிட்டுப் பின்னர் தண்ணீர் நாமக்கல் பகுதியில் பாய்ச்சப்படுகிறது. அடுத்த ஒரு மாதம் வரை ஒரு அங்குல அளவிற்கு தண்ணீர் விடப்படுகிறது. பின்னர் அதிகளவு தண்ணீர் கதிர் உருவாகும் பருவம் வரை விடப்படுகிறது. கதிர் உருவான பின் தண்ணீர் விடப்படுவதில்லை. ஆறு முதல் எட்டு வார வயதில் வயலில் விதைக்கும் போது அதிகளவு விதைகள் விழுந்த இடங்கள் நெற்பயிர் அதிகமாக உள்ள இடங்கள் கையினால் களையப்படுகின்றன.

சாதரணமாக நாற்றுத் தயாரிக்கும் முறை சேற்று நாற்று எனப்படுகிறது. லால்குடி மற்றும் பெரம்பலூர்ப் பகுதியில் வர அல்லது புழுதி நாற்று தயாரிக்கப்படுகிறது. சேற்று நாற்றில் நாற்றங்கால் நன்கு உழவு செய்யப்படுகிறது, விதையும் ஊறவைக்கப்பட்டு விதைக்கப்படுகிறது. புழுதி நாற்றில் நாற்றங்கால் மட்டும் உழவு செய்யப்பட்டு வர நெல் விதைக்கப்டுகிறது. புழுதி நாற்றிற்கு குறைந்த அளவே தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது.

இரண்டாம் கொம்பு அல்லது 3ம் கொம்பு விதைகள் விதைப்பிற்கு பயன்படுத்தப்பட்டன. விதைகள் 12 மணி நேரம் ஊறவைத்து 18 மணிநேரம் வடித்து அப்படியே விடப்பட்டது. மூன்றாம் கொம்பு விதைகளைப் பெற 24 மணி நேரம் ஊறவைத்து 12 மணி நேரம் அப்படியே விடப்படுகிறது. இரண்டாவது முறையில் நெல் வேகமாக முளைப்பதாகக் கண்டறிந்தார்கள்.

உரமிடல்: 1879ம் ஆண்டு சி.பென்சன் என்பவரின் குறிப்புகளில் மிகக் குறைந்த அளவே உரங்கள் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் 1900ம் ஆண்டில் உரங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன; கால்நடைகளின் கழிவுகள், ஆட்டுக்கிடை, பன்றிகளின் சுழிவு. பசுந்தாள் உரங்கள், பசுந்தழை உரங்கள் போன்றவையே பயன்படுத்தப்பட்டன. கொழிஞ்சி மற்றும் காட்டு அவுரி போன்றவை சேலம் மற்றும் கோவை மாவட்டத்திலிருந்து அதிக அளவில் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டன. ஆவாரம் மற்றும் வாதநாரணயன் இலை பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. பயிர் இல்லாத வயல்களில் வாத்துக்களை மேயவிட்டு அவற்றின் எச்சங்கள் உரங்களாக்கப்பட்டன. ஏரி வண்டல், குளத்து வண்டல் மற்றும் ஆற்று வண்டல் போன்றவை மிகவும் அதிகமாக பயன்படுத்தப்பட்டது. திருச்சி மற்றும்

கரூருக்கு அருகில் உள்ள பகுதிகளில் நகரக் கழிவு உரங்களும் வேம்பு மற்றும் கடலைப் பிண்ணாக்கு போன்றவைகளும் உரங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

நடவு வயல் தயாரிப்பு: நடவு வயல் தயாரிப்பில் வழக்கமான முறையே பல பகுதிகளில் பின்பற்றப்பட்டது. ஆற்றிலிருந்து அடித்து வரப்படும் வண்டல் நெல் வயல்களுக்கு வளம் சேர்த்துக் கொண்டிருப்பதாலும் வயல்களுக்கிடையேயான வரப்புகள் மிகவும் குறைந்த உயரம் கொண்டிருப்பதாலும் காவிரிப் படுகையில் நிலம் சமப்படுத்தியதற்குப் பின் உரமிட்டால் அடித்து செல்லப்படும் என்ற பயமிருந்ததால் நிலம் சமன்படுத்திய பின் உரமிடும் வழக்கம் இல்லை.

பயிர் இடைவெளி: நடவு செய்யப்பட்ட நெல் பயிர்களுக்கிடையோன தூரம் மற்ற மாவட்டங்களில் இருக்கும் தூரத்தினை விட சற்று அதிகம். நெருக்கி நட்டால் வயலுக்கழகு, தூர நட்டால் நெல்லுக்கு அழகு என்ற வழக்குகள் இருந்த போதிலும் நெல்லுக்கு நண்டு ஓட என்ற பழ மொழியின் படி இரண்டு நெல் பயிர்களுக்கிடையான தூரம் நண்டு புகுந்து வரும்படியான தூரமாக இருக்க வேண்டும் என்று நிர்ணயித்தார்கள்.

நீர் நிர்வாகம்: பயிர் நட்டவுடன் பதினைந்து நாட்களுக்கு பயிர் பச்சை கட்டும் வரை தண்ணீர் விடப்படுவதில்லை. நடவு வயலில் மேலுரம் இடும் வழக்கம் இல்லை. திருச்சி, பெரம்பலூர் மற்றும் கரூர்ப் பகுதியில் சாணம், சாம்பல், அவுரிச்செடி, புண்ணாக்குகள் ஆகியவற்றை வயலில் வீசும் வழக்கம் இருந்தது. கதிர் வருவதற்கு முன் ஒருமுறையாவது மழைபெய்ய வேண்டும் என்று விவசாயிகள் நம்பினார்கள். அவ்வாறு மழை பெய்யவில்லை யென்றால் பயிரானது அன்னை முகம் பாராத குழந்தையைப் போன்றது என்ற நம்பிக்கை விவசாயிகளிடையே இருந்தது. ஆனால் நாற்று நடும் போது அல்லது கதிர் உருவான பின் இலேசான மழை (ஊசித்தூத்தல்) ஊசிப் புழுக்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

பயிர்ச் சுழற்சி: *ஒவ்வொரு வருடமும் ரகத்தினை மாற்றும் வழக்கம் கொண்டிருந்தார்கள். நெல்லூர்ச் சம்பா மிகுந்த தொலைவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. பயிர்சுழற்சியை மிகவும் நுணுக்கமாக கையாண்டார்கள். உதாரணமாக வாழை, அல்லது வெற்றிலை மூன்று வருடத்திற்குப் பயிரிட்டு பின் நெல் பயிரிட்டு அதே பயிரினை மீண்டும் பயிரிடுவார்கள். வெற்றிலை நெல் கரும்பு என்ற பயிர்ச்சுழற்சியும் வழக்கமாகக் கையாளப்பட்டது. கரும்பு வழக்கமாக ஒரு வருடத்திற்கு மேல் பயிரிடப்படுவதில்லை. கரும்பிற்குப் பின் நெல் 3 வருடத்திற்கு சாகுபடி செய்யப்பட்டது. மஞ்சள் சாகுபடிக்கு பின் நெல் 2 வருடங்கள் சாகுபடி செய்யப்பட்டது.*

பழையன கற்றுத் தரும் பாடம்: *பருவங்களைப் பற்றியும் அவற்றிற்கான ரகங்களைப் பற்றியும் நம் முன்னோர்களின் அறிவு ஆங்லேயர்களால் மெச்சப்பட்டது. நடவுத் தொழில் நுட்பத்தில் தூர நட்டால் நெல்லுக்கு அழகு என்ற செய்தி தற்போது பிரபலம் அடைந்து வரும் செம்மை நெல் சாகுபடிக்கு ஒரு முன்னோடி எனலாம். களைகளைக் கட்டுப்படுத்த கோடை உழவு மற்றும் ஆழ உழவு, நீர் நிர்வாகம், பயிர்ச்சுழற்சி போன்ற நுட்பங்கள் எல்லம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பெற்ற அனுபவ அறிவின் நேர்த்தியான வெளிப்பாடு. இரும்புக் கலப்பை இல்லை, இயந்திரங்கள் இல்லை இரசாயன உரங்களின்றி பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெல் விளைந்தது. இலட்சக் கணக்கான மக்களுக்கு தம் உழைப்பு ஒன்றின் மூலம் மட்டுமே உணவு விளைந்தது நமக்கோர் விந்தை. உழவுக்கூறுகள் ஒவ்வொன்றையும் நவீன விஞ்ஞானிகளுக்கு இணையாக அறிந்து பயன்படுத்திப் பலன் பெற்ற நம் முன்னோர்களின் அனுபவம் நம் தலைமுறைக்கு மட்டுமன்று, நெடுங்காலத்திற்கும் எடுத்துக்காட்டாகும் என்பதே நிதர்சனம்.*

பேரருளாளர் முனைவர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் நினைவுநாளில் சிறு குறிப்புரை:

பேரருளாளர் முனைவர். J இரவிக்குமார் ஸ்றீஃபன் G.

நிறுவனர்,_
திராவிட மறுமலர்ச்சி மய்யம்

*இன்று நாம் *பிஷப் டாக்டர் ராபர்ட் கால்டுவெல் (1814–1891)* அவர்களை நினைவு கூறுகிறோம். முன்னோடி மொழியியல் அறிஞரான, இவரது ஆய்வுகள் தென்னிந்திய மொழிகளின் அறிவியல் அடிப்படையிலான புரிதலுக்கு வலுவான தளத்தை அமைத்தன. கால்டுவெலின் மாபெரும் படைப்பு, _"A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages"_ (முதல் பதிப்பு: 1856). மிகுந்த புலமை மற்றும் நுட்பத்துடன் *திராவிட மொழிகளான*— தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கோண்டி, குறுக், மால்தோ, ப்ராஹுயி மற்றும் பல திராவிட மொழிகளை ஆய்வு செய்து — இப் மொழிகள் *தனித்த மொழிக் குடும்பம்* என நிரூபித்ததார். இவ்வாய்வுக்காக *கிளாஸ்கோப் பல்கலைக்கழகம்* இவருக்கு *D Litt.* பட்டம் வழங்கியது.*

*கால்டுவெலுக்கு முன்பு, தமிழ் மற்றும் பிற தென்னிந்திய மொழிகள் சம்ஸ்கிருதத்தின் கிளைகளாக *தவறாக* கருதப்பட்டன. ஆனாலும் மிகுந்த ஒப்பீட்டு ஆய்வுகள் மூலம் கால்டுவெல், திராவிட மொழிகளுக்கு *தனித்துவமான அமைப்பு, சொற்களஞ்சியம் மற்றும் இலக்கண முறை* இருப்பதை உறுதிப்படுத்தினார். இது வெறும் மொழியியல் கண்டுபிடிப்பு மட்டுமல்ல; அது *ஒரு பண்பாட்டு மற்றும் நாகரிக அங்கீகாரம்*. திராவிட மொழிகளின் பண்டைய தன்மை மற்றும் தனித்துவத்தை அறிவியல் முறையில் ஆய்வு மேற்கொண்டு நிரூபித்து, அவற்றை பேசும் கோடிக்கணக்கான மக்களின் மரபுகளுக்கும் பெருமைக்கும் குரல் கொடுத்தார்.*

*இந்த நினைவு நாளில், *பேரருளாளர் முனைவர் கால்டுவெல்* அவர்களின் பங்களிப்பை நன்றியுடன் போற்றுறவோம். அவரது ஆய்வு இன்றும் மொழியியலாளர்கள், வரலாற்றாசிரியர்கள் மற்றும் பண்பாட்டு சிந்தனையாளர்களுக்கு ஊக்கமளிக்கிறது. திராவிட ஆய்வுகளின் அடித்தளமாக அவர் நிற்கின்றார்.*

*மேலும் *மொழி என்பது தொடர்புக்கலைக்கான காரணி மட்டுமல்ல; அது ஓர் அடையாளம் மற்றும் வரலாற்றின் தரவும் கூட என்பதை* நமக்குக் குறிப்பாக நினைவூட்டுகிறது.*

வள்ளுவர் குறள் - ஆத்திசூடி முறையில்

தேமொழி - நூல(றி)வுமுகம்

முனைவர் மு. முத்துவேலு

முதல் பதிவாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை

தமிழ் மரபு அறக்கட்டளை என்னும் பன்னாட்டு அமைப்பின் வெள்ளிவிழா சிறப்பு வெளியீடுகளில் ஒன்றாக வெளிவந்துள்ளது "வள்ளுவர் குறள் ஆத்திசூடி முறையில்" என்னும் நூலாகும்.

நூலைத் தொகுத்தவர் பைந்தமிழ் ஆய்வறிஞர் தேமொழி அவர்கள்.

ஆத்திசூடி என்பது தமிழ் அற நூல்கள் மரபில் ஒரு புதிய யாப்பு வடிவத்தில் அமைந்திருப்பதாகும்.

இது, அறக்கருத்துக்களைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரது உள்ளத்திலும் ஆழமாகப் பதிவு செய்வதற்கு ஏற்ற வடிவமாக அமைந்துள்ளது.

எனவே ஆத்திசூடி வடிவத்தை ஔவைக்குப் பின் பாரதியும் அதற்குப் பின்னர் பாரதிதாசனும் இன்னும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல புலவர் மக்களும் தாங்கள் கூற வந்த கருத்துக்களை அழுத்தமாக சொல்ல வேண்டும் என்பதற்கு ஏற்ற வடிவமான ஆத்திசூடியைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் ஆய்வறிஞர் தேன்மொழி அவர்கள் திருக்குறளை ஆத்திசூடி முறையில் தொகுத்துள்ளார்.

தமிழின் நெடுங்கணக்கு அகர வரிசைப்படிச் செய்திகளை வரிசைப்படுத்திக் கூறுகிற ஆத்திசூடி முறையினுக்கு ஏற்ப

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

எனத் தொடங்கும் முதல் குறளில் இவரும் தொடங்கியுள்ளார்.

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்பது இல்"

என்னும் அவா அறுத்தல் அதிகாரத்தில் வரும் 363-ஆம் குறளோடு இதனை நிறைவு செய்துள்ளார்.

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ.

எழுவது திருக்குறள்களைக் தேர்ந்தெடுத்துக் கொண்டு அமைத்துள்ளார். இந்த நூலில் கடவுள் வாழ்த்து, கல்வி, காலம் அறிதல்,அவாஅறுத்தல், புகழ், பெருமை, வாய்மை முதலிய அதிகாரங்களில் இருந்து இரண்டு குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்துள்ளார். ஏனைய 54 அதிகாரங்களில் இருந்து ஒரு குறள் என்ற விதத்தில் தேர்ந்தெடுத்து மொத்தம் எழுவது குறட்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

குறள் குறித்தும் வள்ளுவர் குறித்தும் சில சிறப்புச் செய்திகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குறள் பற்றிச் சில ஆராய்ச்சிச் செய்திகளை ஆய்வறிஞர் தொகுத்து வழங்கியிருப்பது மிகுந்த பயன்பாட்டுக்கு உரியதாகும்.

நூலில் ஆத்திசூடி என்பதற்கான இலக்கணத்தை அருமையாக எடுத்துரைப்பதும் மாணவர்களின் நலன் கருதி அமைந்தது எனலாம்.அறிவுரைகளை எடுத்துச் சொல்லுகிற பொழுது உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் அமைத்துச் சொல்லுகிறார். ஔவையின் ஆத்திசூடியில் இருந்து சில எடுத்துக்காட்டுகளையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

திருக்குறளில் இருந்து ஆத்திச்சூடி முறையில் செய்திகளைத் தொகுத்து தந்தவர்களைப் பட்டியலிடும்போது முனைவர் சேயோன் அவர்கள் 2001 இல் தொகுத்தளித்த திருவள்ளுவர் ஆத்திசூடியையும் குறிப்பிட்டு இருப்பது ஆய்வாளரின் ஆழ்ந்த புலமையையும் நேர்மையையும் உண்மைத் தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

அகரவரிசையில் திருக்குறளைத் தேர்ந்தெடுத்து அடுக்கித் தருகிற பணியை மட்டும் செய்யாமல்,

அந்தக் குறள்களுக்கு எளிய முறையில் உரையையும் வழங்கி உள்ளார்.

ஆய்வறிஞர் தேமொழி அவர்களின் எளிய உரைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

முயற்சித் திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

ஆல்வினை உடைமை குறள் 616

இந்தக் குறளுக்கு ஆசிரியரின் உரை பின்வருமாறு அமைகிறது.

"முயற்சி செய்தால் ஒருவர்க்குச் செல்வம் பெருகும். முயற்சி இல்லாவிட்டால் அவருக்கு வறுமையை வந்து சேரும் "

இரண்டாவதாக

பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்

வாய்மை அதிகாரம் குறள் 292

இதற்கான தேமொழியாரின் உரை :

பொய்யினால் நல்ல நன்மை ஏற்படக்கூடுமானால் அப்பொய்யையும் மெய்யாக ஏற்கலாம்.

இந்த வகையில் ஒவ்வொரு குறளுக்கும் எளிய எளிய உரை அமைத்திருப்பது சிறப்பாகும்.

இந்த உரைகளைக் காணும் பொழுது தேமொழியார் திருக்குறள் முழுவதற்கும் இது போன்ற எளியதோர் உரையை எழுத வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள் ஆகும்.

முனைவர் க.சுபாஷினி அவர்கள் தம் பதிப்புரையில், " பள்ளி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் எளிய முறையில் சில குறட்பாக்களைப் பிழையின்றிக் கற்றுக் கொள்வதற்கு இது சிறந்த முறை மட்டுமல்ல எளிமையானதும் கூட" என்று கூறியிருப்பது முற்றிலும் பொருத்தம் உடையதாகும்.

ஆய்வறிஞர் தேமொழியார் தம் எளிய உரையின்மூலம் படிப்பவர்களை திருக்குறளுக்குள் கைப்பிடித்து அழைத்துச் செல்கிறார்.எல்லோரும் திருக்குறளைக் கற்க இந்நூல் கைவிளக்காகத் துணை செய்யும் என்று நம்புகிறேன்.

நூலாய்வு - 6

வள்ளுவர் கற்பிக்கும் அறிவின் பெருமை

டாக்டர் புதேரி தானப்பன்

டில்லி.

நூல் பெயர்: உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள்

ஆசிரியர்: முனைவர் செ. இராஜேஸ்வரி

சந்திரோதயம் பதிப்பகம்

தொடர்பு எண்: 7010997639

110 பக்கங்கள்; விலை ₹. 250/-

"குறள் காட்டும் இன்பம்" என்பது இந்த நூலில் ஆறாவது கட்டுரையாக இருக்கிறது. தனிமனித இன்பம், குடும்பத்தினரின் இன்பம், சமூகத்திற்கு இன்பம், உடல் நலமும் இன்பமும், முனிவும் இணைவும், சிற்றின்பம் மற்றின்பம், மெய்யறிவும் இன்பமும் என்னும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உட் தலைப்புகளைக் கொண்டு இக் கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது.

உலகப் புகழ் பெற்ற நூலாக திருக்குறள் திகழ்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. தமிழகத்தில் இந்நூலைப் போற்றாத புலவரும் இல்லை; இந்நூற் கருத்துகளைக் கையாளாத நூலும் இல்லை. அவ்வாறே இந்நூல் மொழிபெயர்க்கப்படாத மொழியும் இல்லை.

இன்பம் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒரு தன்மையாகும். இந்த இன்பத்தை மனிதனால் மட்டுமே வெளிப்படுத்த முடியும். எது உண்மையான இன்பம் என்றால் அறத்தின் மூலம் கிடைக்கக்கூடியதே உண்மையான இன்பம் ஆகும்; மற்றவை யாவும் இன்பம் போல் தோன்றினாலும் அவை இன்பம் ஆகா என்பது வள்ளுவர் கூற்று. இக் கூற்றினைத் தெளிவுபடுத்தும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.



அறம் என்பது சிறப்பையும் கொடுக்கும்; செல்வத்தையும் கொடுக்கும் என்பதையும் அந்த அறமே ஒருவனுடைய தகுதியைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது என்பதையும் ஒரு குடும்பத்திற்கு குழந்தைகள் மிகவும் இன்றியமையாதவர்களாக விளங்குகிறார்கள்; அவர்களே அக் குடும்பத்தின் இன்பத்தை மிகுதியாக்குகிறார்கள் என்பதையும் திருக்குறள் வாயிலாக ஆசிரியர் எடுத்துச் சொல்லுகிறார்.

இக்காலத்து மக்களில் பலரும் அறத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அறத்தினால் வரும் சிறப்பையும் அறத்தினால் வரும் செல்வத்தையும் யாரும் பொருட்படுத்துவதில்லை. பணம் கொடுத்துச் சிறப்பைத் தேடிச் செல்கின்றனர். எந்த வழியில் செல்வம் சேர்ந்தாலும் மகிழ்ச்சியே கொள்கின்றனர். அத்தகையோர் இந்தச் சமுதாயத்தைப் பற்றியும் பொதுநலத்தைப் பற்றியும் கிஞ்சிற்றும் கவலைப்படுவதில்லை. தன்னலமுற்றோரே இச்சமுதாயத்தில் நிறைந்துள்ளனர். அவர்களே இச்சமுதாயத்தை ஆட்டிப் படைப்போராய் விளங்குகின்றனர்.

ஒரு தனி மனிதனுக்கும் குடும்பத்துக்கும் இன்பம் என்பது மிகவும் இன்றியமையாதது. அதேபோல் ஒரு சமுதாயத்திற்கும் அஃது இன்றியமையாத ஒன்றாக அமைகிறது. ஒரு சமுதாயத்தின் இன்பம் என்பது வறியார்க்கு ஒன்று ஈவதில் அடங்கியுள்ளது. இங்கே கொடுப்போர்க்கும் இன்பம்; பெறுவோர்க்கும் இன்பம். இதனை "ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுவதை எடுத்துச் சொல்லி உலகில் உள்ள அனைத்து மதங்களிலும் இது பின்பற்றப்படுகிறது என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

அதுமட்டுமின்றி இன்பம் என்பது வயிறு புடைக்க உண்ணாமல் குறைவாக உணவு உண்ணுதலாலும் ஏற்படுகிறது என்றும் ஒரு பெண் தன் கணவனிடம் பொய்க் கோபம் கொள்வதிலும் இனிமையான சொற்களைக் கூறுவதிலும் இன்பம் ஏற்படுகிறது என்றும் அந்த இன்பம் மறு பிறவியிலும் தொடரும் என்றும் கூறுகிறார்.

மூன்று வேளையும் மூக்கைப் பிடிக்க உண்பதையும் எந்நேரமும் பணத்தைப் பற்றியே சிந்திப்பதையும் மக்களை ஏமாற்றிப் பணம் சேர்ப்பபதையுமே 99 விழுக்காடு மக்களுக்கு வாழ்நாள் நோக்கமாக உள்ளது. இவற்றை யெல்லாம் சிற்றின்பம் என்று பெரியோர் கூறுகின்றனர். வாழ்நாள் முழுவதும் அறச் சிந்தனையுடன் வாழ்க்கை நடத்துவதுதான் உண்மையான இன்பமாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்; அதுவே பேரின்பமாகும்.

இவ்வாறு வள்ளுவர் கூறும் இன்பத்தின் பல வகைகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது . இன்றைய இளைஞர்கள் இத்தகைய கட்டுரைகளைப் படித்து, வள்ளுவர் கூறும் அறச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதற்கு இந்நூல் வழிவகுக்கிறது..

இந்த நூலின் ஏழாவது கட்டுரையாக , "திருக்குறள் மொழிபெயர்ப்பில் சமயப் பின்னணி" என்பது இடம்பெற்றுள்ளது. திருக்குறளைப் பலரும் பல மொழிகளில் பல்வேறு காலங்களில் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையாக மொழிபெயர்த்துள்ளனர்.

"மொழிபெயர்ப்பு என்பது மூலச் சொற்களை அப்படியே வேற்று மொழிக்குக் கொண்டுவருவது அல்ல; மூல மொழியின் கருத்துக்களைக் கொண்டுவருவது ஆகும்" என்னும் இந் நூலாசிரியரின் கருத்து மிகவும் சரி.

அந்த மொழிபெயர்ப்புகளில் ஒவ்வொருவரும் அவரவரது அறிவுக்கேற்பவும் அனுபவத்துக்கு ஏற்பவும் கலாசாரம், பண்பாட்டுக்கு ஏற்பவும் தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். கடவுள் ஏற்பாளர்கள் ஆன்மீகக் கண்ணோட்டத்திலும் கடவுள் மறுப்பாளர்கள் நாத்திகக் கண்ணோட்டத்திலும்

மொழிபெயர்த்துள்ளனர். அந்த வகையில் இங்கே, இந்தக் கட்டுரையில் திருக்குறள் மொழிபெயர்ப்பில் அமைந்துள்ள சமயப் பின்னணி குறித்து கட்டுரை ஆசிரியர் தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இது ஒரு சிறிய அளவிலான, மூன்று பக்கங்கள் மட்டுமே கொண்ட ஒரு கட்டுரை. இக் கட்டுரையில், திருக்குறளின் "கடவுள் வாழ்த்து" அதிகாரத்தில் உள்ள 'சேர்ந்தார்' என்னும் ஒரு சொல்லை மட்டும் இவர் ஆராய்கிறார்.

அதாவது, ஆங்கிலேய மொழிபெயர்ப்பாளர்களான ட்ரூ, ஜி. யூ. போப், எல்லீசு ஆகியோரின் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியுள்ள சொற்களை ஆராயும்போது அவற்றில் சமயப் பின்னணியின் தலையீடு இருப்பதாக அம்மையார் கருதுகிறார்.

சேர்ந்தார் என்னும் சொல் நான்கு குறள்களில் வள்ளுவர் கையாள்கிறார். அவை,

1) "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் " - (குறள் - 3)

2) "வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்" - (குறள் - 4)

3) "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார் " - (குறள் - 7)

4) "அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார் " - (குறள் - 8)

என்பனவாகும்.

இந்தச் சேர்ந்தார் என்னும் சொல்லுக்கு ஜி. யூ. போப், எஃப். டபிள்யூ. எல்லீசு, ட்ரூ ஆகியோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருள் சொல்லுகின்றனர். ஆம்.

'சேர்ந்தார்' என்னும் இச் சொல்லுக்கு,

ஜி. யூ. போப் அவர்கள், Gain என்றும்,

எல்லீசு அவர்கள், adore என்றும்,

ட்ரூ அவர்கள், United என்றும்,

மொழிபெயர்க்கிறார்கள் என்பதை அம்மையார் எடுத்துச் சொல்லுகிறார். இந்த ஒவ்வொன்றுக்குமான விளக்கத்தையும் தருகிறார். எல்லீசும் ட்ரூ வும் சமயப் பின்னணி உள்ள பொதுச் சொல்லைப் பயன்படுத்தி உள்ளனர். ஜி. யூ. போப், சமயப் பின்னணி இல்லாத பொதுச் சொல்லைப் பயன்படுத்தி உள்ளார் என்கிறார் நூலாசிரியர்.

அப் பொருள்களை அம்மையார் விளக்கிச் சொல்வது ஏற்புடைத்து எனலாம். அப் பொருள்களின் மூல வடிவம் இலத்தீன் மொழியில் என்னவாக இருக்கிறது; எபிரேய மொழியில் என்னவாக இருக்கிறது; கிரேக்க மொழியில் என்னவாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்லுகிறார். அந்த மொழிகளைத் தெரிந்தவர்களால் மட்டுமே இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

திருக்குறளில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் அந்த மொழிகளைப் பயின்று மேலும் ஆய்வு செய்ய இக் கட்டுரை ஓர் உந்துதல் சக்தியாக விளங்கும் என்பது திண்ணம்.

இது ஒரு சிறிய கட்டுரைதான். ஆனால் ஆழமான பொருள் பொதிந்த கட்டுரையாக விளங்குகிறது.

அடுத்த எட்டாவது கட்டுரை, "அறிவியல் நோக்கில் காமத்துப்பால்" என்பதாகும். வள்ளுவரின் காமத்துப்பால் என்பது இன்பத்துப்பால் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தக் காமம் என்ற சொல் இக்காலத்தில் விரும்பத்தகாத ஒரு சொல்லாகப் பார்க்கப்படுகிறது. உண்மையில் இது ஓர் அழகான சொல்லாகும். இந்தக் காமம் அல்லது இன்பம் அல்லது காதல் இல்லாவிடில் இவ்வுலகு இயங்காது. இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களும் தோன்றுவதற்கு இந்த இன்பம்தான் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது. அதனால்தான் ஆண் பெண் உறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு நமது முன்னோர்கள் சிவலிங்கம் என்னும் உருவ வழிபாட்டை நாம் வணங்கும் கடவுளாக வடிவமைத்துள்ளனர் என்பதை நாம் உணர வேண்டும்.

இந்நூலாசிரியர் முனைவர் இராசேசுவரி அம்மையார் பேராசிரியராகப் பணியாற்றியவர்; நிறைய கட்டுரைகளை எழுதியுள்ளார்; நல்ல கவிஞராக விளங்கும் இவர், நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்; பல ஆங்கிலக் கவிதைகளை மோழி பெயர்த்திருக்கும் இவர், பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். கடந்த இரண்டாண்டுகளாக, "தமிழணங்கு" என்னும் மாத இதழைச் செவ்வனே நடத்திவருவதோடு, "சக்தி" என்னும் இணைய இதழையும் நடத்தி வருவதனால் இதழாசிரியராகவும் விளங்குகிறார். பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்; இவை அனைத்தையும் கடந்து இவர் ஒரு சோதிடராகவும் திகழ்கிறார் என்பது சிறப்பு.

இத்தகைய சிறப்பான தகுதிகளுக்கு ஆரம் அணிவித்து அழகு படுத்துவதுபோல பல விருதுகளும் இவரைத் தேடி வந்து அழகுக்கு அழகு சேர்க்கின்றன. அம்மையார், இக்கட்டுரை தொடர்பாக, "உளவியல் அறிஞர்களின் கருத்துகளையும் சுரப்பிகளின் செயற்பாடுகளையும் அவற்றிற்கேற்ப உள்ள திருக்குறள் காட்சிகளையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதுவரை

யாரும் காமத்துப்பாலை உளவியல் நோக்கிலும் உடலியல் நோக்கிலும் இவ்வளவு அருமையாக எழுதியதில்லை. திருக்குறளை அறநூலாக மட்டுமல்லாமல் சுரப்பிகளின் அறிவியல் இயல்பை உணர்ந்து அதற்கேற்பத் திருவள்ளுவர் தந்துள்ளார் என்னும் வியப்பான செய்திகளை எடுத்துரைத்தமைக்கு முனைவர் இராசேசுவரிக்குப் பாராட்டுகள்" என்று இலக்குவனார் திருவள்ளுவன் தனது அணிந்துரையில் பாராட்டுவது சாலப் பொருத்தமாகும்.

பாலியல் வக்கிரத்தைத் தடுப்பதில் நமது உடலில் உள்ள ஒருவகைச் சுரப்புகளின் பங்கு என்ன என்பதை இக்கட்டுரை எடுத்துச் சொல்லுகிறது. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் ஈர்ப்புக்கும் காதல் நடவடிக்கைகளுக்கும் குறிப்பிட்ட சுரப்பிகளே காரணமாகும்; பாலியல் வக்கிரம், வன்முறை போன்ற செயற்பாடுகளுக்கும் இச் சுரப்பிகளே காரணமாகும்; பாலுணர்வுச் சுரப்பி என்ற சுரப்பு காதல் வேட்கையைத் தோற்றுவிக்கிறது என்னும் அறிவியல் உண்மையை இங்கே நாம் காண்கிறோம். மையல் சுரப்பி என்னும் சுரப்பி சுரக்கும் போது நமக்கு மிகவும் மகிழ்ச்சியான உணர்வு ஏற்படுகிறது என்கிறார். இதைத்தான் தொல்காப்பியர் இயற்கைப் புணர்ச்சி என்றும் மெய்யுறு புணர்ச்சி என்றும் அழைப்பதாக அம்மையார் கூறுகிறார். வள்ளுவரும் இதனையே,

"அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு

என்று கூறுவதாகவும் சொல்லுகிறார். ஆக, பாலுணர்வுச் சுரப்பி, மையல் சுரப்பி, களிப்புச் சுரப்பி, வளர்சிதைச் சுரப்பி, கடத்து அண்ணீரகச் சுரப்பி போன்ற பல்வேறு சுரப்பிகள் மனித உடலில் சுரக்கின்றன என்றும் அச் சுரப்பிகளின் சுரப்பால் ஆண், பெண் உடலில் காமம் தொடர்பான பல்வேறு உந்து சக்திகள் உடலில் ஏற்பட்டு அச் சக்திகளுக்கு ஏற்பப் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றும் இந்நூலாசிரியர் எடுத்துச் சொல்வதைக் காண்கிறோம்.

வள்ளுவரின் காமத்துப்பால் ஆண் பெண் உளவியலையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இந்த உளவியலை ஒவ்வொரு தலைவன், தலைவி வாயிலாகவும் நாம் காணமுடியும் என்பதை வெவ்வேறு குறள்கள் மூலம் ஆசிரியர் விளக்கிச் செல்வது பாராட்டக் கூடியதாக உள்ளது. "காதல் என்பது விருப்பத்தின் காரணமாக மனதில் தோன்றி உடம்பில் பரவி உறுப்புகளைத் தூண்டிவிட்டு, கலவியில் நிறைவுறும் ஓர் உணர்ச்சிப் பயணம் ஆகும்" என்ற கருத்துடன் இக்கட்டுரையை முடிப்பது அழகாக உள்ளது.

"வள்ளுவர் காட்டும் காதல் வாழ்க்கை" என்னும் ஒன்பதாவது கட்டுரை பழந்தமிழரின் காதற் சிறப்புகளை எடுத்துரைக்கிறது. நமது அக வாழ்க்கையில் நிகழும் ஒழுக்கங்கள் என்னும் செயற்பாடுகளை ஐந்து பெரும் பிரிவுகளாக நமது முன்னோர் பிரித்து, அவற்றை நில அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பகுத்துள்ளனர். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படுகிறது; காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படுகிறது; வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படுகிறது; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படுகிறது; வறண்ட நிலம் பாலை எனப்படுகிறது.

அந்தந்த நிலங்களுக்கு எனத் தனித்தனியே மக்களும் அந்த மக்களுக்கான தொழிலும் அவர்கள் வணங்குதற்குரிய தெய்வமும் அவர்கள் உண்ணும் உணவு, பருகும் நீர், அடிக்கும் பறை, இசைக்கும் யாழ், யாழுக்குரிய பண், அந்த நிலங்களுக்குரிய மரங்கள், பூக்கள், பறவைகள் முதலியனவும் விலங்குகளும் ஊர்களும் இன்ன பிறவும் பிரித்து வைக்கப்பட்டுள்ளன.

திருக்குறளின் காமத்துப்பால் அகவாழ்வைப்பற்றி எடுத்துரைக்கிறது. தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் பகுதியாக விளங்கி இது தமிழ் நாட்டு மக்களின் பண்பாட்டை பறைசாற்றுகிறது என்பதை ஆசிரியர் பல்வேறு குறள்களை எடுத்துக் காட்டி விளக்குகிறார். இப்பகுதியின் 25 அதிகாரங்களையும் அறிஞர் பெருமக்கள் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தைந்து அதிகாரங்களாகப் பிரித்துக் காண்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அடுத்து, புணர்தலின் பாற்படும் குறள்களின் அதிகாரங்களையும் பபிரிதலின் பால்டும் குறள்களின அதிகாரங்களையும் இருத்தலின் பாற்படும் குறள்களின் அதிகாரங்களையும் இரங்கலுக்குரிய குறள்களின் அதிகாரங்களையும் ஊடலுக்குரிய குறள்களின் அதிகாரங்களையும் ஐந்தைந்து அதிகாரங்களாக எடுத்துச் சொல்லுகிறார்.

வள்ளுவத்தில் சில குறள்கள் பெண்ணியம் சார்ந்த குரலாக ஒலிப்பதையும் அவற்றுக்குத் தூணாகத் தொல்காப்பியரின் நூற்பாவையும் எடுத்துக் காட்டுவது ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது.

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

	நூல்கள்	**விலை (Rs.)**
1.	*திருவிளையாடல் புராணக் கதைகள் (எளிய உரைநடையில்)*	*200*
கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்		
1.	*உன்னோடு உரையாடுதல்*	*100*
2.	*காதல் மொழி*	*200*
3.	*பார்வையில் பூத்த நிலா*	*100*
4.	*தேனடையும் வரலாறு*	*100*
5.	*நுண்கலை மருத்துவன்*	*200*
6.	*தொடரும் புழுதிக்கால்கள்*	*100*
முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்		
1.	*வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.*	*200*
2.	*எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்*	*200*
3.	*சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)*	*200*
4.	*வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட*	*200*
5.	*மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.*	*200*
6.	*எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி*	*200*
7.	*எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி*	*200*
8.	*ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.*	*200*
9.	*வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I*	*200*
10.	*நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]*	*200*
11.	*பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]*	*200*
12.	*இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.*	*200*
13.	*முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்*	*200*
14.	*இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.*	*200*
15.	*எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு*	*200*
16.	*படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு*	*200*
17.	Unique Fandom of MGR	*200*
18.	*எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்*	*200*
19.	*எம்ஜி.ஆர் படத்தில்சண்டைக்காட்சிகளின்சுவாரஸ்யங்கள்–I*	*200*
20.	*எங்க வீட்டுப்பிள்ளை*	*200*
21.	*எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்*	*200*

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	120
2.	இணையத் தமிழ்	150
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200
5.	கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)	200
6.	மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின்
சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1.	பண்பாட்டு நகர்வுகள் – தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு	200
2.	பெண் தெய்வ வழிபாடு	200
3.	தேவேந்திரன்	200
4.	மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)	200
5.	இரு நிலத்தில் திருமுருகன்	200
6.	முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)	200
7.	வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்	200
8.	யானைக்கடவுள்	200
9.	பெண் பூப்பின் புனித வழிபாடு	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின்

கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	பாடுபொருளும் பாசப்பொருளும்	250
2.	"பூ மர நிழலி"ன் களமும் காலமும்	200
3.	"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு	100
4.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் **கவிதையில் காதல்**	100
5.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்	200

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு

முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	எட்டுத்திக் கும் செல்வீர்	200
2.	அவன் கடவுளுக்கு நிகரானவன்	200
3.	செக்கச் சிவந்த ரோஜா	200
4.	கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"	200
5.	கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"	200

Tamil Classics in English – (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Agananooru	200
3.	Purananooru	200
4.	Naaladiyaar	200
5.	Aasaarakkovai	200
6.	Thiru Kutraala Kuravanji	200

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	குறுந்தொகைக் கவிதைகள்	*200*

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	*200*
2.	கவிதை மொழிபெயர்ப்பு	*200*
3.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் *(Co-author)*	*200*
4.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	*200*

தமிழ் இலக்கண நூல்

1.	தமிழில் வேற்றுமை உருபுகள்	*200*

சிறு கதை, கவிதை

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	*200*
2.	ரோஜா மொட்டு (சித்திரக் கவிதைகள்) - சத்யப்பிரபா	*200*

மாத இதழ்கள்

1.	தமிழணங்கு மாத இதழ்	*200*
2.	Love Thamizh	*500*

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

Moonstone Publication, Madurai

1.	Emerging Mallarism	*200*
2.	Festival of lord Indra	*200*
3.	Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)	*200*
4.	Re reading of Pallu literature	*200*
5.	Mallariyan Literature	*200*
6.	Frontyard without My Dad (Poem)	*200*

Poems of Er.Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari

[Moonstone Publication]

1.	Therapist of the Finest Art	*200*
2.	Following Dusty Feet	*200*

Other Books

1.	Concepts of Constitution - Dr.S. Kalai Arasu	*300*
2.	Aranyani By Vijeni (English Novel Part I & Part II)	*200*

சந்திரோதயம் பதிப்பகத்தின் வெளியீடுகள்

மதுரை 18, போன்: 7010997639













Design: Vimal

சந்திரோதயம் பதிப்பகம்

தமிழணங்கு மாத இதழை வெளியிடுவோர்:

இ. சதீஷ் ராஜ்குமார் (அட்வகேட்), சந்திரோதயம் அறக்கட்டளை,
3/422, தினமணி நகர், மதுரை 625 018,
Ph: +91 7871123226